# அரசாண்ட ஆண்டி

அண்ணாதுரை



# அரசாண்ட ஆண்டி

[ வரலாற்று ஓவியம் ]

அண்ணதுரை

பரிமளம்
பதிப்பகம்

விலை 1-50.

பரிமளம்
பதிப்பக
வெளியீடுகள்
சுவையும்
பயனும்
அளிப்பன.

22140

# நோக்கம்

பிரான்சு !—விசித்திரமான நாடு ! விபரீதமான நிலைமைகள் !

பிரான்சு ! அழகும் அவலட்சணமும், வீரமும் கோழைத்தனமும் சமரசமும் சதிச் செயலும், கலையும் கொலையும், காவியமும் கபடமும், செல்வமும் சீரழிவும், உலுத்தரின் உல்லாசமும் உழைப்போரின் பெருமூச்சும் — ஒன்றை ஒன்று அடுத்தடுத்து இருந்து வந்த நாடு.

பிரான்சு ! ஒரு மன்னனைப் பெற்றிருந்தது — அவனோ ! பறவைகளை வேட்டையாடும் பொழுதுபோக்கிலும், பாவையர்களைப் பொன் வண்டுகளாகக் கருதிக் களிப்புத் தேடுவதிலும் மூழ்கிக் கிடந்தான்.

பிரான்சு நாட்டுக்கு அரசியானாள் ஆன் என்னும் அழகி ! ஆட்சியிலேயும் இடம் கிடைக்கவில்லை, அழகுதனை விருந்தாகக் கொள்ள மன்னனும் முன்வரவில்லை !

பிரான்சு நாட்டைத் தமது கொலுமண்டபமாகக் கொண்டு கோலாகல வாழ்வு நடாத்தினர், பிரபுக்கள்.

பிரான்சு நாட்டில் அருளாலயங்கள் நிறம்ப ! அங்கு ஆண்டிகள் அரசோச்சினர்.

பிரான்சு நாட்டின் சுதந்திரம் பறிபோகக் கூடாது! பண்பு கெடக் கூடாது ! மதிப்பு மங்கிடலாகாது! இந்த நோக்கத்துக்காக, மக்கள் உழைக்க, ஓடாகிப்போக !

அரசாண்ட ஆண்டி தோன்றிட என்னென்ன தேவையோ அவை யாவும் இருந்தன, அன்றைய பிரான்சில்.

அரசாண்ட ஆண்டி ஒரு வரலாற்று நிகழ்ச்சி — கருத்தளிப்பது.

அரசாண்ட ஆண்டி என் கைவண்ணத்தைக் காட்டிடத் தீட்டியதல்ல, மக்கள் கருத்திலே தெளிவும் துணிவும் இல்லாமற் போனால், ஆட்சி எக்கேடு கெடும் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு எச்சரிக்கை.

அரசாண்ட ஆண்டி ஏதோ ஒரு வெளிநாட்டு விவகாரம் என்று எண்ணிவிடக் கூடாது—வரலாறு என்பது ஒரு பொது நூல்—சூழ்நிலை விளக்கம், விளைவு பற்றிய பாடம் பெறத்தக்க ஏடு, வரலாறு.

அரசாண்ட ஆண்டி எங்கும் கிளம்பலாம்! எப்போது வேண்டுமாயினும்!! மக்களின் விழிப்பற்ற நிலை எங்கு எப்போது காணப்பட்டாலும், அங்கு அவன்! ஆமாம்!

அரசாண்ட ஆண்டி இருந்த மட்டும், எதிர்த்திடக்கூட இயல வில்லை; மன்னனால்! பிரபுக்களால்! அருளாலயத்தினர்கூட!!

அரசாண்ட ஆண்டி, செய்த கொடுமைகள் யாவற்றுக்கும் கூறிய ஒரே விளக்கம்-எதுவும் எனக்காக அல்ல! அரசுக்காக! நாட்டுக்காக! என்பதுதான்!

அரசாண்ட ஆண்டி அரசுக்காக; பிரான்சுக்காக; என்ற சொற்களைத் திறம்படப் பயன்படுத்தி கொடுமைகளை கூசாமல் செய்து ஆதிக்க வெறியனாய் வாழ்ந்து பெரும் பொருள் தேடிக் கொண்டான்.

அரசாண்ட ஆண்டி போல ஆளவந்தார்கள் எவராயினும், தமது போக்குக்குக் காரணமாக, அரசுக்காக; நாட்டுக்காக! என்ற சொற்களை உச்சரிக்கக் கூடும். மக்கள் எச்சரிக்கையுடன் இருந்தாக வேண்டும்.

அரசாண்ட ஆண்டி அரசுக்காக! நாட்டுக்காக! என்ற சொற்களை மந்திரமாக்கி மக்களை மயக்கினான். அரண்மனை, மாளிகை, ஆலயம் இவற்றோடு நாடு முடிந்துவிடவில்லை. வயல் இருக்கிறது, வாய்க்கால் இருக்கிறது, பாதை இருக்

கிறது, பள்ளம் இருக்கிறது, தொழில் இருக்கிறது துயரம் இருக்கிறது......இந்த நாட்டுக்காக அல்ல, 'அரசாண்ட ஆண்டி' திட்டமிட்டது !

அரசாண்ட ஆண்டியின் பிரான்சு — மன்னன், அவனைச் சுற்றி வட்டமிடும் வல்லூறுகள், அவனுடைய விளையாட்டுக்காகப் பறந்திடும் பொன் வண்டுகள், இவை உள்ள அரண்மனை, மாளிகை, பூம்பொழில் — இந்த ஏற்பாட்டைப் பாதுகாக்க அமைந்துள்ள பாசறை, நீதிமன்றம், சிறைக்கூடம் இவை !

மன்னனுடைய மணிமுடி ஒளிவிட, ஏழையின் இரத்தத்தை 'அபிஷேகம்' செய்தான் அரசாண்ட ஆண்டி.

மக்கள் பதிலளிக்க நெடுங்காலம் பிடித்தது. அவர்கள் தந்த பதிலோ, பயங்கரமானது; மன்னனின் தலையை வெட்டிக்காட்டி, முழக்கமிட்டனர் மக்களுக்காக! பிரான்சுக்காக! என்று.

இதயம் இரும்பானால் எனும் மற்றோர் ஏடு, இதனை விளக்கிடும். இது நாட்டுக்காக என்று கூறிக்கொண்டு, அரசாண்ட ஆண்டி பற்றியது.

வெளி உலகத்துடன் தொடர்புகள் துரிதமாகவும் அதிக அளவிலும் வளர்ந்துகொண்டு வரும் இந்நாட்களில் பல்வேறு நாடுகளிலே இருந்த நிலைமைகள் நடைபெற்ற நிகழ்ச்சிகள் என்பவைகளை, நமது மக்கள் அறிந்தாக வேண்டும்.

அதற்கான ஆர்வத்தை எழச்செய்யவே, இதனை வெளியிடுகிறேன்.

வரலாறு—பள்ளிக்கூடத்திலே மட்டுமே இருக்க வேண்டிய ஏடு என்று எண்ணற்க ! மக்களாட்சி நடைபெறும் நாட்களில் வரலாறு ஒவ்வொருவர் கருத்திலேயும் தெளிவையும் துணிவையும் தரத் துணை செய்யும் நூலாகக் கொண்டிடல் வேண்டும்.

அரசாண்ட ஆண்டி எனும் இந்த ஏடு, அந்த நோக்கத்தின் விளைவே.

இனியும் நான் தடுத்து நிறுத்தி, நிற்கவைத்துப் பேசிக் கொண்டிருப்பது முறையல்ல — அதோ அழைக்கிறான் 'அரசாண்ட ஆண்டி.'

அண்ணாதுரை.

# அரசாண்ட ஆண்டி

"**லாரோகேல்**, கோட்டைக் கோமகள், கோமளவல்லி, இளமையும் எழிலும் ததும்பும் இன்பவல்லி.........தெரியுமே, மன்னு! தங்கட்கு............நினைவில்லையோ?"

"அவளா அமைச்சரே! அழகி. ஆமாம், நினைவிலிருக்கிறது—எவர் நெஞ்சிலும் பதியும் ஓவியம்! விதவை, அல்லவா?"

"ஆமாம் அரசே! விதவை! விருந்தாக வேண்டியவள்."

"கோலாகல வாழ்க்கையை வெறுப்பவள் போலும் அந்த வனிதாமணி. நமது கொலுமண்டபத்துக்கு வரத் தயங்கும் காரணம், வேறென்னவாக இருக்கமுடியும்."

"விழிமட்டுமல்ல, மன்னு! மங்கையின் சுபாவமே. மானுக்குள்ளதுபோன்றதே. ஒரு வகையான கூச்சம், அத்தகு ஆரணங்குகளிடம், பழகிவிட்டால், தொட்டால்

துவள்வதுகளிடம் கிடைக்கொணுத இன்பம் பிறக்கும். அவள் தங்கள் அவைக்குத் தேவையான உயிரோவியம். இந்த இடத்தின் அழகு, அவளால் வளரும், மிளிரும். பூந்தோட்டத்தில்தானே பூபதி! புள்ளிக்கலாப மயில் தோகையை விரித்தாடிடவேண்டும், பொட்டலிலா! லாரோகேல் கோட்டையின் ரமணி, தங்கள் பார்வையில் இருக்க வேண்டிய பாவை. மேலும், இங்கு இளித்துக் கிடக்கும் நங்கைகள் தங்கள் மனதிலே ஓர் சோர்வை உண்டாக்கி விட்டனர். உணர்கிறேன் மன்னு, உணர்கிறேன். அந்த உல்லாசி இங்கு உலவினுலே போதும், தென்றலின் இனிமை கிடைக்கும்."

"அமைச்சரே! அவள்தான் இங்கு வர மறுக்கிருளே!"

"மறுத்தால் என்ன! அவள் இங்கு வராவிட்டால் நாம், அங்கு போவது!!"

"நாமா!"

"ஆமாம்! இப்படி அல்ல; மாறுவேடத்தில்"

"வேடிக்கையாக இருக்கும்"

"மனதுக்குப் புதுவிதமான இன்பம் இறையே!"

"எனக்கும் கூட ஒரே சலிப்புத்தான்! கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன கீதங்கள்! கண்டு சலித்துப் போன நடனங்கள்! ஒய்யாரிகளின் சிரிப்பு. காதைக் குடைகிறது, புன்னகை பூத்த முகத்தழகி இல்லை—எங்கும் ஒரே சாயப் பூச்சு........."

"அதை உணர்ந்துதான், அரசே! லாரோகேல் கோட்டைக் கோமகளைத் தங்களுக்குக் காணிக்கையாக்கியே தீருவது என்று தீர்மானித்தேன்—திட்டமும் தயாராகிவிட்டது"

"திட்டம் தீட்டுவதிலே, உமக்குள்ள திறமையை அறியாத அரசுகள் உண்டோ, அமைச்சரே! ஆனுல் நமக்குள் பேசிக்கொள்வோம். இந்த ரசவல்லிகளின் சம்பந்தமான திட்டம் தீட்டுவதிலும் வல்லமை மிக்கவர் தாங்கள், என்பது எவருக்கும் தெரியாதல்லவா! நம்பக்கூட மாட்டார்கள்!!"

"ஆண்டிதானே, மன்னவா! ஆண்டிக்கு என்ன தெரியும், அழகிகளைப்பற்றி என்றுதான் கூறுவர்"

“சூட்சமம் தெரியாதவர்கள்!”

“சென்று, சில ஏற்பாடுகள் செய்துவிட்டு வருகிறேன். நாளை, பயணம்”

“புதிய போர்! அமைச்சரே! பொற்கொடியைப் பெற நடத்தப்பட இருக்கும் புனிதப் போர்!”

“எத்தகைய போர் எனினும், மன்னன் வெற்றிக்கே பாடுபடுவேன்”

“உம் உதவி இருக்குமட்டும், வெற்றிக்கு, என்ன குறை! சென்று வாரும்! என் மனம், இப்போதே கோட்டையில் இருக்கிறது”

“கோமள வல்லியின் கொஞ்சு மொழி என் செவியில் கேட்கிறது, மன்னவா! சென்று வருகிறேன்”

❋ ❋ ❋

அரண்மனையில், அந்தரங்க அறையில், அரசனுக்கும் அமைச்சருக்கும் இங்ஙனம் உரையாடல்! மன்னன் காமாந்த காரனல்ல—அமைச்சரோ ஆண்டிக்கோலத்தில் இருக்கிறார்-காமக் களியாட்டத்திலே துளியும் ஈடுபாடற்றவர்; எனினும், மன்னன் மனதுக்கு மகிழ்ச்சி தரத்தக்க மங்கை நல்லாளைக் கண்டறிந்து கூறுகிறார். கண்ட கண்ட கட்டழகிகளுடன், காமக் கூத்தாடித் திரியும் மன்னனுமல்ல—வண்டு மொய்க்கா மலர்கள் மணத்தைப் பரப்பிக் கொண்டிருக்க, பசுமைநிரம்பிய தோட்டத்திலே, அந்த பலவண்ண மலர்கள் உள்ள நேர்த்தியைக் கண்டு களிப்படையும் ரசிகன்போல், மன்னன் ஆடிடும் அணங்குகளையும், பாடிடும்பதுமைகளையும், கடைகாட்டி, இடைஅசைத்து, நடையை நாட்டியமாக்கிடும் நாரிமணிகளையும், கண்டுகளிப்பதன் — ஆடி அலையும் ஆசைமிக்கோனுமல்ல. மன்னனுடைய சபலம், அமைச்சருக்குத் தெரியும்—அதனைப் போக்கும் ‘மாமருந்து’ தேடிடும் முறையும், கடமையிலே ஒன்றெனக் கொண்டார். திருத்தலாகாதோ, மன்னனை? திருத்தலாம்—திருந்தவும்கூடும்—எனினும், திருந்

திப் பயன்? மன்னனுக்குப் பொழுதுபோக்கு இருக்கவேண்டும் —அப்போதுதான், அரசகாரியங்களைக் கவனித்துக்கொள் ளும் நிலை அமைச்சருக்குக் கிடைக்கும். ஆகவே, 'சபலம்' இருந்தால் தவறில்லை! ஆனால், அதை அறிந்து, வேறு தர்பார் தளுக்கன் எவனாவது, அரசனுக்குத் துணை நின்று 'கைக்குள் போட்டுக்கொண்டால்? அமைச்சரின் ஆதிக்கத் துக்கேகூட ஆபத்து எழக்கூடுமல்லவா! எனவே, மன்னனுக் குத் தேவையான 'பொன்வண்டு' சேகரிக்கும் காரியத்தை யும் தானே கவனித்துக்கொள்ளத்தான் வேண்டும்!

அமைச்சனின் எண்ணம் இது. அப்பழுக்கற்றவர், பெண்கள் விஷயத்தில். பக்தர்! சித்தத்தில் சத்தற்ற விஷயங் களுக்குச் சிறிதளவும் இடம் தராதவர்! அமைச்சராக மட்டு மல்ல, ஆண்டவன் அருளைப் பாமரருக்குப் பெற்றுத்தரும் திருக்கூட்டத்தவரிலே,முன்னணிப் படையிலே, முக்கியமான வராகவும் உள்ளவர். எனினும், மன்னனிடம் தமக்கு உள்ள தொடர்பும் செல்வாக்கும், எவராலும் சிதைந்திடாதபடி பாதுகாத்துக்கொள்வதற்காக, 'முறையற்ற' செயலையும், மன முவந்து மேற்கொண்டார்! எந்த நாட்டில் என்கிறீர்களா? வேல்விழி மாதரிடம், கோலோச்சும் மன்னர்கள் அடிமைப் பட்டுக் கிடந்த போக பூமியில்! பாருக்குள்ளே ஒரு நாடு, பல ரசங்கள் பெருகிய நாடு. பிரான்சு.

❋ ❋ ❋

"நடிப்பா இது!"

"ரசிகர்கள் ஏராளம், எனக்கு"

"அவர்கள் ரசிகர்களா! அப்பா நடிகா! அதிகம் பேசு வானேன். நாகரிக நகரங்களில் நமது நாடகக் குழுபோன்ற உயர்தர மேடையில், உன் போன்றவர்களுக்கு இடம் கிடைக் காது—வருந்திப் பயனில்லை—கோபம் என்றால், பற்களை நற நறவெனக் கடிக்கிறாய்—கிராம மக்கள் 'கரகோஷம்' செய் வர். நிச்சயமாக! இது, பாரிஸ்! நாகரீக நளினிகளும்,

அவர்களின் நகைமுகம் காண நவநிதியும் தரச் சித்தமாக உள்ள பிரபுக்களும் கலையை வளர்க்கும் கூடம். கோபம் என்றால், பற்களை நறநறவெனக் கடித்துக்காட்டினால், பட்டிக்காட்டான் என்று கூறிக் கேலி செய்வர். புருவத்தை நெறிப்பது, அதேபோது, புன்சிரிப்பை இழந்திடாமல் இருப்பது-அது பாரிஸ் போற்றும் கலை. போ! போ! ஆண்டுபல பயிற்சி பெற்றபின், வா, பார்ப்போம்''

''சிறு பாகமும் ஏற்று நடிக்கத் தயார்...''

"நீ தயாரப்பா, நீ தயார்; ஆனால், நான்? என் கலா ரசிகர்கள்? சிறு பாகம் எனினும், இங்கு, என் அரங்கில், நடிப்பிலே நேர்த்தியான திறமை உள்ளவருக்கே அளிக்கப் படும். விவாதம் கூடாது, என்னிடம்! சென்று வா''

வேலை தேடிவந்த ஆர்வமுள்ள நடிகனை, நாடகக்கலை வியாபாரி விரட்டிவிட்டு, உயர்ரகப் பானத்தைப் பருகிக் கொண்டிருந்தான்; உள்ளே நுழைந்தார், ஓர் முதியவர்.

''வருக, அமருக! ஊர் பேர் விவரம் கூறுக'' என்றான் கலைவாணிபன்—முதியவர் நகைத்தார்—கூர்ந்து நோக்கினான் கலைக்கூடக் கள்ளன், கண்டுகொண்டான் அவர் யார் என்பதை. குழைந்தான்; நெளிந்தான்; கரம் கூப்பினான். பெரியவர், அவனை அமரச் சொல்லிவிட்டு, அருகே ஓர் ஆசனத்திலமர்ந்து, ''அச்சம் கண்களில் தெரியவேண்டும், ஆனால் ஒரு கணம்தான்-அடுத்த கணமோ பாசத்தைப் பொழியவேண்டும்; சிங்காரம் சிறப்புற இருக்கவேண்டும், எனினும் செருக்குத் தெரிதல் கூடாது; வழுக்கி விழுபவளாகத் தெரியக்கூடாது, எனினும் காதலை ரசிக்கவே தெரியாத கற்சிலைபோன்றும் இருந்துவிடக்கூடாது; பேச்சிலே 'லலிதம்' இருக்கவேண்டும், ஆள்மயக்கி என்று தெரிந்துவிடக்கூடாது; மன்னர்களை மகிழ்விக்க இயலும் என்ற முறையில் உபசாரம் செய்யும் ஆற்றலிருக்கவேண்டும், ஆனால், இப்படிப்பட்ட வாய்ப்புக் கிட்டிவிட்டதே, என் பாக்கியமே பாக்கியம் என்று களிப்புடன் குளறிடுதல் கூடாது; மணிமண்டபத்திலே, சிற்பி சமைத்த ஓவியம் உயிர்பெற்று எழுந்து வந்து, தன்னைக்

கண்டு பூரித்து நிற்கும் ரசிகனிடம், காதலைப் பொழிவதைப் போல்! இத்தகைய நடிப்புத் திறன் உள்ள பெண், உண்டா; இங்கு; இப்போது; உம்மிடம்?''

''அமைச்சர் பெருமானே! பயிற்சி தந்திருக்கிறேன், எத்தகைய பாகமும் ஏற்று நடிக்கப் பாவை ஒருவள், பக்குவமானவள், இதுபோது இருக்கிருள். தாங்கள் கூறும் பாகத்தை நடிக்கும் திறம் படைத்தவள். எங்கு நாடகம்? எப்போது?''

''நாளை மறுநாள்! மன்னன் முன்! கொட்டகையில் அல்ல, கோட்டை மாளிகையில்'

''மன்னன் முன்னிலையிலா! மெத்த மகிழ்ச்சி! அமைச்சர் பெரும! மெத்த மகிழ்ச்சி! அரசரின் அருமை நண்பர்கள் அனைவரும் பாராட்டும் வண்ணம் அமைத்துக் காட்டுகிறேன். என் திறத்தை விளக்கிட நல்லதோர் வாய்ப்பு, நல்லதோர் வாய்ப்பு''

''ஆசிரிய! கோட்டை மாளிகையில் என்றேன், நாடகம் என்று கூறவில்லை. லாரோகேல் கோட்டைக் கோமகளாக மாறுவேடம் அணிந்து, சில நாட்கள், மன்னனுடன், அந்த நடிகை அளவளாவி இருக்கவேண்டும். கோட்டை மாளிகையில், ஆள் அம்பு, ஆடம்பரம் அலங்காரம் யாவும் இன்று தயாராகிவிடும்; அவர்கள் அனைவரும், உன் நடிகையை கோட்டைக் கோமகளாகவே வரவேற்பர்—பணிபுரிபவர், மன்னன் வருவார்—உடன் நான் வருவேன்—இருவரும் மாறுவேடத்தில்!''

''புதுமையாக இருக்கிறது.''

''பொருள் உண்டு—உனக்கு அது தெரியவேண்டியதில்லை. இதோ இப்பேழையில், கோட்டைக் கோமகளுக்குரிய ஆபரண வகைகள்—மற்ருெர் பேழையில் ஆடை வகைகள். இதோ அவள் ஓவியம். இன்றே உன் நடிகையைத் தயார் செய்து, இரவு அங்கு சென்றுவிட ஏற்பாடு செய். என் ஆட்கள் அங்கு தயாராக இருப்பர். மன்னன், லாரோகேல் கோட்டைக் கோமகளிடம் பழகுவதாகவே, கருத

வேண்டும்—துளியும் சந்தேகம் ஏற்படலாகாது—குட்டு வெளிப்பட்டால், தலைதப்பாது, உனக்கு.''

"கஷ்டமும் ஆபத்தும் நிரம்பிய திட்டம்''

"மன்னனுக்காக! அரசுக்காக! நாட்டுக்காக! காம வேட்டைக்கு அல்ல! கருத்தற்ற களியாட்டமுமல்ல!"

"முயல்கிறேன்.........''

"வெற்றி கிட்டும், அஞ்சாதே! மன்னர் தாமாகத் தம்மை இன்னார் என்று தெரிவிக்காமுன்னம், கோட்டைக் கோமகள் அவர்தான் மன்னர் என்று அறிந்துகொண்ட தாகக் காட்டிக்கொள்ளக்கூடாது.''

"அப்படியா? ஏன்?''

"எப்படி இதைச் சாதிப்பது என்று யோசி—ஏனென்ற கேள்வி எதற்கு!"

"உத்தரவு''

"இதோ செலவுத் தொகை......லாரோகேல் மாளிகை யில் கோட்டைக் கோமகளை, நாளை மறுநாள் சந்திக்கிறேன்.''

❋ ❋ ❋

"நாம் யார் என்று அறிந்ததும் பேதைப்பெண் பிரமித்துப் போய் விடுவாள்! மன்னா! மன்னித்துவிடு—குற்றம் ஏதேனும் செய்திருந்தால், பொறுத்திடுக! என்றெல்லாம், குளறிக் கொட்டுவாள்.''

"ஆமாம், அரசே! மாறுவேடம் தங்களுக்குப் பொருத்த மாக அமைந்து விட்டது. நடிப்பது தங்கட்குத் தெரி யாதா—சீமாட்டி அறிய முடியுமா தங்கள் திறமையை''

"வேடிக்கையாக இருக்கும், யாரோ, காதலில் கட் டுண்ட வாலிபன், என்று எண்ணிக்கொள்வாள்—இன்னு யிரே! ஆரமுதே! என்று நான் கொஞ்சுமொழி பேசுவது கேட்டு, யாரோ, சிங்காரத் தோட்டத்தில் நள்ளிரவுகளைக் கழித்த வாலிபச் சீமான் என்று எண்ணிக் கொள்வாள்......''

"ஐரோப்பா மெச்சும் பிரான்சு நாட்டுப் பூபதி தாங்கள் என்பதை பிறகு அறிந்ததும்........"

"அப்போதுதானே, வேடிக்கையின் உச்சக்கட்டம், அமைச்சரே, ஒரு திங்களுக்கு மேலாக எனக்கு இருந்து வந்த சோர்வு, சலிப்பு, பறந்தே போய் விட்டது—புதியதோர் மன எழுச்சி இப்போது. அடுத்த விநாடி என்ன, அதற்கு அடுத்த படி என்ன நேரிட இருக்கிறது, என்று எண்ணி எண்ணி, பர பரப்படையும் நிலை; இதைத் தான் நான் விரும்புகிறேன்."

"நான் அறிவேனே மன்னு, அதனை! அறிந்துதானே இந்த விருந்துக்கு ஏற்பாடு செய்தேன். பிரான்சு நாட்டு உயர்தர பிரபு குடும்பத்து வாலிப ரசிகன் உல்லாசப் பயண மாக வந்துள்ளார். தங்கள் மாளிகையில் சில நாட்கள் தங்க விழைகிருர் என்றுதான், செய்தி தந்திருக்கிறேன், கோமக ளுக்கு. வேட்டையில் இலேசாகப் பிரியம்—வேடிக்கை யாகப் பேசுவதைப் பெரிதும் விரும்புவார்—கீதத்திலே அளவு கடந்த விருப்பம்—நாட்டியமாடுவதிலே நேர்த்தியான முறை தெரிந்தவர்—என்று குறிப்பும் எழுதி இருக்கிறேன். அதோ பாரும், கோட்டை மாளிகை மாடி—தீபாலங்காரம்......"

"வரவேற்கத் தயாராக இருக்கிருள், வனிதை!"

"உள்ளே ஒரே பரபரப்பாக இருக்கும், பணியாட்கள் ஓடி ஆடி வேலை செய்தவண்ணம் இருப்பர். அதோ, கீதம் கேட் கிறதே, இனிமையான நாதம்......"

❋ ❋ ❋

கோட்டை மாளிகை வாயல்வந்தடைந்தனர். மாறு வேடமணிந்திருந்த மன்னனும் அமைச்சனும். உள்ளே கீதம் மும்முரமாகக் கேட்டபடி இருந்தது. காவலாட்கள், தடுத்து நிறுத்தினர். உள்ளே செல்லக் கூடாது என்று. மன்னன் அமைச்சனைப் பார்த்தான்—அமைச்சன், காவலாளைப் பார்த் தான். அவன், "உள்ளே, சீமாட்டி இன்று இருவிருந்தினர் களை, உபசரித்துக் கொண்டிருக்கிருர்கள். வேறு யாரும்

நுழையலாகாது—அனுமதி கிடையாது'' என்று கூறி, கதவைத் தாளிட்டுக் கொண்டு சென்றே விட்டான். உள்ளே கீதம்! மன்னன் மனதிலே, கோபம்! அமைச்சருக்கோ திகைப்பு! என் ஏற்பாடு! என் ஏற்பாடு!!—என்று முணு முணுத்துக் கொண்டார். உள்ளேயோ, மானே! தேனே! மாங்குயிலே! என்று காதல் கீதம், சாகசச் சிரிப்பொலி! வந்த வழியே திரும்பிச் சென்றனர், மன்னரும் அமைச்சரும்...

நடைபெற்ற தென்னவெனில், அமைச்சரும், நாடகக் குழுத் தலைவனும் பேசிக் கொண்டிருந்ததை அவர்கள் அறியா மல் கேட்டுக் கொண்டிருந்த வேலை தேடி வந்த நடிகன், வேரேர் எத்தனுடன் கூடிக்கொண்டு, கோட்டைக்கோமகளை ஏய்த்து விட்டான்—அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சீமான் போல நடித்து!

❋ ❋ ❋

இலக்கியமல்ல, வரலாறும் அல்ல, கட்டிவிடப்பட்ட கதைதான் இது. எனினும் இது போன்றதும் இதனினும் மோசமானதுமான பல செயல்களைச் செய்து வந்தவர், ரிஷ்லு என்று, பல கதைகளைப் பலர் கட்டினர்—மக்கள் இவ்விதமான கதைகளை, உண்மை என்று நம்பியது மட்டுமல்ல, ரிஷ்லு இதுவும் செய்வான், இதைவிடக் கேவலமான காரியமும் செய்வான்—ஆதிக்க வெறிபிடித்தலையும் அந்த ஆண்டி, எதையும் செய்வான், என்றுதான் பேசுவர். மக்கள், அந்த அளவுக்கு, ரிஷ்லுவைப்பற்றி மனக் கொதிப்பு அடைந்திருந் தனர். ஆனால், வெளிப்படையாக எதிர்க்கவோ இயலாது, ரிஷ்லுவின் பழி தீர்த்துக் கொள்ளும் திட்டம் பயங்கரமானது. எதிர்ப்பவர், தப்புவதில்லை—சித்ரவதையையே பரிசாகப் பெறுவர்.

❋ ❋ ❋

கார்டினல் ரிஷ்லு, பிரான்சு நாட்டை ஆட்டிப்படைத்த ஆதிக்கக்காரன்—மன்னனே அவனுடைய சதுரங்கக் காயா

ஞன்! பிரபுக்களுக்கு, அவன் பெயர் கேட்டாலே அச்சம், பிற நாட்டு மன்னர்களோ, அவனுடைய திட்டம் இப்போது யாதோ, நாளை எங்ஙனம் உருவெடுக்குமோ என்று எண்ணித் திகைப்பர். அவன் ஆதிக்கத்தை எதிர்க்கும் ஆற்றல் எவருக்கும் ஏற்படவில்லை. முணுமுணுப்போர் மூலைக்குத் துரத்தப்படுவர்! சதிபுரிவோர், சிரம் கொய்யப்படும். புரட்சி முளைத்தால் பொசுக்கித் தள்ளப்படும். மன்னனோ, உற்றார் உறவினர், உடன்பிறந்தார், பெற்றதாய், எனும் எவருக்கும் கட்டுப்படமாட்டான்; ரிஷ்லு, கீறிடும் கோட்டினை மட்டும் தாண்டமாட்டான். பற்று, பாசம், நட்பு, நன்றியறிதல், தயை தாட்சணியம், அச்சம், எனும் எதனையும் பொருட்படுத்தாமல், தான் இட்டதே சட்டமென்றாக்கி, ஈடு எதிர்ப்பு இன்றி, முடிதரித்த மன்னனையும் பிடிவாதம் நிரம்பிய பிரபுக்களையும், சதி புரிந்து புரிந்து பழக்கப்பட்டவர்களையும், ஒருசேர, அடக்கி ஆண்டவன், கார்டினல் ரிஷ்லு. படைத் தலைவர்கள் அவனிடம் பணிந்தனர். பூஜ்யர்கள் அவனிடம் சரண் புகுந்தனர். பிரான்சுநாட்டு ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியது முதல் இறந்துபடும்வரையில், பிரான்சிலும், அதனுடன் எவ்வகையாலேனும் தொடர்பு கொண்ட எந்த நாட்டிலும், கார்டினல் ரிஷ்லுவைப்பற்றித்தான் பேச்சு. மன்னர்கள் மாறுவர், மண்டலங்களிலே மகத்தான சம்பவங்கள் உருண்டோடும், ஆனால் எவரும் அஞ்சும் ஒரே மகத்தான சம்பவமாக, ரிஷ்லுவின் ஆதிக்கம்தான் நிலவிற்று.

பதின்மூன்றாம் லூயி மன்னன் பட்டத்துக்கு வருகிற போது, கார்டினல் ரிஷ்லு அரண்மனையில் இல்லை, ஆதிக்கத்தில்இல்லை, துவக்கம் கூட இல்லை. கார்டினல் ரிஷ்லு, இறக்கும் போது "எனக்குப் பிறகு, இதோ இந்த மாஜிரின் என் இடம் பெறட்டும்" என்று பதின்மூன்றாம் லூயி மன்னனிடம் கூறினான்-மன்னன் மறுக்கவில்லை-மறக்கவுமில்லை— மாஜிரின் ரிஷ்லுவாக்கப்பட்டான். இந்த வகையான செல்வாக்கைப் பெற்ற கார்டினல் ரிஷ்லு, 'நானுனக்கு மகன் அலனோ, நீ எனக்கு வாய்த்த தந்தை அலவோ' என்று ஆண்டவனிடம் நெஞ்சு நெக்குருக இறைஞ்சி, அருள்

பெற்று, பெற்ற அருளைப் பாமரருக்குந் தந்து அவர்களைப் பரம பத நாதனின் பார்வையில் கொண்டுபோய் வைக்கும் பணியில் ஈடுபடும் பாதிரிமார் வேலைக்குத்தான், தன்னைத்தானே முதலில் ஒப்படைத்து விட்டவர். கடைசி வரையில், கார்டினல் ரிஷ்லுவாகத்தான் பெயர்—சூரன், வீரன், மகாகனம் மன்னன்—என்ற விருதுகளை விரும்ப வில்லை. ஏன் விரும்ப வேண்டும், விருதுபல பெற்றவர்கள் எல்லாம் தன்முன் கட்டியம் கூறி நிற்கக் காணும்போது, விருது வேறு தேவை என்ற எண்ணமா பிறக்கும்! பிரான்சு நாட்டின், எந்தப் பெரும் பதவியையும், எடுத்து எவர் முன்பும் வீசும் ஆதிக்கம் இருந்தது கார்டினல் ரிஷ்லுவுக்கு. 'தேவப் பிரசாதத்தை'த் தந்து, மக்களின் 'ஜென்ம சாபல்ய'த்துக்காக தொழுகை நடத்தி, துதிப்பாடல்களைப் பாடி, ஏசுவின் சுவிசேஷத்தை எங்கும் பரப்பும் பணிபுரிவதற்காக என்று வாழ்க்கைப் பாதைப் பயணத்தின் துவக்கம் இருந்தது-பாதையோ, பிறகு வளைந்தது, குறுக்கே கிடைத்த மற்றோர் பாதை, அரண்மனைக்கு ரிஷ்லுவை அழைத்துச் சென்றது. மண்டலம் காலடியில் கிடந்தது.

பிரான்சு! விசித்திரமான நாடு: விபரீதமான நிலைமைகள்! அங்கு, அழகும் அவலட்சணமும், வீரமும் கோழைத் தனமும், சமரசமும் சதிச் செயலும், கலையும் கொலையும், காவியமும் கபடமும், செல்வமும் சீரழிவும், உலுத்தரின் உல்லாசமும் உழைப்போரின் பெருமூச்சும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளவில்லை, ஒன்றை ஒன்று அடுத்தடுத்து இருந்துவந்தன—மேகங்கள், அங்கும் இங்கும், கருநிறமாக ஒன்றும். வெண்கருமுகிலாக மற்றொன்றும் உள்ளது போல்! ஒன்றோடொன்று மோதி, பேரிடியாக மாறியதுதான், பிரன்சுப் புரட்சி. ரிஷ்லுகாலத்துப் பிரான்சிலே, மேகங்கள் சூல் கொண்டன. அந்தப் பிரான்சில், மன்னனுடைய அட்டகாசம் சிறந்ததா, பிரபுக்களின் கோலாகலம் சிறந்ததா என்று கண்டு பிடிக்க முடியாத நிலை. அரண்மனையில் மட்டும்தான் அரசோச்சுபவர் இருப்பார் என்பது பொது நிலை. பிரான்சிலே அரண்மனையிலே மன்னர் இருப்பார்; ஆனல் அரசோச்சும்

ஆற்றல்கொண்ட பிரபு ஒருவன், வேரூர் கோட்டையிலே கொலுவீற்றிருப்பான்! பாதிரிகள் பலர்; பாபச் செயலோ அமோகம்! படை பல உண்டு, தோல்வியே அதிகம்! பசும் வயல் உண்டு. பட்டினி உலவும்! வாணிபம் நடைபெற்றது. வணிகர் கொழுக்க! வரி வாங்குவார் மன்னர், வறியவர்களிடம் மட்டும்! மது உண்டு, மாதரின் அதரம், உண்டு அதனினும் போதை தரும் நிலை தர. கீதம் உண்டு, ஏழையின் சோகக் குரலுடன் போட்டியிட்ட வண்ணம். பிரான்சு! தாமரைத் தடாகத்துக்கு எருமைபோல், மக்கள் வாழ்வுக்கு ஒரு ஆட்சிமுறை இருந்து வந்தது. இந்தப் பிரான்சில் தானே ஒரு ரிஷ்லு தோன்ற முடியும். இங்குதானே, ஆண்டியாக வேண்டியவன், அரசனை ஆட்டிப் படைக்கும் இடம் பெற முடியும்.

இத்தகைய பிரான்சுக்கு மன்னனாக வந்தமர்ந்த பதின் மூன்றாம் லூயிக்கு, வயது 9! சொல்ல வேண்டுமா நிலைமையை! லூயி மன்னன், சிறு பாலகன். நிழலைக் கண்டால் பயந்தோடியும், நீரைக் கண்டால் அஞ்சியும், மலர்ச் செடி அருகே சென்றால் வண்டு கொட்டுமோ, மானைத் தொட்டால் முட்டித் தள்ளுமோ என்று திகில் கொள்ளத்தக்க மனநிலை உள்ள வயது. ஒன்பது வயதுப் பாலகன், பிரான்சின் மன்னன்! கடிவாளம் அறுந்து போய், உடலிலே முள் தைத்து, வெறி உணர்ச்சியுடன் உள்ள காட்டுக் குதிரையை அடக்கி ஓட்டிச் செல்ல ஒன்பது வயதுச் சிறுவன். மன்னன் மகன் மன்னன் தானே! வயதா முக்கியம்! முடமானாலும், குருடானாலும், சித்தம் குழம்பிப் போயிருப்பினும், சீரழிவான குணம் கொண்டோனாயினும், மன்னன் மகன் மன்னனாதல்தானே முறை! தேவகட்டளை அல்லவா அது! பண்டைப் பெருமையின் சின்னம்! எனவே, ஒன்பது வயதுப் பாலகன். ஆட்சிப் பீடத்தமர்ந்தான். அவன் பெயரால், அவன் அன்னை ஆட்சிப் பொறுப்பைப் பார்த்து வந்தார்கள். அந்த அன்னையோ!

மெடிசி குடும்பம் என்பது, பிளாரன்ஸ் நாட்டிலே கீர்த்தி வாய்ந்தது. செல்வத்தாலும் பல நாட்டுடன் மணவினை காரணமாக ஏற்பட்ட தொடர்பாலும், மெடிசி குடும்பம்,

மிகுந்த செல்வாக்கடைந்திருந்தது. மேரி எனும் அம்மை, இந்த மெடிசி குடும்பம்—மாண்ட மன்னனின் மனைவி—பதின் மூன்ரும் லூயிக்கு அன்னை; இத்தாலிய வம்சம். இயல்போ!

மேரி டி மெடிசி, தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட, எதையும் துணிந்து செய்யும் இயல்பு கொண்டிருந்தார். மன்னன் மனைவியாக இருந்தவர்கள்தான் எனினும், கான்சினி எனும் இத்தாலியன், அம்மையின் அபிமானத்தை அளவு கடந்து பெற்றிருந்தான். இத்தாலியிலிருந்து மேரி அழைத்துக்கொண்டு வந்த பரிவாரத்தில், லியனுரா டோரி என்ரேர் தோழி இருந்தாள்; தச்சு வேலைக்காரன் மகள்: அவளுடைய கணவன், இந்த கான்சினி.

ஊரிலே, பலர் பலவிதமாகப் பேசினர்—அரண்மனை, சட்டை செய்யுமா! கான்சினிதான், மேரிக்கு உற்ற துணை, நல்ல தோழன், யோசனை கூறுவோன், எல்லாம். கான்சினியின் சொல்தான், அரண்மனையிலே, முத்திரையில்லா உத்தரவு. பலருக்கு இது பிடிக்கவில்லை, சிறுமொழி புகன்றனர், கான்சினி சிரித்தான்! என் யோகம் அது—இதுகள் வீணுக வயிற்றெரிச்சல் பட்டுப் பலன் என்ன, என்பான்.

"கான்சினி, கான்சினி!" என்று எதற்கும், எப்போதும் மேரிதேவியார், அவனைத்தான் அழைப்பார்கள். இந்தஉத்யோகம் யாருக்கு அளிக்கலாம்? கான்சினிதான் கூறவேண்டும். இந்தச் சட்டத்தை எப்படித் திருத்தலாம்? கான்சினி சொல்கிறபடி! இதுதான் ஆட்சிமுறை. இவ்வளவு செல்வாக்கைப் பெற, கான்சினி, பேரறிவாளனு? இல்லை. மேரி அம்மையின் மனதை மகிழ்விக்கும் துறை ஒன்றுக்கே அவன் அறிவு அனைத்தும் செலவழிந்து விட்டது—மற்றத் துறைகளை அவன் அறியான். போரில் வல்லவனே? போரா! அரண்மனையில், அரசாளும் அம்மைக்கு அந்தரங்க நண்பனுக இருக்கும் கான்சினிக்குக் களம் செல்ல நேரம் ஏது! பிரான்சு நாட்டுப் பெருங் கீர்த்திக் குடும்பத்தில் உதித்தவனே? இல்லை. இத்தாலி நாட்டவன்! அவன் பெற்ற செல்வாக்குக்காக, அவன் கற்றிருந்த ஒரே வித்தை, மேரியின் மனப்பக்கு

வத்தை அறிந்து நடப்பதுதான். சாமான்யமான கலையா, அது! அதிலும், பிரான்சில், அந்த நாட்களில்! பெற்ற செல் வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு கான்சினி ஆட்சி முறை யிலே ஒரு விறுவிறுப்பு, ஏற்படுத்தினனு? இல்லை! பட்டமும் பதவியும் பரிசும் வாரி வழங்குவான் நண்பர்களுக்கு. மேரி அம்மைக்கு எதிராகப் பகைக்கூட்டம் கிளம்பிற்று, அதனை அறிந்து அழிக்கும் ஆற்றலுமற்றிருந்தான் கான்சினி. உரித்த பழத்தைச் சாப்பிட்டுவிட்டு உயர்தரப் பானம் பருகி, உல்லாச ஓடம் ஏறிச்செல்லும் போக்கினன், கான்சினி. அவனிடம், மேரிதேவி காட்டிய பரிவு, எதிர்ப்புச் சக்தியை உருவாக்கிற்று—மேரி அதை உணர்ந்து அஞ்சினுள். கான் சினி ஏதும் செய்ய இயலாதிருந்தான்! அரண்மனைக்குள்ளே யும் வெளியேயும், சீமான்களின் சிங்கார மாளிகைகளிலே, பிரபுக்களின் பாசறைகளிலே, கான்சினி-மேரி தொடர்புபற்றி கோபப் பேச்சுக் கிளம்பும், சூளுரைப்பர் சிலர், சிரத்தை அறுத்தெறிய வேண்டுமென்பர் சிலர். ஏன் இந்த மேரி தேவியின் புத்தி இவ்வளவு கெட்டுக்கிடக்கிறது என்பார் ஒருவர், எதற்கும் ஒரு அளவு இருக்கவேண்டாமா, என்பார் மற்ருெருவர்; எதிர்ப்புப் பல இடங்களிலிருந்தும், உருவெடுத்த வண்ணம் இருந்தது.

ரிஷ்லு, அப்போதெல்லாம் பரமனுடைய நாமத்தை ஜெபித்துக்கொண்டு, தேவாலயப் பூஜாரியாய், திவ்யப் பிர பந்தங்களின் தேன்மொழியை ரசித்துக்கொண்டு, நாத்தீகர் களைத் திருத்திடும் நற்ருெண்டிலும், சந்தேகிகளைச் சன் மார்க்கிகளாக்கும் பணிபுரிந்துகொண்டும், மத தத்துவ விளக்க ஏடு தீட்டிக்கொண்டும் இருந்தான்—ஆனுல் உள் எண்ணமோ, உடைக்கு ஏற்றது அல்ல. தேவாலயத்திலே தான் உலவினுன்; ஆனுல், நோக்கமோ, அரசியல் ஆதிக்கம் பெறவேண்டும், எப்படியேனும், பாரிஸ் பட்டணம் சென்று, புகழ்க்கொடியை நிலைநாட்டவேண்டும் என்பது தான். உடை காவி, உள்ளமோ பதவி மோகத்தில். நாளை, மறுநாள், அடுத்த திங்கள், இன்னும் சில திங்களில் என்று, இவ்வண்ணம் ஆவ லுடன் எதிர்பார்த்தபடி இருந்தான், அழைப்பு வரும் வரும்

என்று. அருளாலயத்துக்கு அனைவரும் வாரீர், அவன் புகழ் கேளீர் என்று பக்தர்களை அழைக்கவேண்டிய ரிஷ்லு, பாரிஸ் பட்டணத்திலிருந்து, ஆட்சியாளர்களிடமிருந்து, தனக்கு அழைப்புவரும் நாளே திருநாள், பெருநாள் என்றெண்ணிக் கிடந்தான். அந்த அழைப்புக் கிடைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தான். நமது தேவாலய அதிபர், நமக்காகத் திருப்புகழைத் தொகுத்துத் தருவார், ஐயன் குணங்களை அழகுபட எடுத்துரைப்பார், பாவத்தைத் துடைக்கும் பணியினைப் பக்குவப்படுத்துவார், என்றுதான், அந்த ஊர் மக்கள் எண்ணிக்கொண்டனர். ஆனால், லூகான் நகரதேவாலய அதிபராக இருந்துவந்த ரிஷ்லு, மேரி அம்மையிடமிருந்து அழைப்புவரவேண்டுமென்று எதிர்பார்த்தவண்ணம் இருந்தார். உள்ளே புக இடம் கிடைத்துவிட்டால் போதும், பிறகு நமது உயர்வைத் தடுக்க யாராலும் முடியாது என்று நம்பிக்கை பலமாகக் கொண்டான், ரிஷ்லு. பிரான்சு நாட்டு நிலையும், ஆளும் அம்மையின் நிலையும், ஆட்டிப் படைக்கும் கான்சினியின் குணமும், பிரபுக்களின் வலிமையும், திகைத்துக் கிடக்கும் மக்களின் குமுறலும், ரிஷ்லுவுக்குத் தெளிவாகத் தெரியும். ஜெபமாலைதான் கரத்தில். ஆனால், நினைப்பு முழுவதும், நாதன்மீதல்ல, நாடாள்வோர்மீது, ஆட்சிபீடத்தருகே செல்லும் பாதையின்மீது. தேவாலய அதிபருக்குவேண்டிய அறிவாற்றல் இல்லையோ-நிரம்ப-நிரம்ப தத்துவம் தெரியும், தர்க்கம் அறிவார்; ஏடு தீட்டினார், வாதம் புரிந்தார்—ஆனால் திருப்தி இல்லை; இதுதானா, இவ்வளவுதானா, பிரான்சு நாட்டை அல்லவா ஆளவேண்டும், மந்தையிலிருந்து விலகிவிட்ட ஆடுகளைத் திருப்பிக்கொண்டுவந்து சேர்க்கும் வேலைதானா எனக்கு? நான் ஆளப் பிறந்தவன், ஆளும் ஆற்றல் படைத்தவன், கான்சினியின் கரத்திலே பம்பரமாக உள்ள பிரான்சுமட்டும், என் கரத்திலே ஒப்படைக்கப் பட்டால்......! எண்ணும்போதே எதிர்காலக் காட்சிகள் மனதிலே தோன்றின. அழைப்போ, வந்தபாடில்லை, ரிஷ்லுவின் அண்ணன் ஹென்ரி ரிஷ்லு, பாரிசில், மேரி அம்மையின் கருணைக்குப் பாத்திரமானவனாகத்தான் இருந்தான். தம்பியின் உருக்கமான வேண்டுகோள் கிடைத்தது. சமயம்வரவில்லை.

வேறு பல நண்பர்களுக்கும் எழுதியிருந்தான் ரிஷ்லு. வாய்ப்புக் கிடைக்கவில்லை. மேரி தேவியாருக்கே எழுதினான், "அடியேன் என்றும் தங்களுக்குச் சேவை செய்யச் சித்தமாக இருக்கிறேன். உத்தரவுக்கு எதிர்பார்க்கிறேன்" என்று. உத்வரவு கிடைக்கவில்லை. கான்சினிக்கும் எழுதினான்—கட்டளைக்குக் காத்திருப்பதாக. கட்டளை கிடைக்கவில்லை. அதுவரையில் கர்த்தர் தொண்டு செய்துவருவோம் என்று இருந்துவந்தான். அதிலேயும் இலாபம் இல்லாமற் போகவில்லை.

கார்டினல் ரிஷ்லு, வேண்டாவெறுப்புடனே, எதிர்பாராத நிலையிலோ, பதவி பெறவில்லை. அதற்காக, அவன் எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சமல்ல—பூஜாரியாக இருந்துகொண்டே இந்த முயற்சியில் ஈடுபட்டது, அறமா, அழகா, என்பீர்கள், அந்நாளில் அது அறமா, அழகா என்பதல்ல பிரச்னை, அதுதான் முறை! கார்டினல் ரிஷ்லு, செந்நெல் வயலிலே பதுங்கிக் கிடந்த புலி! இரை வேண்டும்—இருட்ட வேண்டும்—அதுவரை, வயலில்! மாடா, கதிர் தின்று பசி தீர்த்துக்கொள்ள? ரிஷ்லுவும், பாரிஸ்மீது பாய்வதற்குத் தக்க சமயம் வருகிறவரையில், இங்கு இருப்போம், என்றுதான், லூகான் நகரைத் தங்குமிடமாகக் கொண்டான்—தேவபூஜையின் மேன்மையை உணர்ந்து அல்ல!

ரிஷ்லு, எளிய குடியில்தான் பிறந்தான். 1558-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் நாள், பாரிஸ் பட்டிணத்தில் ரிஷ்லு பிறந்தான். உடன் பிறந்த ஆடவர் மூவர், இரு பெண்கள். ஆர்மாண்டு ஜீன், என்ற பெயர், ரிஷ்லுவுக்கு! ரிஷ்லு என்பது ஊரின் பெயர், அதுவே அந்தக் குடும்பத்தினரின் பொதுப் பெயருமாயிற்று, ஐந்து வயதுப் பாலகனாக ஆர்மாண்டு ஜீன் இருக்கும்போதே, தந்தை காலமானார்—ஜீன், தாயாரால் வளர்க்கப்பட்டுவந்த செல்லப்பிள்ளை. சுசானே என்பது தாயின் பெயர். ஜீன் சிறு பிராய முதலே, நோயாளி—துள்ளித் திரிவதில்லை, சோர்ந்து காணப்படுவான். தாயார் அவனை மிகவும் பக்குவமாக வளர்க்க வேண்டி இருந்தது. அடிக்கடி கடுமையான காய்ச்சல். சிறுவன், ஓங்கி வளருவதற்கு

முடியாத நிலே. குன்றிக் கிடப்பான். உடல்தான் அவ்விதம். உள்ளமோ சுறுசுறுப்பானது—இளமை முதலே! பிரான்சு நாட்டு நிலே, பொருளாதார நெருக்கடி, கத்தோலிக்கருக்கும் பிராடெஸ்ட்டெண்ட் பிரிவினருக்கும் ஏற்படும் போராட்டங் கள், அரச குடும்ப அலங்கோல நடவடிக்கைகள், இவைபற்றி எல்லாம் ஊரார் பேசிக்கொள்வர், சிறுவன் கூர்ந்து கவனித் துக் கேட்பான். மனதிலே, எண்ணங்கள் தெளிவாகப் பதிய லாயின! சிறு வயது முதல் இறந்துபடும் வரையில், ரிஷ்லு, சதா நோயுடன் போராடிக்கொண்டுதான் இருக்கநேரிட்டது. எனினும் ஓயாத உழைப்புக்குத் தன்னே உட்படுத்திக்கொண் டான். பள்ளியிலே முதல் மாணவனுக, ஆசிரியர் பாராட்டும் திறம்படைத்தவனுக விளங்கவேண்டும் என்று ஆசை. படிப் பதிலே ஆர்வம். எந்தத் துறை சம்பந்தமான ஏடானுலும், அதனேத் தெளிவாகக் கற்றுணருவதிலே கவலே. ஆசிரியர் கள் ரிஷ்லுவின் அறிவுத் தெளிவு கண்டு ஆச்சரியப்பட்டனர். எப்போதும் நோய்வாய்ப்பட்டு, மெலிந்து சோர்ந்து காணப் பட்ட இந்த வாலிபனுக்கு அறிவுக் கூர்மை எப்படி ஒளிவிடு கிறது காணீர், என்று பலரும் பாராட்டுவர்-ரிஷ்லுவுக்கு இதனேக் கேட்பதிலே மிக்க மகிழ்ச்சி. துவக்க முதலே ரிஷ்லுவிடம் இந்தக் குணம் இருந்து வந்தது—தனக்கு ஈடு எதிர்ப்பு எவரும் இருத்தலாகாது, என்ற எண்ணம். அதி காரத்தில் அமர்ந்ததும், இதே எண்ணம்தான், ரிஷ்லுவை, ஈவு இரக்கமற்ற செயல்களேயும் செய்யத் தூண்டிற்று. இலக் கியத்துறைப் படிப்பை முடித்துக்கொண்டு, ரிஷ்லு, ராணுவக் கல்லூரியில் சேர்ந்தான். குதிரை ஏற்றம், வாட்போர், ஆகிய கலேகளே நேர்த்தியான முறையிலே பயிற்றுவிக்கும், உயர் தரக் கல்லூரியில் ரிஷ்லுவுக்கு இடம் கிடைத்தது. இலக்கியக் கல்வி பயில்கையில் எத்தகைய திறமையும் ஆர்வமும் காட்டினுனே, அதேபோலவே, ராணுவத் துறைப் படிப்பிலே யும் ரிஷ்லு திறமையைக் காட்டி ஆசிரியர்களின் பாராட்டு தலேப் பெற்றுன்.

இலக்கியம் பயின்றுன், ஆனுல் இலக்கிய ஆசிரியனுக வில்லே,

போர்க்கலை பயின்றான்; ஆனால் படையிலே தளபதியாக வில்லை.

இவைகளை எல்லாம் ஆர்வத்துடனும் திறமை நிரம்பும் முறையிலும் கற்றானே யொழிய, ரிஷ்லு, இந்தத் துறைகள் தரும் இடமும் வாய்ப்பும் போதுமானவை என்று திருப்தி அடையவில்லை. வேறு ஓர் இடம் தனக்கு வேண்டும், இவைகள் யாவும், வெறும் 'முதற்படிகளே' என்று எண்ணினான். ஆனால் அவன் இலக்கிய அறிவைக் கண்டவர், அவன் பெரிய இலக்கிய கர்த்தாவாகிவிடுவான் என்று எண்ணிக்கொள்வர்—ராணுவக் கல்லூரியிலே அவனைக் கண்டவர்களோ, இவன் படையில் சிறந்த தளபதியாகத் திகழ்வான் என்று எண்ணிக் கொள்வர். ரிஷ்லுவோ, இலக்கிய அறிவும், ராணுவக்கலை அறிவும், தனக்குக் கிடைக்க இருக்கும் பெரியதோர் வாய்ப்புக்குத் துணைபுரியும், என்று மட்டுமே எண்ணிக்கொண்டான். சிறுவயது முதற்கொண்டே ரிஷ்லுவின் மனம் அப்படிப்பட்டதாக இருந்தது. வேறு யாருக்கும் கிட்டாத கிடைக்காத இடம் தனக்குக் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவான்-அதற்கான முழுப் பயிற்சியும் பெற்றாக வேண்டும், என்ற ஆர்வம், நோயையும் பொருட்படுத்தாமல், உழைக்கச்செய்தது. இவன் 'தாங்குவானா' இவ்வளவு கடுமையான உழைப்பை என்று தாயார் கவலைப்படுவார்கள்—ரிஷ்லுவோ, கனி பறிக்கச் செல்பவன் மரத்தின்மீது ஏறிவிட்டால், கால்கடுக்குமே என்று எண்ணுவது, இடையில் கிடைக்கும் செங்காய் கொண்டா திருப்தி அடைவது? மேலே மேலே ஏறத்தான் வேண்டும், கனி கரத்தில்படும் வரையில், என்ற முறையிலே உழைத்து வந்தான்.

இலக்கியம் தீட்டுவான் என்று எதிர்பார்த்தவர்களை ஏமாற்றிவிட்டு, இராணுவக் கல்லூரி சென்றான்; தளபதியாவான் என்று எதிர்பார்த்தனர்; ஆனால், ரிஷ்லுவோ, சாமியார் ஆனான்!

❋ ❋ ❋

ரிஷ்லு குடும்பத்துக்கு, மூன்றும் ஹென்ரி எனும் பிரென்சு மன்னன், லூகான் நகர தேவாலயத்தை இனும் தந்திருந்தான். பிரென்சு நாட்டிலே, மன்னர்கள் இப்படி, 'குரு பீடங்களை', 'தேவாலயங்களை', 'பூஜா மடங்களை' தமது இஷ்டம் போல் இனும் தருவது வாடிக்கை.

இன்று முதல், ராமேஸ்வரம் தேவஸ்தானவட்ட அதிபராக ராமாச்சாரியார் நியமிக்கப்பட்டிருக்கிறார், அவரும் அவரது பின் சந்ததியாரும் ராமேஸ்வரம் தேவஸ்தான அதிபராக இருந்து, அதனால் கிடைக்கும் வருமானத்தை அடைந்து கொள்வர்—என்று ஒரு சர்க்கார் உத்தரவு இப்போது கிடையாது, இயலாது, ஜனநாயகம் அனுமதி அளிக்காது. புரட்சிக்கு முன்பு பிரான்சிலே இது சர்வசாதாரணமான முறை. மன்னர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு நிலங்களை, மாட மாளிகைகளை, பதவி பவிசுகளைத் தானமாகத் தருவது போலவே, குருபீடங்களையும் தேவாலயங்களையும் தருவர்! அதுமுதல் அந்த ஆலய வருமானத்தை அந்தக் குடும்பத்தார் அனுபவித்துக்கொள்வர்; அவர்களாகப்பார்த்து ஆலயகாரியங்களைக் கவனிக்க சம்பளத்துக்குப் பூஜாரியை நியமிப்பர். இந்த அலங்கோலமான முறை அமுலில் இருந்த காலம் அது. லூகான் நகர தேவாலயத்துக்கு, அந்த நகர மக்கள் செலுத்தும் காணிக்கை, அந்த நகர மக்கள் மதச் சடங்குகளுக்காகச் செலுத்தும் தட்சணை யாவும், ரிஷ்லு குடும்பத்தாருக்குச் சொந்தம். மதச் சடங்குகளை நடத்திவைக்கவும், ஆலயத்தில் தொழுகை பஜனை இவைகளை நடாத்தவும், ஒரு 'அர்ச்சகர்' வேலைக்கு அமர்த்தப்பட்டார். அவருக்குத் தந்த சம்பளம் போக, மீதமிருக்கும் தொகையைக் குடும்பம் எடுத்துக் கொண்டது.

லூகான் நகர தேவாலயம், அதிக வருமானம் தருவதல்ல—ஏழைகள் நிரம்பிய சிற்றூர். எனவே, சம்பளத்துக்கு அர்ச்சகரை வைப்பதைவிட, ரிஷ்லுவே, அந்த 'வேலை'யைப் பார்த்துக்கொண்டால் இலாபகரமாக இருக்கும் என்ற எண்ணம் பிறந்தது. சாமான்யக் குடும்பம்தானே.

ரிஷ்லு அப்போதுதான் ராணுவக் கல்லூரியில் திறம் படப் பயிற்சி பெற்றுவந்தான். அவன் நிலையிலிருந்த எந்த வாலிபனும், ராணுவ உடை தரித்துக்கொண்டு, குதிரைமீது சவாரி செய்துகொண்டு, உல்லாசமாக வாழலாம்; போர் மூண்டால், களத்திலே திறம் காட்டி, வீரத்தை விளக்கி, விருது பெறலாம், தளபதியாகலாம் என்றுதானே எண்ணுவான். காவி அணிந்து கமண்டலம் ஏந்தி, பாவிகளை ரட்சிக்கும்படி பரமனிடம் 'பூஜை' செய்யும் பண்டார வேலைக்குப்போக மனம் ஒப்புவானா? ரிஷ்லு சம்மதித்தான்! வாள் ஏந்திய கரத்தை, ஜெபமாலை ஏந்தும் கரமாக்கிக்கொள்ள இசைந்தான். வலப்புறம், இடப்புறம், எதிர்ப்புறம் என்று குதிரையைச் செலுத்தி, போர்முறை பயின்று வந்தவன், அந்திவேளைப் பூஜை, அதிகாலைப் பூஜை, அருள் கூறல், பிரசாதம் வழங்கல்; ஆறுதலளித்தல், குற்றம் கடிதல் என்பன போன்ற காரியங்களில் ஈடுபட இசைந்தான். காரணம் என்ன? எந்தக் காரியம் செய்தாலும், திறமையை விளக்கச் சந்தர்ப்பம் கிடைக்குமல்லவா, அதுதான் தேவை, ரிஷ்லுவுக்கு. அவ்வளவு தன்னம்பிக்கை! தளபதியாவதற்கான துறையை விட்டுவிட்டு, 'சாமியார்' வேலையை மேற்கொண்ட ரிஷ்லு, லூகான் தேவாலய நிர்வாகக் காரியத்தை ஒழுங்குபடுத்துவதிலே மும்முரமாக ஈடுபட்டான். அருள் பெறும் திருமுறையை மக்களுக்கு அறிந்துரைக்கும் பணியான 'பூஜாரி வேலையை மேற்கொண்டபோது, ரிஷ்லுவுக்கு வயது, பதினேழு!

லூகான் நகருக்கு வந்து வேலையை ஒப்புக்கொள்வதற்கு முன்பு, ரிஷ்லு, தன் புதிய தொழிலுக்குத் தேவையான திறமையைப் பெற, பாரிஸ் சென்று மார்க்க சம்பந்தமான படிப்புக்காக இரண்டாண்டுகள் செலவிட்டான். எவ்வளவோ பேர், பூஜாரிகளாக உள்ளனர், கிடைக்கும் வருமானத்தோடு திருப்தி அடைந்து, கிராமத்துக் கொல்லனும் உழவனும், ஜெபமாலை உருட்டும் கிழவியும், பாவ மன்னிப்புக் கோரும் முதியவனும் தரும் பாராட்டுதலைக் கேட்டுக் களித்து இது போதும் நமக்கு என்று. ரிஷ்லு, அப்படியல்ல! லூகான்

தேவாலய அதிபர் யாராலும் பாராட்டப்பட வேண்டியவராக வேண்டும். மற்றத் தேவாலய அதிபர்களெல்லாம், இரண்டோர் ஏடுகளை மனப்பாடம் செய்துகொண்டவர்கள், ஆழ்ந்த ஆராய்ச்சி, அறிவுத் தெளிவுள்ள விளக்கவுரை தரும் ஆற்றல் இல்லாதவர்கள். லூகான் நகர தேவாலய அதிபராக, அரும்பு மீசை வாலிபன் ஒருவன் அமர்ந்திருக்கிருன். அவனுடைய அறிவே அறிவு, அவன் அளிக்கும் உபதேசமே உபதேசம் என்று அனைவரும் புகழ்ந்து பேசவேண்டும்; மக்களின் கவனத்தைக் கவரவேண்டும்: அந்தப் புகழொளி, பாரிஸ் நகரில் தெரியவேண்டும்; அழைப்பு அங்கிருந்து கிடைக்கவேண்டும்—இது ரிஷ்லூவின் எண்ணம். கிடைக்கும் வாய்ப்பை, பெரியதோர் நிலைபெற உபயோகிக்கவேண்டும் என்ற நோக்கம். எனவேதான், பரம்பரை பாத்யதையாகக் கிடைத்த பூஜாரி வேலை என்றாலும், மதவாத உலகு மதிக்கும் விதமான அறிவாற்றல் பெற்று, அந்த வேலையில் ஈடுபடவேண்டும் என்று ரிஷ்லு திட்டமிட்டான். இரண்டாண்டுகள் கடுமையாக உழைத்து, மத ஏடுகளில் பெரும் புலமை பெற்றுன்.

உண்மையிலேயே மார்க்கத் துறையிலே நம்பிக்கையும் அக்கரையும் பிறந்தால், எந்தச் சந்தேகத்தையும் பஞ்சு பஞ்சாக்கவல்ல ஆதாரங்களை ஆய்ந்தறிந்துகொள்ள வேண்டும், மெஞ்ஞானத்தின் தன்மையை உணரவேண்டும், சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வத்தை தேஜோமயாநந்தத்தை அறிந்து மகிழ வேண்டும் பவப்பிணி அகலும், பற்றும் பாசமும் மாய்ந்தொழியும், அருள் கிட்டும், பரலோகத்தில் சீரியதோர் நிலை கிடைக்கும் என்பதற்காக, இரவு பகலாக, ஆண்டுக்கணக்கில், மத ஏடுகளைக் கற்றும், விதவிதமான 'ஞானசிரியர்களை' அடுத்தும், பக்குவம் பெற முயல்வர். ரிஷ்லுவின் நோக்கம் அவ்விதமானதல்ல. உலகத்தின் மாய்கையை, வாழ்க்கையின் நிலையாமையை உணர அல்ல, ஏடுகளைப் படித்தது; அவைபற்றி, கேட்போர் மெச்சும் விதமாக எடுத்துரைக்க! அதன்மூலம் தன் புகழ் பரப்ப!

புகழொளியைத் துணைகொண்டு, உரியதோர் பதவி பெற, பாரிஸில் அரசோச்சும் குழுவிலே அமர, அரசாள!

லூகான் நகர தேவாலய அதிபராகி, அதிலேயே மூழ்கி விட விரும்பவில்லை. இது ஒரு கட்டம்—முக்கியமானது—கூர்த்த மதியுடன் இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், வேறு பல கட்டங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பது ரிஷ்லுவின் திட்டம். யாரும் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள், அனேகருக்குத் தோன்றவே செய்யாது. ஆனால் ரிஷ்லு எல்லோரையும்போல அல்ல. அவன் மனதிலே உறங்கிக்கொண்டல்ல, உலவியபடி இருந்த ஆசைகள் அநேகம். எல்லா ஆசைகளும் அதிகம் பெறவேண்டும், ஈடில்லை எதிர்ப்பில்லை என்ற நிலை பெறவேண்டும் என்பதுதான். வாளின் கூர்மையைப் பாராட்டும் வீரன், களத்திலே வெற்றியும் கீர்த்தியும் பெறுவதற்கு வாளைத் துணையாகக்கொள்வான்;—மற்றவர்களுடைய கூர்மையைவிட என் வாளின் கூர்மை நேர்த்தியானது என்று பேசிக்கொண்டா காலங் கடத்துவான்!

பாரிசில், மத ஏடுகளைக் கற்று, ரிஷ்லு, பல பரிட்சைகளில் தேறினான். திருப்தியில்லை- ரோமாபுரி சென்று, போப்பாண்டவரைக் கண்டுவர ஆவல்கொண்டான்.

கத்தோலிக்க உலகுக்கு போப்பாண்டவர் கண்கண்ட கடவுள்! அரசுகள், போப்பாண்டவரின் ஆசிபெறத் தவங்கிடந்தன. பிராடெஸ்டென்ட் புயல்வீசி, ஆதிக்கம் ஒரு அளவுக்கு அழிந்துபட்டது என்றபோதிலும், ரிஷ்லுவின் நாட்களிலே போப்பாண்டவருக்கு, பிரான்சிலேயும், கத்தோலிக்க மார்க்கத்தைக் கொண்டிருந்த வேறுபல ஐரோப்பிய நாடுகளிலேயும், அளவற்ற செல்வாக்கு. பக்திமிக்க கத்தோலிக்கர் போப்பின் தரிசனம், பாப விமோசனம் என்று எண்ணுவர்—பரமண்டலத்திலே பிதா முன்னிலையிலே செல்வதுபோன்று புனிதத்தன்மை நிரம்பியதாகவே போப்பாண்டவரைத் தரிசிப்பதைக் கருதுவர்.

ரிஷ்லு, போப்பாண்டவரைக் காண விரும்பியது, இந்த நோக்குடன் அல்ல! இதோ ஒரு புதிய நட்சத்திரம், இதன் ஒளியின் அழகுதனைக் காணீர்! என்று போப்புக்கு எடுத்துக் காட்டவே, ரிஷ்லு ரோம் சென்றான். அங்கு புகழ்பெற வேண்டும் என்பது நோக்கம். அதற்கோர் வாய்ப்பும் கிடைத்தது. தேவாலய அதிபர் பதவிக்கு ஏற்ற வயது இல்லை, ரிஷ்லுவுக்கு. எனவே போப்பாண்டவரிடம் மனுச் செய்து கொண்டு, அவர் ஆசியும் அனுமதியும் பெற்று, வயதிற் சிறிய வனாயினும் வல்லமை மிக்கோன், எனவே இவன் ஆலய அதி பனாகலாம் என்று அவர் கூறவேண்டும்—இதனைச் சாதிக்க சிபாரிசு தேவை இல்லை: நானே செல்வேன், மார்க்க சம்பந்த மான துறையிலே எனக்குள்ள புலமையையும் திறமையையும் அவரே காணட்டும், அனுமதி எளிதில் அளிப்பார், என்று கூறிவிட்டு ரிஷ்லு ரோம் சென்றான்—அனுமதியும் பெற்றான்.

ஐந்தாம்பால் என்பவர் அப்போது போப்பாண்டவர். அவர் அவையிலே, மார்க்கத்துறைத் தலைவர்களும் அரசி யல் துறைத் தலைவர்களும் நிரம்பி இருந்தனர். ரிஷ்லு, அந்த அவையினர் மகிழத்தக்க மதி நுட்பத்தைக் காட்டி வெற்றிபெற்றார். ஒரேமுறை, ஒரு உபதேசியார் அருளிய உப தேசத்தைக் கேட்ட ரிஷ்லு, உடனே அப்படியே அதைத் தவறு துளியுமின்றி ஒப்புவித்தாராம்—அதிசயமடைந்த போப்பாண் டவர் ரிஷ்லுவை அழைத்து, ஒப்புவிக்கச் சொல்லிக் கேட்டு இன்புற்றாராம். அதேபோது ரிஷ்லு, உபதேசம் எப்பொருள் பற்றியதோ அதே பொருள் குறித்துத் தானே புதியதோர் உபதேசம் தயாரித்து, சொற்பொழிவாற்றினாராம்; போப், மிக வும் பாராட்டினாராம்.

"ஆசாமி பெரிய எத்தனுவான்"—என்ற பொருள்பட போப் ரிஷ்லுவைப் பற்றிக் கூறினாராம்.

போப்பாண்டவரிடம், ரிஷ்லு, தன் உண்மை வயதை மறைத்துத் தவறான சீட்டுக் காட்டி ஏய்த்தார் என்றும் வதந்தி உண்டு. ரிஷ்லுவுக்கு இது தெரியாத வித்தை யல்ல!

ரோம் நகரிலே புகழ் ஈட்டிக்கொண்டு, பதவிக்கான தகுதியும் பெற்றுக்கொண்டு, ரிஷ்லு, பாரிஸ் திரும்பி னார்.

ரோம், மார்க்கத்துறைக்குத் தலைநகரம்!

பாரிஸ், அரசியல் உலகுக்குத் தலைநகரம்!

முன்னதில் ஜெபமாலை ஏந்திய கரத்தினர், வாளேந்திய மன்னரைச் சிட்டுமாராகக்கொள்ளும் முறைபற்றிய விளக்கம் கிடைத்தது, ரிஷ்லுவுக்கு.

பாரிசில், அரசோச்சும் அதிபர்கள், ஜெபமாலையையும் தமது சுயநலத்துக்காக எப்படிப் பயன்படுத்துகின்றனர், என்ற தெளிவு கிடைத்தது.

பாரிசில், அரசியல் சம்பவங்கள் மின்னல் வேகத்தில்! ரிஷ்லு, அவைகளை எல்லாம் கூர்ந்து கவனித்தார்.

லூகான் நகர தேவாலய அதிபர்—போப்பாண்டவரின் ஆசியும் பெற்றவர்—இவருக்கு எதற்காகப் பாரிஸ் பட்டணத்துப் பகட்டுடைக்காரர்களின் அரசியல் நடவடிக்கைகளைப்பற்றிய அக்கரை என்று எண்ணுவீர்கள்—உடை மட்டும்தானே காவி! உள்ளமோ அரசியலில் ஆதிக்கம் பெற வேண்டும் என்பதல்லவா!

"ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு" இது ஏமாளிக் கொக்கு அல்ல, உறுமீன் வருமளவும் ஓடுமீன் உண்டு, காத்துக்கொண்டிருந்தது!

லூகான் நகர தேவாலயம் ஆண்டுக்கு 13000 லிவர்ஸ் (பிரன்ச்சு பவுண்டு) வருமானமே உடையது. இந்த அற்பத் தொகைக்காக அல்ல, ரிஷ்லு ஆசைப்பட்டது! அவன் மனதிலே உலவிய எண்ணத்தின் முன்பு, இந்தத் தொகை வெறும் தூசு. பலருடைய கவனத்தைக் கவருவதற்கு இந்த இடம் ஒரு வாய்ப்பாக இருக்கட்டுமே என்பதற்காகவே, லூகான் தேவாலய வேலையை ஏற்றுக்கொண்டான்.

பழைய கட்டடம்—படாடோபம் கிடையாது—அதிகமான பணப் புழக்கம் இல்லை—தங்க வெள்ளி தட்டுகள் இல்லை

—பட்டு விரிப்புகள் கிடையாது—சாமான்யமான நிலை, லூகான் நகர தேவாலயம். இதிலே உலவியபோது ரிஷ்லு வின் உள்ளம், அடைபட்டுக்கிடந்த சிங்கம்போன்றிருந்தது. கூண்டுக்குள் உலாவிடும்போதும், சிங்கத்தின் நடையிலே ஒரு கெம்பீரம் இருப்பதுபோல, இந்தச் சாமான்யமான தேவாலய அதிபர் எனும் சிறையிலும், ரிஷ்லு, தன் திறம் பிறர்க்கு விளங்கும் வகையிலே நடந்துகொண்டான்.

"என் வீடு சிறைபோன்றது! பூந்தோட்டம் இல்லை—உலவும் இடம் கிடையாது—எங்கும் புகைமயம்—வெள்ளித் தட்டுகள் இருந்தாலாவது பரவாயில்லை, கிடையாது"...என்று ரிஷ்லு, குறைபட்டு, நண்பருக்குக் கடிதம் எழுதினான்.

அதே ரிஷ்லு, கார்டினல் ரிஷ்லுவாகி, பிரான்சை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் பெற்றபிறகு, புதிதாகக் கட்டிய 'கார் டினல் மாளிகை'க்கு, நிலத்தைப் பண்படுத்தவும், மாடிகள் அமைக்கவும் மட்டும் 336,000 லிவர்ஸ் செலவிட்டான்! கட்டிடச் செலவு 410,000! அலங்கார அமைப்புகள், நீர் ஊற்றுகள், பூச்செடிக்கான தொட்டிகள் இவற்றுக்காக மட்டும் 60,000 !

உலவ இடமில்லை என்று வாட்டம்—பிறகு, உலவ நேர மில்லை என்ற வருத்தம். மன்னன் கண்டு அதிசயிக்கத்தக் கதும், பிரபுக்கள் கண்டு பொறாமைப்படத்தக்கதுமான மாளிகை இரண்டு அமைத்திட முடிந்தது, புகை கப்பிக் கொண்டு, ஓதம் நிறைந்து, சோகமூட்டும் நிலையிலிருந்த தேவாலய அதிபராக வாழ்க்கையைத் துவக்கிய இந்தக் காரியவாதியால்!

* * *

**ரோ**ம் நகரில் மார்க்கத் துறையினரின் மந்திராலோசனை களைக் கேட்டுப் பழகிய ரிஷ்லு, பாரிஸ் பட்டினத்துப் படாடோபத்தைக் கண்டு பழகிய ரிஷ்லு, சேறும் சகதியும், நிரம்பிய லூகான் நகரின் தோற்றத்தையும் அங்கு உலவிய

மக்களின் எளிய வாழ்க்கையையும் கண்டு, எப்படி மன அமைதி கெடாமலிருக்கமுடியும்! பாரிசின் பகட்டு எங்கே, இந்தப் பட்டிக்காட்டிலே கிடைக்கும் சோர்வுஎங்கே! வெறுப்பும் சலிப்பும், எவருக்கும் தோன்றும். ரிஷ்லு, அதற்கு இடம் தரவில்லை. அழைப்புக்கிடைக்குமட்டும் இந்த எளிய நிலை! இந்த எளியநிலையிலும், உயரிய முறையைக் காட்டியாக வேண்டும் என்று எண்ணினன். அழைப்பு வந்தது! அரசாண்டுவந்த அம்மையிடமிருந்து அல்ல! அம்மையை 'ரசித்து'வந்த இத்தாலியனிடமிருந்துமல்ல! அரசியல் நிலைமை, அழைப்புவிடுத்தது! பிரான்சு, தன் பேரவையை, முப்பெருமன்றத்தைக் கூட்டிட முனைந்தது. பெரியதோர் மேகம் அரசியல் வானில்! ரிஷ்லு, தன் சமயம் பிறந்ததுஎன மகிழ்ந்தான்.

பிரபுக்கள்—அருளாளர்கள்—மக்கள். சமுதாயம்,இப்படி முப்பெரும் பிரிவு கொண்டதாகக் கருதப்பட்டது. பிரான்சு அரசியல் அமைப்பில், பிரபுக்களின் பிரதிநிதிகள், மார்க்க அதிபர்களின் பிரதிநிதிகள், மக்களின் பிரதிநிதிகள், எனும் முப்பெரும் பிரிவும் ஒரு சேரக் கொண்ட பேரவை, பிரான்சு நாட்டு அரசியல் நெருக்கடிகளின் போது, கூட்டப்படும். கரத்திலே வலிவும், கருத்திலே முறுக்கும் இருக்குமட்டும், பேரவை பற்றிச் சட்டை செய்வதில்லை, மன்னன்—மமதை ஒன்றே போதும்; அதை ஊட்டச் சில செருக்குமிக்க பிரபுக்கள் போதும், எதிர்ப்பை ஒழிக்க சிறுபடை போதும் என்று இருப்பான்—குழப்பம் நாட்டிலும் மனதிலும் மூண்டுவிட்ட சமயத்தில், என்ன செய்வது என்று திகில் பிறக்கும்போதுதான் மக்களின் குரல் செவியில் சிறிதளவுவிழும்; மக்களோ "பேரவை கூடட்டும்" என்றுதான் முழக்கமிடுவர்.

எல்லா உரிமைகளையும் வழங்கவும் பாதுகாக்கவும் நாட்டின் பொதுநிலையைப் பாதுகாக்கவும், ஆற்றல் கொண்டது பேரவை, என்ற எண்ணம் பிரான்சு மக்களுக்கு. அவர்கள் எண்ணியபடியே, இந்தப் பேரவைகூடி, எடுத்த முடிவுகளின்படிதான், 'பதினலாம் லூயி மன்னன் காலத்திலே மாபெரும் புரட்சி வெற்றிகரமாக்கப்பட்டது. அது, மன்னனின்

தலையைக் கொய்த பேரவை! இது அலங்காரப் பேரவை! இந்தப் பேரவையும் கூட்டவேண்டி நேரிட்டதற்குக் காரணம் அரசாண்டுவந்த மேரி அம்மைக்கும், அரசகுடும்பத்துடன் நெருங்கிய உறவுகொண்ட பிரபுக்கள் சிலருக்கும் மூண்ட பகை, பெரு நெருப்பாகிப் பிரான்சைப் பொசுக்கிவிடுமோ என்ற கிலி பிறந்தது தான்!

பிரான்சு நாட்டுப் பிரபுக்கள்—உலகத்துக்கே ஜனநாயகத்தை வழங்கிய வள்ளல்கள்!

இந்தப் பிரபுக்களின் அட்டகாசமும் வரட்டு ஜம்பமும் குரூரமும் மடைமையும் கொலைத் தொழிலும் சதிச் செயலும், ஏழையரை இம்சித்ததும் எளியோரை அழித்ததும், பருகிய மதுவும், பதம்பார்த்த கன்னியரின் கற்பும், இவர்களின் கோலாகலம், கிளப்பிய வெறுப்புணர்ச்சியுந்தான் பிரான்சிலே மட்டுமல்ல, ஐரோப்பா முழுவதும், உலகிலேயே என்றும் கூறலாம், மக்களை நிமிர்ந்து நின்று ஏன் என்று கேட்டு, உள்ள உயிர் ஒன்றுதான் அது பிரிவதும் ஒரு முறைதான், சாகுமுன் உன்னைச் சாய்த்திடப் போரிட்டே தீருவேன் என்று வீர முழக்கமிட்டுப் புரட்சி நடத்தி, மக்களாட்சியை ஏற்படுத்த உதவிற்று! இந்தப் பிரபுக்கள், தர்மம், தயை, தாட்சண்யம், அறிவு, ஆற்றல், அன்பு, நன்றி, எனும் பண்புகளுடன் நல்வழி நடந்திருந்தால், மக்களாட்சி மலருவது மூன்று நான்கு நூற்றாண்டுகளாவது தாமதப்பட்டிருக்கும். காட்டிலிருக்கும் புலி, ஊருக்குள் நுழைந்து ஆடுமாடுகளைக் கொன்று, மேலும் கொல்ல ஊர்க் கோடிக் கொல்லையிலே பதுங்கிக் கொள்ளும் போதுதானே ஊரார் திரண்டு சென்று, உயிருக்குத் துணிந்து நின்று, புலியைக் கொன்று போடுவர். பிரான்சின் பிரபுக்கள், புலிகளாயினர்—குகைக்குள்ளேயும் இல்லை—எதிர்ப்பட்ட ஏழைகளின் இரத்தத்தை உறிஞ்சினர்—எனவேதான், மக்களாட்சி மலரமுடிந்தது. ஆட்சி என்பது அனைவருக்கும் பொதுவான உரிமைதானே, நாடு என்பது அனைவருக்கும் பொதுதானே, நாட்டுவளம் பெருகுவதும், எதிரிகளிடமிருந்து நாடு காப்பாற்றப்படுவதும் எல்லா மக்களின் ஒன்றுபட்ட திறமையாலும் உழைப்பாலும்

தானே, எனவே மக்கள் அனைவருக்கும்தானே அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படவேண்டும், என்ற தத்துவப் பேச்சு மட்டுமல்ல, மக்களாட்சியை மலரச்செய்தது! பிரபுக்களின் அக்ரமம், புரட்சியை மூட்டிற்று, புரட்சித் தீயிலிருந்து மக்களாட்சி மலர்ந்தது! அந்த முறையின்படி, பிரான்சின் பிரபுக்கள், உலகுக்கு ஜனநாயகத்தை வழங்கியவர்களாவர்.

1,40,000 பிரபுக்கள் இருந்தனர், பிரான்சில்! எல்லோரும் செல்வச் சீமான்களல்ல, பலர் ஆடி அழிந்ததால் கடன் பட்டுச் சொத்தை இழந்துவிட்டு, விருது மட்டும் வைத்துக் கொண்டு வெட்டிகளாகத் திரிந்தனர். இருபது முப்பது குடும்பம், செல்வமும் செல்வாக்கும் நிரம்பப் பெற்று, அரசு செலுத்துபவரும் அச்சம் கொள்ளத்தக்க ஆர்ப்பரிப்புடன் இருந்து வந்தது. அவர்களுக்குத் தனிக் கோட்டைகள், கொடி மரங்கள், படைகள், பாசறைகள்—ஒருவருக்கொருவர் போரிட்டுக் கொள்வர், அரசனால் தடுக்கமுடியாது, அரசனையே எதிர்ப்பர், அரசன் அவர்களை அடியோடு அழிக்க முடியாது. அவர்களுக்குத் தனி விசாரணை மன்றங்கள்! தனிச் சட்ட திட்டங்கள்! அரசுக்குள் ஓர் அரசு! பாரிசில் ஒரு பட்டத்தரசன் என்றால், பிரான்சிலே பகுதிக்குப்பகுதி, பட்டத்தரசர்களைவிடக் கொட்ட மடித்துக் கொண்டு பிரபுக்கள் கோலோச்சி வந்தனர். வரி செலுத்தமாட்டார்கள், அரசனுக்கு, தமது 'பிரஜைகளிடம்' வரிவசூலிப்பார்கள் கண்டிப்புடன். மன்னன், சலுகைகள் காட்டுகிறவரையில் சல்லாபம் செய்வர், சலுகை குறைந்தால், சதியோ, சமரோ கிளம்பும்! அரச விருந்துகளிலே முதலிடம்! கேளிக்கைக் கூடங்களுக்கு அழைப்பு! உல்லாசப் பயணத்துக்கு வருவர்! நாட்டுக்குப் பேராபத்து எனில், வரிந்து கட்டிக் கொண்டு எதிரியைத் தாக்குவரோ? இஷ்டமிருந்தால்! எதற்கும் கட்டுப்படமாட்டார்கள்! ஒருசில கண்வெட்டுக்காரிகளுக்கு மட்டுமே கட்டுப்படுவர்!! உட்பகை நெளியும்! ஒரு மாளிகை பற்றி மற்றோர் மாளிகையிலே வம்புப் பேச்சுத் தாராளமாக நடைபெறும். அவள், எனக்கா, உனக்கா? என்று அமளிகிளம்பும், சிறை எடுத்தல், சிரம் அறுத்தல், இவை அன்றாட நடவடிக்கைகள்.

"என் பரம்பரையை இழிவாகப் பேசினாயா? நாளைக் காலை 8 மணிக்கு, வாட்போர். தயார் - திராட்சைத் தோட்டத் தருகே—8 மணி" என்று அறைகூவல் கிளம்பும், இரு பிரபுக்கள் வாட்போரிடுவர், ஒரு தலை உருளும், மற்றொரு மண்டை கனம் கொள்ளும்! பிரபுக்களின் பொதுநிலை இது. ஒரு சில பிரபுக்கள், அரசியல் அதிகாரம் தேடுவர்—திறமை இருப்பதால் அல்ல ஆசை பிறப்பதால்! கிடைக்காவிட்டால், கலகம், குழப்பம்! இப்படிப்பட்ட பிரபுக்களிடையே, மேரி சிக்கிக் கொள்ள நேரிட்டது.

இத்தாலி நாட்டு கான்சினியும் மேரியும் அவர்களின் ஆதரவாளர்களும் ஒருபுறம்.

காண்டி எனும் பிரபுவும் அவனை ஆதரிக்கும் சீமான்களும் மற்றோர்புறம்.

காண்டி சீமானுக்கு, எவ்வளவு சலுகை காட்டினாலும் திருப்தி கிடையாது—கான்சினி தொலையவேண்டும், மேரி அம்மைக்குத் துணைபுரியும் வாய்ப்புத் தனக்கே அளிக்கப்பட வேண்டும், என்பது காண்டியின் கட்டளை! மரியாதைக்காக வேண்டுகோள் என்றனர். காண்டி, கட்டளைதான் பிறப்பித்தான்.

குழப்பம் வலுத்தது—எனவே பேரவை கூட்டப்பட்டது.

பேரவை கூடுவது பெரிய திருவிழாவாயிற்று. எல்லாச் சிக்கல்களும் தொல்லைகளும் தீர்ந்துவிடும் என்பது, பாமர மக்களின் எண்ணம். எனவே அவர்கள் பேரவை கூடுவதை வரவேற்றனர்! மதத்துறையினருக்கும் மகிழ்ச்சி, தமது உரிமைகளை வலியுறுத்தவும் தமது ஆலோசனைகளை அரசினர் கேட்பதுதான் அறமுறை என்று எடுத்துரைக்கவும் வாய்ப்பு, என்ற எண்ணத்தால். பிரபுக்களுக்குப் பூரிப்பு, தமது அந்தஸ்தையும் அதிகாரத்தையும் அரசாளும் அம்மை அறிய இது பொன்னான வாய்ப்பு என்று. மக்கள் மன்றத்தினருக்கும் நம்பிக்கை, தங்கள் நலன் பற்றி நல்லவர்களெல்லாம் கூடிக் கலந்து பேசி, திட்டம் தீட்டுவர் என்று. ரிஷ்லுவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி, நுழைய இடம் கிடைத்தது என்று. பேர

வைக்கு மதத்துறைப் பிரதிநிதியாகச் சென்று தன் திறமை யைப் பிரான்சு உணரும் வண்ணம் நடந்து கொள்வது என்று தீர்மானித்தான். தான் வசித்து வந்த வட்டாரத்திற்கு, மத அலுவலர்களின் பிரதிநிதியாக, ரிஷ்லு தேர்ந்தெடுக்கப் பட்டான்! தேர்ந்தெடுக்கும்படி, ரிஷ்லு நிலைமையைச் சிரமப் பட்டு உண்டாக்கி, வெற்றி பெற்றான். அழைப்புக் கிடைத்து விட்டது! அழைப்பு, தயாரித்துக் கொண்டான்! பாரிஸ் புகலானான்!

ஊர் மக்கள் இரு மருங்கும் திரண்டு நின்றனர்—பாது காப்புக்கும் பகட்டுத் துலங்கவும். பேரவை ஊர்வலம் அழகுறக் கிளம்பிற்று. முப்பெரும் பிரிவினரும் கலந்து கொண்டனர்.

அன்பை அடிப்படையாகக் கொண்டல்லவா அரசாள வேண்டும்? அந்த அன்பு சுரக்கவேண்டும், ஆட்சிப்பொறுப் பில் உள்ளவர்களுக்கும், ஆட்சிமுறை வகுப்பவர்களுக்கும். இதற்காக ஒரு விசித்திரமான ஏற்பாடு!

குருடன், காலிழந்தோன், முடமானோன், தொழு நோயான், பஞ்சை பராரி ஆகியவர்கள், முதலில் ஊர்வலம் சென்றனர். கந்தலணிந்த அந்தக் கதியற்றவரின் நிலையைக் கண்டதும் கண்களிலிருந்து நீர்சுரக்கும், கருணையும் மனதில் பிறக்கும் என்று இந்த ஏற்பாடாம்! இது நெடுங்கால வழக்க முங்கூட!

இந்தத் 'தரித்திரர்' ஊர்வலம் முதலில். பிறகு, பேரவை கிளம்பிற்று, தேவலாயத்திலே பூஜை முடித்துக்கொண்டு!

கரங்களில் மெழுகுவர்த்தி விளக்குகளுடன், மக்கள் மன்ற உறுப்பினர்கள்!

இடையில் வாளும், மேலே பட்டுப் பட்டாடையுடனும், பிரபுக்களின் உறுப்பினர்கள்.

விதவிதமான ஆடைகளும் அங்கிகளும் அணிந்த, மத அலுவலரின் பிரதிநிதிகள்.

மன்னன், தாயும், பரிவாரமும் புடைசூழ!

1614-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 26ம் நாள் காலை! இந்த நாள் முழுவதும், ஊர்வலமே, பெரிய நிகழ்ச்சியாக இருந்தது. ஊர் மக்களின் உள்ளத்தில் பலபுதிய நம்பிக்கை—மகிழ்ச்சி.

மறுநாள், 'போர்போன்' மாளிகையில் பேரவை கூடிற்று.

அலங்கார மேடைமீது, சிங்காதனம்—அதன்மீது வெண் பட்டாடை அணிந்து மன்னன் வீற்றிருந்தான். மேரி அம்மையும், தர்பார் பெண்களும், பரிவாரமும் மன்னருக் கருகில். மன்னன் முகத்திலே தெளிவோ, திருப்தியோ, இல்லை! இளைத்துக் களைத்து, ஏதும் புரியாத நிலையில் மன்னன் வீற்றிருந்தான்! என் செய்வான் மன்னன்! வயது பதின்மூன்று!!

ரிஷ்லுவின் கூர்மையான கண்கள், நிலைமையைப் படம் பிடித்து விட்டன.

அறியாச் சிறுவன் அரியாசனத்தில்—அவனைக் காட்டி அரசாளும் அம்மை, ஆனால் அதிகார மோகமிக்கவள். உல்லாசத்திற்கு அரண்மனை ஏற்ற இடம் என்பதை மட்டுமே உணர்ந்த கான்சினி, அந்தஇடம் தங்களுக்கு எப்போது கிடைக்கும் என்று ஆவலுடன் இருந்த பிரபுக்கள், கருணை பிறக்கும் கஷ்டம் தீரும் என்று நம்பிக் கிடக்கும் மக்கள் மன்றத்தினர் இது பிரான்சு!—ரிஷ்லுக்குப் புரிந்துவிட்டது.

மன்னன், துவக்க உரையாற்றினன்—ஆர்வமற்று.

பிறகு, இடிமுழக்கம் எழும்பின, பலரிடமிருந்து.

பிரபுக்கள் சீறினர்—பாதிரிகள் பதறினர்—மக்கள் மன்றத்தினர் மன்றாடினர்—எவரும், இன்னது தேவை, இப்படி இதனை இன்னார் செய்ய வேண்டும் என்று தெளிவுபட எடுத்துக் கூறினாரில்லை. பிரபுக்களின் பேச்சிலே பதட்டம்! பூஜாரிகள் பேச்சிலே மிரட்டல்! மக்கள் குரல், தெளிவும் உறுதியும் பெறவில்லை.

முப்பெரும் பிரிவினர் ஒருவருக்கொருவர், கலந்து பேசும் நிலையிலோ ஒன்றுபட்டுத் திட்டம் தரும் திறத்திலோ இல்லை. ஒருபுறம்முரசம், மற்றோர்புறம் சங்கநாதம், இன்னோர் புறம்

22140

முழவு! ரிஷ்லுவுக்கு நம்பிக்கை பலப்பட்டது. இதுதானே பிரான்ஸ், இவர்கள்தானே இதன் நடுநாயகங்கள். ஒரு கை பார்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை.

மன்னனைக் கூர்ந்து நோக்கினான்—கண்களிலே அறிவு ஒளியின் குறியே காணோம். எங்கேயோ நினைப்பு! மன்னனுக்கு எந்தத்துறையிலே விருப்பம் அதிகம் என்று உசாவினான். வேட்டை ஆடுவதில் என்றனர்.

காண்டி பிரபுவுக்குச் சப்பிட்டுவிட்டது. பேரவை கூடியதும், பலரும் கான்சினியைக் கண்டித்து விட்டு, அதிகாரப் பொறுப்பைக் காண்டிபிரபுவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறுவர், என்று எதிர்பார்த்தான்—யாரும் அது குறித்துப் பேசவில்லை. அவரவர்களுக்கு அவரவர்களின் பிரச்னை தான் பெரிதாகத் தென்பட்டது, பொதுப் பிரச்னை எது என்பதும் புரியவில்லை. நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் ஆற்றலும் காண்டி பிரபுவுக்கு இல்லை. ஒருவரிருவர் மேரி அம்மையின் ஆட்சிப் போக்கைக் கண்டித்தனர்—பரிகாரம் கூறவில்லை. ரிஷ்லு, மேரி அம்மையைக் கண்டித்தவருக்குச் சுடச்சுடப்பதில் கொடுத்து, மேரி அம்மையின் பார்வையைப் பரிசாகப் பெற்றான்.

பொருளற்ற பேச்சுகள் ஒன்றை ஒன்று துரத்தின—பேரவை வீண் ஆரவாரமே என்பது புரியத் தொடங்கி விட்டது. நாட்கள் உருண்டோடின. திங்கள் சிலவும் சென்றன. ரிஷ்லு மத அலுவலர்களின் சார்பிலே பேச அழைக்கப்பட்டார். மேரி அம்மையின் தயவே அதற்குக் காரணம், ஜனவரி 24-ம் நாள், ரிஷ்லு பேரவையில் ஆழ்ந்த பொருள் நிரம்பிய சொற்பொழிவு நிகழ்த்தி அனைவருடைய கவனத்தையும் தன்பால் திருப்பிக் கொண்டார். ஒரு மணி நேரச் சொற்பொழிவு—ஒரு துளியும் மார்க்க சம்பந்தமானதல்ல—முழுவதும் அரசாளும் முறைபற்றியது. ரிஷ்லு அந்தப் பேச்சின் மூலம், மேரி அம்மைக்குத் தன்னையும் தன் ஆற்றலையும், நோக்கத்தையும், திட்டத்தையும் விளக்கிக் காட்டினார்.

ஆண்டவன் அளித்த பிரசாதம், அரசாளும் உரிமை,

எனவே அரசாள்வோருக்கு அன்பும் மரியாதையும் அப்பழுக்கின்றித் தரப்பட வேண்டும்.

ஆண்டவன் சார்பிலேயே அரசாள்வோர், பணிபுரிகின்றனர். எனவே, அரசாள்வோரின் அதிகாரம், பலம் தலை சிறந்து விளங்கவேண்டும்—அதைக் குலைப்பதோ, எதிர்ப்பதோ பாபம், கேடு, நாட்டுக்கு நாசம்.

ஆண்டவன் அளித்த உரிமையைக் கொண்டு அரசாள்கின்றனர். எனவே அரசாள்வோர், ஆண்டவனுடைய அருளைப் பெற்று, ஆட்சி முறையைச் சிறப்புடையச் செய்தல் வேண்டும்.

ரிஷ்லுவின் பேச்சிலே காணக்கிடக்கும் முக்கியமான கருத்து இது! ஆள்வோரின் உரிமை, அதிகாரம்—அதை அருளாளர்களின் துணை கொண்டு அரண் செயல் வேண்டும்—என்பதுதான் தத்துவம். நான் இருக்கப் பயமேன்! என்று கேட்பதாக அமைந்தது, அந்தப் பேச்சு. பேரவையினர், முதலில் மகிழ்ந்தனர், பேச்சின் தெளிவும் திறமும் கண்டு; பிறகோ மருண்டனர், உட்பொருள் புரிந்தவர்கள். மேரி அம்மையின் மனதிலே, ரிஷ்லு நமக்குற்ற நண்பன் என்பது பதிந்து விட்டது—ரிஷ்லுவுக்கு அது புரிந்து விட்டது. பேரவை பயனற்றுப் போயிற்று என்று பலர் மனம் வாடினர். குறிப்பாகப் பேரவையைக் கூட்ட பெருமுயற்சி எடுத்துக் கொண்ட காண்டி பிரபுவுக்கு, சகிக்க முடியாத சலிப்பு. பேரவை, பெரியதோர் வெற்றி—ஆண்டு பலவாக நான் உழைத்தது வெற்றி தருகிறது, என் குரல் கேட்டு விட்டது—மேரி அம்மையாரின் மனதிலே என்பேச்சுப் பதிந்துவிட்டது-இனி அம்மைக்கு அரசியல் ஆபத்து நேரிட்டது என்ற உடன் எனக்குத்தான் அழைப்பு வரும். இனி, என் அரசியல் நுழைவு உறுதிப் படுத்தப்பட்டு விட்டது—என்று ரிஷ்லுவுக்குக் கூறிக் கொள்ள முடிந்தது. யாராலோ எதற்கோ கூட்டப் பட்ட பேரவை, ரிஷ்லுவுக்குத்தான் பெரிதும் பயன்பட்டது. பிரான்சும் புரிந்து விட்டது, அதை ஆளும் முறையும் ரிஷ்லுவுக்குப் புரிந்து விட்டது.

தன் சொற்பொழிவை, ஏராளமான பிரதிகள் அச்சிட்டு வழங்கினுன் ரிஷ்லு. பாராட்டினர் பலர், பூரித்தான். பயணம் சொல்லிக் கொண்டு, பாரிசை விட்டுப் புறப்பட்டு, லூகான் வந்து சேர்ந்தான்—தன் தேவாலயத்தைக் கவனிக்க!!

பேரவையால் ஆபத்து உடனடியாக ஏற்படாது, எனினும் பேரவையில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், தத்தமது ஊர் திரும்பியதும், தீமூட்டிவிடுவர்—எனவே பேரவையைக் கூட்டாமலிருப்பதே நல்லது என்று மேரி தேவிக்கு நண்பர் ஒருவர் கூறினுர்.

அவர் எச்சரித்தது உண்மையாயிற்று. பிரான்சு முழுவதிலும், கலகவாடை வீசலாயிற்று. கூடிப்பேசிக் காரியமேதும் ஆற்ருது கலைந்த பேரவையினர், தத்தமது மனம் போன போக்கில் ஆட்சிமுறைபற்றிக் குறை கூறியும்எதிர்ப்பு மூட்டியும் வரலாயினர்.

காண்டிபிரபு நெரித்த புருவத்துடனேயே காணப்பட்டான். அவனுக்குத் தூபமிட்டுக் கொண்டும், துதிபாடிக் கொண்டும் சீமான்கள் சிலர் இருந்தனர்.

கான்சினியோ, பேரவை கூடியும் தன்னை அசைக்கவும் முடியாமற் போனதை எண்ணிப் பெருமிதமடைந்தான்.

மேரியோ பூசலும் சிக்கலும் தீராததுடன், மேலும் வளருவது கண்டு திகைத்துக் கிடக்க நேரிட்டது.

மன்னனே, பேரவை கலைந்ததும் தொல்லை விட்டது என்று எண்ணித் தனக்குப் பிரியமான வேட்டையில் ஈடுபடலானுன். நாலு நாள், ஐந்து நாள் தொடர்ந்து வேட்டையாடி வருவதிலே மன்னனுக்கு விருப்பம். அந்த ஒரு பொழுது போக்கிலேதான் அவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பல வண்ணப் பறவைகளைத் துரத்தித் துரத்திப் பிடிப்பதிலும், வேட்டையாடுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்ட பெரும் பறவைகளைக் கொண்டு வேறுபறவைகளை வளைத்துப் பிடிப்பதும், அழகான பறவைகளைக் கொண்டு வந்து அரண்மனையிலே வளர்ப்பதும் மன்னனுக்கு மகிழ்ச்சியூட்டும் விளையாட்டு. மன்னனு

டைய தனி அறையே, பறவைக் காட்சிச் சாலையாக இருந்த தாம்! அங்கு முற்றத்திலும் தாழ்வாரங்களிலும், மன்னனு டைய பறவைகள், ஒன்றேடொன்று ஆடியும். கூடிப் பாடியும் வேட்டையாடியும் பொழுது போக்கும், மன்னன் இந்தக் காட் சியில் சொக்கிக் கிடப்பான்.

மாடப்புறு போன்றதோர் மங்கை நல்லாளை மணந்த பிற கும், மன்னன், பறவைகளுடன் விளையாடிப் பொழுது போக்கு வதையே பெரிதும் விரும்பினன். ஆண்டு பதினைந்தே நிரம் பிய ஆன் அழகி, அரசிளங் குமரி—காதலின்பத்தைத் தர வல்ல அந்தக் காரிகை, தனிமையில் வாடுவாள், மஞ்சத்தில் சோர்ந்து சோர்ந்து படுத்துக் கிடப்பாள்; மன்னனே, தன் நண்பனுடன், பறவைகளின் சிறகொலி கிளப்பும் இசையின் நேர்த்தி பற்றியும், வேட்டையாடும் திறம்பற்றியும் மணிக் கணக்கில் பேசிக்கொண்டிருப்பான். அந்த நண்பன், பறவை களின் சம்பந்தமான நுண்கலை நிபுணன்—வேட்டைக் கலையில் புலமை மிக்கவன்! ஊர் அங்ஙனம் கருதிற்றே இல்லையோ, மன்னன் நம்பினன்; அதற்காக லெனிஸ் எனும் அந்த நண்ப னிடம், மன்னன் அளவற்ற மதிப்பு வைத்திருந்தான். மன்ன னுக்கு லெனிஸ் உயிர்த் தோழனுனன். மன்னன் அவன் சொற்படி ஆடத் தொடங்கியது, மேரிக்கு மன எரிச்சலைத் தந்தது. இந்தப் 'பாதகன்' மகனைத் தனக்கு எதிராகக் கிளப்பி விடுவானே என்று அஞ்சினள். அரண்மனை வட் டாரமோ, மேரியை ஆட்டிப் படைக்க ஒரு கான்சினி—அர சனை ஆட்டிப் படைக்க ஒரு லெனிஸ்—நல்ல நிலைமை, நல்ல அரசு முறை என்று வெறுப்புடன் பேசிக்கொண்டனர்.

கான்சினி, செருக்குமிக்கவன், லெனிஸ் சூதுக்காரன்! ஏதுமறியாதவன் போல நடித்து வந்தான்—அழகிய பறவை களுடன் பழகத் தெரியுமே தவிர, அரசியல் சூட்சமம் தெரி யாது என்று எவரும் எண்ணும்படி நடந்து வந்தான். ஆனல் மெள்ள மெள்ள, மன்னனைத் தன் வலைக்குள் போட்டுக் கொண்டான். கான்சினியிடம் மன்னனுக்கு இருந்துவந்த வெறுப்பை அதிகமாக்கி விட்டான். ஆளும் பொறுப்பை இனி இத்தாலிய கான்சினியிடமும் மேரியிடமும் விட்டு வைப்

புது கூடாது, நாமே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டும், நமக்கு லூனிஸ் துணை நிற்பான் என்ற எண்ணம் மெள்ள மெள்ள மன்னன் மனதிலே உருவெடுக்கலாயிற்று.

மன்னனுடைய திருமண ஏற்பாடு மேரியின் வெற்றி களில் ஒன்று என்று கருதப்படுகிறது.

மேரி, மெடிசி குடும்ப முறைப்படி தன் பெண்களைத் திரு மணம் செய்து கொடுப்பதிலும், மருகனைத் தேடிக் கொடுப் பதிலும், திறமையைக் காட்டினாள்.

ஒரு மகள், ஸ்பெயின் நாட்டு இளவரசனை மணந்தாள்.

மற்றோர் மகள், இங்கிலாந்து நாட்டு மன்னன் மனைவி யானாள்.

மூன்றாம் மகளை சவாய் அரச பரம்பரையில் திருமணம் முடித்தாள். ஆஸ்திரிய அரசிளங்குமரி ஆன், லூயிமன்ன னுக்கு மனைவியாக வாய்த்தாள். இந்தத் திருமண காரியத் துக்கு, உடன் வரும்படி காண்டி பிரபுவுக்குக் கட்டளை பிறந் தது. பிரபு மறுத்து விட்டான். அழைத்ததும் உபசாரத்துக் காக அல்ல, மறுத்ததும் அரசியல் நோக்கு அற்று அல்ல! வெளிநாடு சென்று வருவதற்குள், காண்டி, பாரிஸ் புகுந்து கலாம் விளைவித்தால் என்ன செய்வது என்று எண்ணிய மேரி காண்டிபிரபுவை, தன் பரிவாரத்துடன் அழைத்துச் சென் றால், பயமற்றிருக்கலாம் என்ற எண்ணத்தால், அழைப்பு அனுப்பினாள்-பிரபுவும் இந்தச் சூட்சமம் அறிந்தே உடன்வர மறுத்தான். இதனால் இரு தரப்பினருக்கும் சிறு சமர் மூண் டது-வெற்றி தோல்வி யின்றி, சமர் சாய்ந்தது.

இந்நிலையில் பாரிஸ் இருந்து வந்தது-ரிஷ்லு எதிர் பார்த்த நேரம் வரவில்லை.

காண்டி பிரபுவுக்குப் பல சலுகைகள் காட்டி, மேரி, சமரசம் உண்டாக்கினாள்-பிரபுவும், அரச காரியத்தை உடனி ருந்து கவனிக்க அரண்மனை சென்றான்.

மேரிஅம்மையின் தயவு பெற ஒருபுறம் பலமான முயற்சி, கான்சினியின் ஆதரவு தேடி வேறோர்புறம் முயற்சி,

இரண்டும் போதாதோவென்று, புதிதாகச் செல்வாக்குப் பெற்றுவரும் காண்டி பிரபுவிடம் ஆதரவு நாடி, ரிஷ்லு கடிதம் தீட்டினன். எவரிடமும் உள்ளன்போ, மதிப்போ, எவர் கொள்கையிலும் திட்டத்திலும் பற்றோ நம்பிக்கையோ அல்ல; யாரைப் பிடித்தால் தனக்குச் சரியான இடம் கிடைக்கும், யாரிடம் திறவுகோல் இருக்கிறது, யாருடைய புன் சிரிப்பு, அரசியல் வாய்ப்பளிக்கக்கூடியதாக இருக்கிறது என்ற இதுவே, ரிஷ்லுவின் உள்நோக்கம். எனவேதான், மேரி, கான்சினி, காண்டி எனும் எவர் நிலை எப்போது உயர்ந்து காணப்பட்டாலும், அவர்களிடம் குழைந்து கும்பிட்டுக் குறுநகை கோரி நிற்க ரிஷ்லு முனைந்தான். சொந்தக் கௌரவம், முன்பின் நடவடிக்கைகளைக் கணக்கிடும் பண்பு என்பதுபற்றி ரிஷ்லுவுக்குக் கவலை கிடையாது. எதைச் செய்தாலும், கோரிய இடத்தைப் பிடிக்க வேண்டும்-கணை வீசிப் பிடிக்கலாம்; வலை வீசியும் பிடிக்கலாம்; முறை எதுவாக வேனும் இருக்கலாம்; பலன் கிட்டவேண்டும் என்பதுதான் ரிஷ்லுவின் எண்ணம்.

இந்தச் சந்தர்ப்பத்தில், மேரி, ரிஷ்லுவை, ராணி ஆனுடைய தர்மாதிகாரியாக நியமித்தார்.

❋ ❋ ❋

பிரான்சு அரச குடும்பத்திலும், பிரபு குடும்பங்களிலும், தர்மகாரியத்துக்கென்று அவரவர்களின் நிலைமைக்கு ஏற்ற அளவு தொகை ஒதுக்கித்தரப்படும்—இந்தத் தொகையைத் தக்க முறையில் பகிர்ந்தளிப்பதற்குத் 'தர்மாதிகாரி' நியமிக்கப்படுவதுண்டு.

ரிஷ்லுவுக்கு அந்தவேலை கிடைத்தது. சாதாரணமான வேலைதான்—அரசியல் அதிகாரம் கொண்டதல்ல—ஏழை எவர், எளியவர் யார், விதவையின் அழுகுரல் எங்கு கேட்கிறது, எந்தத் தேவாலயத்தில் அலங்கார விளக்கு இல்லை என்பன போன்றவைகளை அறிந்து, ராணி ஆன் வசம் உள்ள

தர்ம பணத்தை, தரம் பார்த்துத் தருகிற வேலைதான்! உண்டிப் பெட்டிக்கு அதிகாரி, ஊராளும் வேலை அல்ல. ஆறுயிரம் பவுன் சம்பளம்!

இது அல்ல, ரிஷ்லு எதிர்பார்த்தது, எனினும் "இதுவா என் திறமைக்கு ஏற்றது" என்று வெறுத்துத் தள்ளிவிடவில்லை. அரண்மனையில் நடமாடலாம்—அனைவரையும் கவனிக்கலாம், ராணி ஆன் மனமறியலாம், மன்னனையும் சந்திக்கலாம், அரசியல் சம்பவங்கள் சுழன்றுகொண்டிருக்கும் இடத்தில் இருக்கலாம்—சமயம் கிடைக்கும் என்று எண்ணி, தர்மாதிகாரி வேலையை இசைந்து ஏற்றுக்கொண்டான்.

அரண்மனையிலோ, சூழ்ச்சியும் சதியும் நிழலுருவில் காணப்பட்டன. மேரியின் அச்சம் அதிகரித்தது—லைனிசுக்கு மன்னன் மீதிருந்த பிடி, பலப்பட்டது. கண்ணீர் பொழிந்தாள் மேரி; அந்தக் கயவனை விட்டு விலகடா கண்மணி! என்று கெஞ்சினுள்—நீ, கான்சினியை விரட்டு! என்று வாயி கூறவில்லை, ஆனல் மனதிலே அதுதான் எண்ணம். "அன்னையே! பாசம் மறையுமா! யார் என்னுடன் தோழமை கொண்டாலும், தாயின் மனம் நோக நடந்துகொள்வேனு" என்று பேசினனே தவிர லைனிசை விடவில்லை மன்னன். மேரியின் மனம் முறியலாயிற்று.

கிடைத்த சலுகை போதாது என்று கோபத்தால், காண்டிபிரபு, மீண்டும் தன் கோட்டையிலே புகுந்துகொண்டு பகை கக்கிக் கொண்டிருந்தான்.

அரசிளங்குமரி ஆன், கொஞ்சுமொழி பேச நானிருக்கும் போது, பறவை உலகிலே பொழுது போக்கும் மன்னன், மரக் கட்டையா, மதியற்றவனு, அல்லது மாபாவி லைனிஸ் போடும் மாயப் பொடியில் மயக்குற்று விட்டானு, என்று எண்ணி ஏங்கிக்கிடந்தாள். அரண்மனையில் வாழ்ந்தாள்—இளமையும் எழிலும் கொண்டவள்—பட்டுப் பட்டாடை, அணிமணி அலங்காரம், சேடிகள், கீதமிசைப்போர், கிண்கிணி அணிந்தோர், பானமளிப்போர், பரதம் அறிந்தோர் எனும் விதவிதமான பரி

வாரம் இருந்தது—கணவன் காதலிக்கவில்லை—கல்லுருவிலும் இல்லை, காமாந்தகாரனாகவுமில்லை, தடிதாங்கியவனுமல்ல, இளைஞன், ஒத்த வயதினன், எனினும் அவள தன்னை நாடுவதில்லை, காதல் ஒளி அவன் கண்களிலே தெரிவதில்லை, தனி அறையில் தோழன் லைனிசுடன், என்ன மர்மப்பேச்சோ, என்ன இன்பப்பேச்சோ, மணிக்கணக்கில் பேசுகிறான். மலர் இங்கே வாடுகிறது, மணம் மாய்கிறது, அவன் அங்கே நள்ளிரவு நேரத்திலும் நண்பனுடன் பேசிக் களிக்கிறான்! என் செய்வாள் ஆன், ஏங்கினாள்! அழுதாள்.

காண்டி பிரபுவின் பகையைப் போக்கிச் சமரசம் உண்டாக்க, மேரி, ரிஷ்லுவை அனுப்பிவைத்தாள். ரிஷ்லுதான், முன்பே காண்டி பிரபுவுக்கு அன்பு ததும்பும் கடிதம் அனுப்பினவனாயிற்றே—எனவே, காண்டியிடம், பேசிச் சரிப்படுத்திவிட முடிந்தது. தனக்குச் சேவை செய்வதையே கொள்கையாகக் கொண்டவன் இந்த ரிஷ்லு, எனவே இவன் பேசுவதை நம்பலாம், என்று எண்ணினான். ரிஷ்லுவும், "எதிர் காலம்' சிறப்புடன் விளங்கும்! தங்களின் ஆற்றலை எதிர்த்து நிற்க வல்லவர் யார்? மேரி என்ன இருந்தாலும் பெண்! கான்சினியோ, களியாட்டத்தில் மூழ்கிக் கிடப்பவன்! மன்னனோ, விளையாட்டுச் சிறுவன்!" என்று பலப்பல கூறி மயக்கக் கூடியவன்தானே! என்ன நோக்கம்? காண்டிபிரபுவுக்கு அதிகாரம் கிடைக்கவேண்டும் என்பதா! செச்சே! அதற்கா இவ்வளவு பாடு! மேரி அம்மை உணரவேண்டும், நீண்ட நாள் பகையை, பிடிவாதத்தை, முரட்டுத்தனத்தை எவ்வளவு திறம்பட ரிஷ்லு முறித்துவிட்டான், இவனன்றோ இனி நமக்குத் துணையாக இருக்கவேண்டும். இவனிருக்க நாம் கான்சினியை நம்பிக் கிடக்கிறோமே, என்றெல்லாம் எண்ணிக் கொள்ள வேண்டும்! இதற்காகவே ரிஷ்லு, சமரசம் ஏற்படுத்திவைத்தான்—கபடம் அறியாத காண்டிபிரபு, பாரிஸ் வந்தான், அரண்மனை நுழைந்தான், அடையவேண்டிய பெரும் பேறு கிடைத்துவிட்டது என்று எண்ணிக் களிப்புற்றான்.

காண்டியின் கோலாகலம் வேகமாகத் துவங்கி, வெறி போல் வளர்ந்தது. யாரையும் சட்டை செய்யாத போக்கு!

எவரையும் எதிர்த்துத் தள்ளும் முறை! எவர் என்னை என்ன செய்யமுடியும் என்ற இறுமாப்பு! சிரித்துப் பேசுவோர், சிரம் அசைத்துக் கரம் நீட்டிடுவோர், புகழ் வீசி இலாபம் கேட்போர், இவர்கள் காண்டியின் பரிவாரம். பகலெல்லாம் விருந்து வைபவம்! இரவெல்லாம்? விவரம் கூற இயலுமா! காண்டியின் 'காட்டு முறை' பாரிஸ் அரண்மனை வாசிகளைக் கூடப் பயப்படச் செய்தது.

"மன்னனு!. வெறும் பொம்மை! தூக்கி எறிய எந்நேரம் பிடிக்கும்? அந்த அரியாசனத்தில் அமரத்தான் எவ்வளவு நேரம் பிடிக்கும்? நான் விரும்பினுல், கான்சினி கடுகி ஓட வேண்டும், மேரி மடாலயம் சேரவேண்டும், மன்னன் சிற கொடிந்த பறவையாகவேண்டும்" என்று கொக்கரிக்கலானுன். உண்மையிலேயே, உயிருக்கு ஆபத்து வருமோ. என்று அஞ்சிய கான்சினி, ஓடிவிடலாமா என்று கூட எண்ணினுன். மேரி திகில் கொண்டாள். ரிஷ்லு, அவள் பக்கம் நின்ருன், "அஞ்சாதீர்! அட்டகாசம் செய்கிருன் காண்டி! பலம் இல்லை! துணை நிற்போர் யாவரும் துரத்திஞல் ஓடிவிடும் தொடைநடுங்கிகள்! பயம் கொள்ளாமல், விளைவு என்ன ஆகுமோ என்று யோசியாமல் உத்தரவிடும், காண்டியைக் கைது செய்ய!" என்று யோசனை கூறினுன். எந்தக் காண்டி பிரபுவிடம் தயவுகோரி இருந்தானே, எந்தப் பிரபுவை அரண்மனைக்கு அழைத்து வந்தானே, அவனிடம் துளி பரிவு காட்டினுனு? இல்லை! ரிஷ்லுவுக்குக் காரியம்தான் முக்கியம், பண்புகளல்ல!

காண்டி கைது செய்யப்பட்டான்; பாஸ்ட்டிலி சிறை புகுந்தான்.

காட்டுத்தீ போலக் கிளம்பிய அவனுடைய அட்டகாசம், நொடியில் அழிக்கப்பட்டுவிட்டது.

துணை நின்ருேர்கள் விரண்டோடினர்—துதிபாடகர்கள், மன்னிப்புக் கோரினர்,

ரிஷ்லுவுக்கு இலாபம் உண்டா? இல்லாமற் போகுமா? ஒவ்வொரு அரசியல் குழப்பமும், ரிஷ்லுவுக்கு இலாபமாகத்

தான் முடிந்தது. தர்மாதிகாரியாக அரண்மனை நுழைந்த ரிஷ்லுவுக்கு ஆட்சி மன்றச் செயலாளர் பதவி கிடைத்தது. உறுமீனல்ல, பெருமீன்! இரை கிடைத்த இன்பத்திலே மூழ்கி விடாமல், மேலும் இரை தேடலானான் ரிஷ்லு.

காண்டிபோலவே, எதிர்ப்புணர்ச்சி கொண்டிருந்த வேறு பிரபுக்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று எச்சரிக்கை விடுத்தான்—வெளி நாடுகளுக்குத் தூதுவர்களை அனுப்பிப் பிரன்ச்சு நாட்டுக்கு ஆதரவு திரட் டிடச் செய்தான்-ரிஷ்லு தன் காரியத்தைத் திறம்படத் துவக்கினான்.

ஆட்சிக் குழுவிலே வேறு பலர், அமைச்சர்கள், செய லாளர்கள் உண்டு, எனினும், ரிஷ்லு தன் திறத்தாலும் முறையாலும் மற்றவர்களைச் சாமான்யர்களாக்கிவிட்டு, முன் னணி அமர்ந்தான். முதலமைச்சர் என்ற பட்டம் அளிக்கப் படவில்லை, ஆனால் எதிர்காலத்தில் ரிஷ்லுதான் அந்தப் பதவியில் அமரப்போகிறான் என்பது குறிப்பாகத் தெரிய லாயிற்று. பயணம், நம்பிக்கையுடன் தொடங்கப்பட்டது; பாதையும் தெளிவாகிவிட்டது, ஆனால் இடையே ஓர் புயல் வீசி, பாதையை மறைத்தது, பயணத்தைத் தடுத்தது.

காண்டி சிறைப்பட்டான், கான்சினியின் வெறியாட்டம் உச்சநிலை அடைந்தது. மன்னனை மறப்பதில்லை, ஏளனம் செய்வான், அரியாசனத்தில் அமர்ந்து கொள்வான், அரசனுக்குச் செலவுத்தொகை தர அனுமதியேன் என்று ஆர்ப்பரிப்பான். ஒரு சாதாரண பிரபு குடும்பத்தானுக்குக் காட்டுமளவுக்குக்கூட, மன்னனுக்கு மரியாதை காட்ட மாட்டான். பித்தம் முற்றிவிட்டது—முடிவு நெருங்கிவிட்டது. லூனிஸ், இந்த முடிவுக்கான திட்டம் தீட்டி விட்டான். ஒருவரும் அறியாவண்ணம் தீட்டப்பட்ட திட்டத்தின்படி, மன்னன் உத்தரவுபெற்ற ஒரு பிரபு, கான்சினியைக் கைது செய்தான்—எதிர்த்ததைச் சாக்காகக் கொண்டு கான் சினியைச் சுட்டுக் கொன்றுவிட்டான்! முகம் சுக்கு நூறாகி விட்டது. ஆணவமும் அட்டகாசமும் அழிந்தது என்று

மகிழ்ந்தனர் பலரும். கான்சினியின் கையாட்கள், இந்த எதிர்பாராத தாக்குதலாலும், விபரீதமான முடிவுகண்டதும் திகைத்துப் போயினர்—தப்பினுல் போதும் என்று திக்குக் கொருவராக ஓடிவிட்டனர். ஒரு விநாடிக்கு முன்பு வரை, அவன் இட்டதுதான் சட்டம் என்ற நிலை இருந்தது. சுட்டுத் தள்ளப்பட்டான், ஏன் என்று கேட்க ஆள் எழவில்லை. வாழ்க மன்னன்! என்ற முழக்கமிட்டபடி, கான்சினியைக் கொன்ற பிரபு, மக்கள் முன், பிணத்தைப் போட்டான். மக்கள், தொலைந்தான் தூர்த்தன்! என்று மகிழ்ந்து கூறினர். கலக்க மடைந்தாள் மேரி—கான்சினிக்கு நேரிட்ட கதிகண்டு அல்ல, தனக்கு என்ன ஆபத்து வர இருக்கிறதோ என்று எண்ணி. ஆண்டு பலவாக அவனுடைய சொல்கேட்டு ஆடிவந்த மேரி, அரண்மனையில் அளவுகடந்த அதிகாரத்தை அவனுக்கு அளித்த மேரி, வெறி நாயைச் சுட்டுத்தள்ளுவதுபோல அவனைச் சுட்டுத்தள்ளியது கேட்டு, இந்த அக்ரமம் ஆகுமா? என்று கேட்கவில்லை—கதறக்கூட இல்லை. தன்னைக் காத்துக் கொள்வது எப்படி, கான்சினிமீது பாய்ந்த பகை, தன்னைத் தாக்கினுல் எப்படித் தாங்குவது, என்றுதான் எண்ணம் சென்றது! பிரஞ்சு அரச குடும்பத்தில் இப்படிப்பட்ட நெஞ்சினருக்கே இடம் இருந்தது!

கான்சினியின் மனைவியின் பெயர் லியனோரா. மேரிக்கு இவள் உயிர்த் தோழி. மேரியின் செவிலித்தாயின் மகள், கான்சினி இறந்துவிட்டதை எப்படி லியனோராவிடம் கூறுவது—அவள் மனம் என்ன பாடுபடும், என்று கூறிக் கரத்தைப் பிசைந்துகொண்டு கண்ணீர் உகுத்தனர், சேடியர். மேரிக்குக் கோபம் பிறந்ததாம். "அவன் எப்படிச் செத்தான் என்பதைச் சொல்லத் தெரியாவிட்டால், அது பற்றி அவளிடம் பாடுங்கள்" என்று கூறிவிட்டுத் தன் காரியத்தைக் கவனித்தார்களாம்.

எப்படிப்பட்ட உத்தமமான மனம்! எவ்வளவு உயர்ந்த பண்பு!

கான்சினி கொல்லப்பட்டதும், மன்னன், தன் தோழன் லூனிசுடன் கூடிக்கொண்டு, புதிய பல ஏற்பாடுகள் செய்ய

லானுன். புயல் வீசலாயிற்று! கான்சினியின் தயவால் பெரும் பதவிகளில் அமர்ந்திருந்தவர்கள், வேலையினின்றும் நீக்கப் பட்டனர். கான்சினியால் சிறை வைக்கப்பட்டவர்கள், விடுதலை செய்யப்பட்டு, பதவிகளில் அமர்த்தப்பட்டனர். பல துறைகளிலே திடீர் மாறுதல். வியனோரா சிறையில் தள்ளப் பட்டாள். மேரியின் அமுல் அடக்கப்பட்டுவிட்டது. எல்லாம் இப்போது லூனிஸ் கரத்தில்!

மன்னனை மக்கள் பாராட்டினர். ஏதுமறியாதவர் போலிருந்தாரே, இப்போது இவ்வளவு ஆற்றலுடன் காரிய மாற்றுகிருரே, என்று கூறி மக்கள் மகிழ்ந்தனர். கான்சினி யிடம் மக்களுக்கு அவ்வளவு வெறுப்பு. இவனது கொட்டத்தை அடக்கும் துணிவு யாருக்குமா இல்லை, என்று மக்கள் பல காலமாகக் கேட்டுவந்தனர். வேட்டை விளையாட்டில் ஈடு பட்டு, ஆட்சியிலே இருப்பவர்கள் எது செய்தாலும் அக்கரை காட்டாது இருந்து வந்த இந்த ஊமை மன்னன், மக்களின் மனப்போக்கை அறிந்து, மாபாவியைக் கொன்றுனே, இதல் லவா ஆச்சரியம் என்று பேசினர்.

கான்சினியின் பிணம் பிய்த்தெறியப்பட்டது. ஆளுக் கொரு துண்டு எடுத்து அங்கும் இங்கும் போட்டுக் கொளுத் தினர்—சாம்பலை, காற்றோடு கலந்தனர், களிநடம் புரிந்தனர். கான்சினி ஒழிந்தான், மன்னன் வாழ்க! இத்தாலிய எத்தன் ஒழிந்தான், வீர இளைஞன் வாழ்க! என்று வாழ்த்தினர்.

கான்சினியுடன் தொடர்பு கொண்டோர், மேரியின் தயவுக்குப் பாத்திரமானோர், இவர்களுக்குப் பேராபத்து தாக்கியபோது, தப்பிப்பிழைத்தது, ரிஷ்லு, மட்டுந்தான்! எப்படி?

கான்சினியின் தயவைப்பெற ரிஷ்லு தவறவில்லை— மேரியின் ஆதரவால்தான், ஆட்சிக்குழுச் செயலாளராக அமர்ந்திருந்தான். எனவே மன்னனுக்கும் லூனிசுக்கும் மாற்றுக் குழுவிலே இருந்த ரிஷ்லு, ஒழித்துக் கட்டப்பட வேண்டிய புள்ளிதான், எனினும். லூனிஸ், மன்னனிடம் "ரிஷ்லு யோக்யர்! தங்களிடம் நிரம்பப் பற்று உள்ளவர்"

என்று வாதாடினான். ஏன்? அவன் அவ்விதம் நம்பும்படி ரிஷ்லு, சிலகாலமாக, நடந்துகொண்டு வந்தான்.

கான்சினியின் நிலை, திடீரென்று சாயும் என்பதையும், லேனிஸ் மன்னனைப் பயன்படுத்தி, சூத்திரக் கயற்றினைப் பிடித்துக் கொள்ளப் போகிருன் என்பதையும், உணர்ந்த ரிஷ்லு, "கான்சினியின் போக்கே எனக்குப் பிடிக்கவில்லை, எனக்கு அவன் தயவில் பதவியில் இருக்கவே கஷ்டமாக இருக்கிறது, மேரி அம்மையின் இயல்பும் எனக்குப் பிடிக்க வில்லை, என் உள்ளம், மன்னன் சார்பாகத்தான், மன்ன னிடம்தான் அதிகாரம் இருக்கவேண்டும் என்பது என் நோக்கம்" என்றெல்லாம், லேனிசிடம், அவன் நம்பும்படி பேசி வந்திருக்கிருன். எனவேதான், பலருக்குத் தலைபோன அந்த நேரத்திலும், ரிஷ்லு, சேதமின்றி இருக்க முடிந்தது.

மேரியும் கான்சினியும் அல்லவா, நமது இன்றைய உயர்வுக்குக் காரணம், அவர்களிடம் உள்ளன்பு கொள்வதும், நன்றியறிதல் காட்டுவதுந்தானே, நமது கடமை, அவர்களில் கான்சினி கொல்லப்பட்டு விட்டான், மேரியோ தாழ் நிலைக் குத் தள்ளப்படுகிருள், அவர்கள் சார்பிலே நின்று லேனிசின் அக்ரமத்தைக் கண்டிப்பதல்லவா அறம், என்றெல்லாம் ரிஷ்லு எண்ணவில்லை. மூவர் இருந்தனர், முட்டுக் கட்டை கள்—ஒருவன் காண்டி; சிறை சென்ருன்; மற்ருெருவன், கான் சினி, சுட்டுச் சாம்பலாக்கி விட்டனர்-மூன்ருமவன் இந்த லேனிஸ், இவன் தொலையுமட்டும், துதிபாடித் தப்பித்திருக்கத் தான் வேண்டும்—இவனும் தொலைவான், பிறகு, நான்தானே மன்னன் பக்கத்தில், என் கரத்தில்தானே பிரான்சு!—என்று இப்படி எண்ணினுன் ரிஷ்லு. அவன் படித்த மார்க்க ஏடு களும் அற நூற்களும் இத்தகைய சுயநலத்தைத்தானு தந்தன, என்று கேட்கத் தோன்றும். அந்த ஏடுகளிலே இருந்து ரிஷ்லு இந்த குணத்தைப் பெற்ருனே இல்லையோ, நாமறியோம். ஆனுல் ஒன்று அறிவோம் அவன் அந்த ஏடு களைப் படித்ததே கூட, சொந்த ஆதிக்கத்தைப் பெற அவை தரும் அறிவு பயன்படட்டும் என்ற நோக்குடன்தான்! அற நூல் படித்தவன்! அபாரமான திறமைசாலி!-என்று புகழப்பட

வேண்டும் என்பதற்காகக் கற்றுனே தவிர, அறத்தைப் பரப்ப வேண்டும், காக்க வேண்டும் என்பதற்காக அல்ல! அந்த வேலையைப் புத்தகப் பூச்சிகளுக்கும் வித்தகப் பேச்சாளருக்கும் விட்டு விட்டான்!

அரண்மனை ஆச்சரியப்பட்டது பலரை வீழ்த்திய பெரும் புயலால், ரிஷ்லு சாய்ந்திடாதது கண்டு.

மேரியிடமிருந்து அதிகாரம் பறிக்கப்பட்டதுடன் அம்மையைப் பாரிசை விட்டே பயணப்படும்படி மன்னன் உத்தர விட்டான்—உத்தரவு பிறப்பிக்கும்படி லூனிஸ் கட்டளையிட்டான்!

ப்ளாயிஸ் என்ற ஊர் சென்று தங்க ஏற்பாடு செய்யப்பட்டு மேரி புறப்பட்டபோது, மன்னனுடைய அனுமதியுடன், ரிஷ்லு, மேரியின் ஆலோசகர் குழுத் தலைவராகச் சென்றுன்.

மேரி, சுகத்திலும் துக்கத்திலும் வாழ்விலும் தாழ்விலும் தன்னுடன் இணைந்து இருக்க இசையும் ரிஷ்லுவின் பெருங் குணத்தைப் பாராட்டி இருக்கக் கூடும். ஆனுல் ரிஷ்லு சென்றது, மேரி அம்மையுடன் இருந்துகொண்டு, மன்னனுக்கு அவ்வப்போது 'சேதி' அனுப்ப! லூனிசின் ஏற்பாட்டின் படி ஆட்சிப் பொறுப்பை மன்னன் ஏற்றுக்கொண்ட கணமே, ரிஷ்லு, மன்னனின் 'ஆள்' ஆகிவிட்டான். மேரி இனி ஒரு கருவி—அதிலும் கூர் மழுங்கிவிட்டது! உயர வழி, முன்னேற மார்க்கம் மீண்டும் உயர் பதவி பெற வழி, மன்னனுக்குத் தொண்டு புரிவதுதான் என்ற முடிவுக்கு ரிஷ்லு வந்தாகி விட்டது. மன்னனுல் நியமிக்கப்பட்ட 'ஒற்றன்' இந்த ரிஷ்லு என்று அறியாமல்,இழந்ததைத் திருப்பிப்பெறத் திட்டம் என்ன வகுக்கலாம் என்று எண்ணியபடி, ரிஷ்லுவை அழைத்துக்கொண்டு, மேரி, ப்ளாயிஸ் சென்று புதுமுகாம் அமைத்துக்கொண்டாள்.

மேரியுடன் ரிஷ்லு இருந்து வந்தது லூனிசுக்குப் பிடிக்க வில்லை. எனவே ரிஷ்லு, பழையபடி லூகான் நகர் அனுப்பப் பட்டான். ஏழாண்டுகள் இதுபோல, 'வனவாசம்' செய்ய நேரிட்டது. புலர் ரிஷ்லுவின் அரசியல் வாழ்வு இனித்துலங்

காது என்று எண்ணினர், ஆனால் ரிஷ்லுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது மீண்டும் பதவிகிடைத்தே தீரும், முன்னிலும் மேலான நிலை பிறக்கும் என்று.

'நான் உண்டு என் ஏடு உண்டு' என்று ரிஷ்லு கூறிக் கொண்ட போதிலும், நாட்டு நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்த வண்ணம்தான் இருந்தான். இடையிடையே, எந்த மன்னனால் துரத்தப்பட்டானோ, அதே லூயி மன்னனுக்கு, ரிஷ்லு தன் ஆற்றலை விளக்கிக்காட்டும் வாய்ப்பும் கிடைத்தது.

❋ ❋ ❋

லூகான் நகர் சென்றதும் ரிஷ்லு, தன் புகழ் மங்கி விடும்படி இருந்துவிடவில்லை—புகழ் துருப்பிடிக்கவும் கூடாது, அரசாள்வோர் கவனத்தைக் ஈர்க்கத்தவறவும் கூடாது என்பது ரிஷ்லுவுக்கு நன்றாகத் தெரியும்.

பிராடெஸ்ட்டென்ட் கொள்கைகளைக் கண்டித்தும், கத்தோலிக்கக் கோட்பாடுகளை ஆதரித்தும் அரியதோர் ஏடு தீட்டினான்—மார்க்கத் துறையினர் கண்டு பாராட்டும் வகையில்! புகழ் பரவலாயிற்று! மன்றம் பல பேசலாயின, ரிஷ்லுவின் நுண்ணறிவு பற்றி. கத்தோலிக்க மார்க்கத்தை உலகெங்கும் பரப்பி, எதிர்ப்புக்களை ஒழித்துக் கட்டும் பேராற்றல் படைத்தவர் இந்த ரிஷ்லு என்று கொண்டாடினர். சிலர், மார்க்கத் துறையிலே ஈடுபட்டு மானிலம் புகழும் இடம் பெறுவதை விட்டு, ஏன் இவர் சிலகாலம் அரசியல் சேற்றிலே உழன்று கிடந்தார் என்று பேசினர். ரிஷ்லுவுக்கு இந்த வெற்றி களிப்பளித்தது. நாடு நம்மை மறந்துவிடவில்லை! புகழ்கிறது! கவனத்தில் வைத்திருக்கிறது—என்று எண்ணி மகிழ்ந்தான்.

கத்தோலிக்கக் கோட்பாட்டுக்கு பிராடெஸ்ட்டென்ட் புயலால் ஏற்பட்ட ஊறுகளைப் போக்கவேண்டும் என்பதல்ல, ரிஷ்லுவின் எண்ணம். ஆட்சிப் பொறுப்பு அளிக்கப்படவில்லை, ஆற்றலைக் காட்டியபடி இருந்தால், அந்த வாய்ப்பு

அளிக்கப்படும், ஆற்றலைக் காட்ட இந்த ஏடு பயன்படட்டும் என்பதற்காகவே தீட்டினான். உண்மையாகவே, மார்க்க சம்பந்தமான பணியிலே ஈடுபடவேண்டுமானால் வாய்ப்பா இல்லை! ஏராளம்!

இந்த ஏழாண்டு ஓய்வின்போது, ரிஷ்லுவுக்கு ஜோசப் பாதிரியார் உற்ற நண்பரானார்.

ஜோசப் ரிஷ்லு போன்றவரல்ல, ஆற்றல் உண்டு நிரம்ப, அதற்கேற்ற அளவு நேர்மை உண்டு. கொள்கை உண்டு அதற்காக சுயநலத்தைத் தியாகம் செய்யும் பண்பு உண்டு. கூர்மையான மதிபடைத்தவர், அதனைத் தமக்குப் புகழோ நிதியோ சேர்க்க அல்ல, தன் கொள்கையின் வெற்றிக்காகச் செலவிட்டு வந்தவர்.

கத்தோலிக்க மார்க்க வெற்றியே, ஜோசப்பின் மூலாதாரக் கொள்கை.

கிருஸ்தவ மார்க்கத்தைப் பாதிக்கும் முறையில் நடந்து கொள்கிறார்கள் என்ற காரணம் காட்டி, முஸ்லீம்களுடன் புனிதப் போர் நடாத்தி வந்தவர்களுக்கு இருந்தது போலவே ஜோசப்புக்கு, இஸ்லாமிய ஆதிக்கத்தைத் தீர்த்துக்கட்ட வேண்டுமென்ற பேரவா, தீனக் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. புதியதோர் புனிதப்போர் தொடுக்கத்தூபமிட்டார், பலிக்கவில்லை. பிறகு அவர், பிரான்சு நாடு, கத்தோலிக்க மார்க்கத்துக்கு ஏற்ற திரு இடம் என்று எண்ணினார், அங்கிருந்தபடி, ஐரோப்பாவில் பல்வேறு இடங்களிலே பரவிக் கொண்டிருந்த பிராடெஸ்ட்டென்ட் மார்க்கத்தை மாய்த்தொழிக்கலாம் என்று எண்ணினார். ரிஷ்லுவுக்கு இது தெரிந்துவிட்டது! ரிஷ்லு, கத்தோலிக்க மார்க்கத்தைச் சிறப்பித்தும், பிராடெஸ்டென்ட் கண்டனங்களைச் சின்னா பின்னமாக்கியும் தீட்டிய ஏடு, ஜோசப்புக்கு ஆர்வமூட்டிற்று. இருவரும் நண்பராயினர். ரிஷ்லுவைக் கொண்டு, கத்தோலிக்க மார்க்கத்தை ஒளிவிடச் செய்யலாம் என்ற நம்பிக்கையுடன் தமது செல்வாக்கை, ரிஷ்லுவுக்குத் துணையாக்கினார். ஆர்வமும் ஆற்றலும், ஓயாது உழைக்கும் திறனும்,

ஒன்றையும் தனக்கெனத் தேடிக் கொள்ளாப் பண்பும், பல் வேறு நாடுகளிலே செல்வாக்கும் கொண்டிருந்த ஜோசப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஆதிக்கபுரிபோய்ச் சேரலாம் என்று ரிஷ்லு திட்டமிட்டான். இருவருக்கும் ஏற்பட்ட கூட்டுறவு, ரிஷ்லுவுக்குப் பெரும் பயனளித்தது—ஜோசப் இறந்துபடும் வரையில், ரிஷ்லுவுக்காகவே, உழைத்தார். ரிஷ்லுவின் மனமறிந்து திறமையுடன் காரியமாற்றினர். ரிஷ்லு அரசாளும் காலத்திலே பெற்ற பல ஆச்சரியமான வெற்றிகளுக்கு ஜோசப்பின் அறிவாற்றல், பெரியதோர் காரணமாக அமைந்தது.

ஜோசப்பின் செல்வாக்கினல், அரண்மனையில் கூட, ரிஷ்லுவிடம் இருந்த அவநம்பிக்கையும் பயமும் ஓரளவு குறைந்தது.

ரிஷ்லுவுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

மேரி தன் நிலையில் திருப்தி பெறமுடியுமா! அரண் மனையில் எல்லா அதிகாரங்களையும் அனுபவித்துக் கொண் டிருந்த அம்மை, லூனிஸ் என்னும் ஊர்பேர் அறியாதான் அரசாண்டு கொண்டிருப்பது கண்டு எங்ஙனம் மனம் பொறுக்க முடியும். சூழ்ச்சிகள் மூலம் மீண்டும் இழந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவல் வளர்ந்த வண் ணம் இருந்தது.

மகனுக்கும் அன்னைக்கும் இடையே இயற்கையாக இருந்து வந்த பாசம், லூனிசால் கெட்டுவிட்டது.

ஆன் அரசி எப்போதும் போலவே, கண்ணீர் உகுத்துக் கொண்டுதான் இருந்தாள்.

பிரபுக்கள், இந்தப் 'புதிய நோய்' போக மருந்து உண்டா என்று ஏக்கத்துடன் கேட்டனர்.

"சரக்கு மாறவில்லை—விலாசம்தான் புதிது!" என்று ஒருவர், லூனிசின் ஆட்சியைக் குறிப்பிட்டார்.

கான்சினி, காண்டி, இவர்களிடம் காணப்பட்ட போக்கே லூனிசிடமும் இருந்தது.

உறவினர்களுக்கெல்லாம் செல்வம், செல்வாக்கு, பட்டம் பதவி! அள்ளி அள்ளி வீசினான், லூனிஸ்; கேட்க நாதி இல்லை. எதிர்த்திடத் துணிந்தவர்கள் அழிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், மேரி அம்மை, ப்ளாயிசில் சோம்பிக் கிடந்து பயனில்லை அங்கிருந்து வெளியேறி, பிரபுக்கள் சிலரின் உதவியைத் திரட்டிக் கொண்டு, லூனிசை எதிர்த்தொழித்து, மகனை மீட்டு அவனை மன்னனாகக் கொண்டு பழையபடி தன் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும், என்று தீர்மானித்தாள். எபர்னன் பிரபுவுக்கு அதுபோது பிரான்சிலே நல்லசெல்வாக்கு. அவருடைய உதவியைப்பெற, மேரி திட்டமிட்டு மங்கலான நிலவொளி இருந்த ஓரிரவு, சாளர வழியாக நூலேணி போட்டுக் கீழே இறங்கிப் ப்ளாயிஸ் மாளிகையை விட்டு வெளியேறி, எபர்னன் மாளிகை வந்து சேர்ந்தாள்.

மேரி தப்பிச்சென்ற செய்தி பிரான்சிலே பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. இரவில்! சாளரவழி! நூலேணி!!—மக்கள் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு வியப்படைந்தனர்.

எபர்னன் பிரபு, மேரி அம்மைக்குத் துணைபுரியச் சம்மதித்தார்—லூனிசினிடம் வெறுப்புக் கொண்ட வேறு சீமான்களும் பக்கத்துணையாயினர்! மேரி அம்மையின் திட்டம் வெற்றி தந்துவிடும் என்ற நம்பிக்கை உதயமாயிற்று.

மன்னனும் லூனசும் கவலைப்பட்டனர்—எப்படி இந்த ஆபத்தைத் தவிர்ப்பது என்று யோசித்தனர்—ஜோசப் யோசனை கூறினார், "மேரி, படையுடன் பாரிஸ் வராதபடி தடுக்கக் கூடியவர் ஒருவர்தான் உண்டு—அவர்தான் ரிஷ்லு!" என்றார். ரிஷ்லு அழைக்கப்பட்டார்! என்னைப் பாரிசை விட்டுத் துரத்தினீர்களே, நான் ஏன் உங்களுக்குத் துணை புரிய வேண்டும்? நான், மேரி அம்மைக்கே உதவி புரிவேன் மேரியின் தயவுதான் எனக்கு அரண்மனைக்கு நுழைவுச் சீட்டாக இருந்தது. எனவே நான் பாரிஸ் வாரேன்" என்றல்லவா, ரிஷ்லு நிலையில் தள்ளப்பட்ட எவரும் கூறுவர். ரிஷ்லு பாரிஸ் சென்றான், மேரி அம்மைக்கும் மன்னனுக்கும் சமரசம் உண்டாக்கி வைக்கும் பணியைச் செய்து முடிப்ப

தாக வாக்களித்து. எபர்னோன் சென்று, மேரியிடம் பேசி போரை நிறுத்தி வைத்ததுடன் சமரச ஏற்பாட்டையும் தயாரித்துத் தந்தான்!

ஒருபுறம் மன்னன், அவனுடன் கீழே சாயப்போகும் லூனிஸ்.

மற்ருேர்புறம் சூழ்ச்சித் திறமும் ஆதிக்க ஆசையும் மிகுந்த மேரி—அம்மையைச் சுற்றி அதிகாரப் போதையைப் பருகி அட்டகாசம் செய்ய வல்ல பிரபுக்கள்.

இந்த இருதரப்பிலே, மேரி தரப்பினுடைய கரம் வலுத்தால், தன் ஆதிக்க நோக்கம் ஈடேறும் வழி அடியோடு அடைபட்டுவிடும், எனவே, மேரியின் திட்டம் வெற்றிபெறக் கூடாது—வெற்றிபெற விடக்கூடாது.

மன்னன்? பரவாயில்லை! கரத்தில் சிக்குவான்! லூனிஸ்? அசடன்! ஆடி அழிவான்!!—எனவே மன்னர் தரப்புக்கே துணைநிற்க வேண்டும், என்று ரிஷ்லு தீர்மானித்தான்.

ரிஷ்லுவின் பேச்சுக்கு மேரி, ஏன் இணங்க வேண்டும்? மேரி, அடைந்திருந்த அவமானம் சாமான்யமானதல்ல. வேட்டைக்கார வெறியன், அரண்மனையை விட்டே துரத்தினன். கீறிய கோடு தாண்டாதிருந்த மன்னனை, மகனை, பிரித்து வைத்தான், பகை மூட்டி விட்டான். எபர்னோன் பிரபுவின் ஆற்றல் துணை நிற்கிறது—வெற்றி எளிது!—இது மேரிக்குப் புரியக் கூடியதுதானே! ஏன் ரிஷ்லுவின் சமரசப் பேச்சுக்கு, இணங்க நேரிட்டது?

ரிஷ்லு, தர்பார் தளுக்கனல்ல! பாவையரை மயக்கும் பாகு மொழி பேசியும், சொக்க வைக்கும் புன்சிரிப்புக் காட்டியும், கீதமிசைத்தும் நடனமாடியும், களிப்பூட்டியும், காதலைப் பொழிந்தும், காரிகையரைக் கொல்லும் உல்லாசக் கல்லூரியில் தேறியவனுமல்ல! நோயாளி! பகட்டுடை அணிந்து பரிமளம் பூசிக் கொண்டு மினுக்கும் பட்டுப் பூச்சியுமல்ல!

மத அதிபர் உடை! நோயும் ஓயாத உழைப்பும், தாங்கித் தாங்கி முகத்திலே, வேதனை ரேகை நன்ருகப் படர்ந்திருந் தது. எனினும், ரிஷ்லுவுக்கு யாருடைய கவனத்தையும் தன் பக்கம் இழுக்கவல்ல முக அமைப்பு இருந்தது! கவர்ச்சி அல்ல! அளவளாவலாம், தோழமை கொள்ளலாம், என்ற ஆசை எழவில்லை, எனினும், அவனைப் பார்த்ததும், மனதிலே பதிந்து விடுகிருன். இத்தாலிய சாணக்கியன் மாக்கியவல்லி கூறினன், "மன்னன், நேசிக்கப்படத் தக்கவனுக இருப்பதைக் காட்டிலும் அச்சமூட்டத் தக்கவனுக இருப்பது நல்லது" என்று. ரிஷ்லு, அந்த ஓவியமாக விளங்கினன். நேசிக்க அல்ல: அச்சம் கொண்டிட வைத்தது, ரிஷ்லுவின் தோற்றம். அவனுடைய கண்களே, கருவூலங்கள்! ஒளி, ஆவலைக் காட்டுவதாக மட்டுமல்ல, உறுதியை, நினைத்ததைச் சாதித்தே தீருவான் என்ற உறுதியை உமிழ்ந்தது! ஆடம் பரம் இல்லை, உடையில், நடையில். ஆனல் அதிகாரத்தைத் திறம்பட நடத்தும் போக்கினன் என்பதை எடுத்துக் காட்டு வதாக இருந்தது.

இந்த ரிஷ்லுவிடம், மயக்கமா, மேரி அம்மைக்கு!

உண்டு, என்கிருர்கள்—இருக்கக்கூடும், அம்மையின் இயல்பைக் கவனித்தால்!

ரிஷ்லு, இதற்கு இணங்கினதாக ஆதாரமும் இல்லை, நட வடிக்கைகள் இவ்வகையில் ஏதும் இல்லை.

பொதுவாகவே ரிஷ்லுவுக்கு அந்தச் 'சபலம்' கிடையாது. நோயும், நோயைவிடக் கடுமையாக மனதைப் பிடித்துக் கொண்டிருந்த ஆதிக்க நோக்கமும், ரிஷ்லுவுக்கு அந்தச் சப லத்தைத் தந்திராது-மேலும் வாலிப வயது முதல் தேவாலயத் திலே அல்லவா, வேலை!! எனவே, ரிஷ்லு, விருந்து தேடிடும் வீணனுக இல்லை. ஆனல், மேரி, அம்மைக்கு ஏதோ ஒரு வகையான மயக்கம் இருப்பது மட்டும் ரிஷ்லுவுக்குத் தெரிந் தது-அந்தப் பொல்லாத குணம் கூடாது என்று ரிஷ்லு உப தேசம் செய்யவில்லை, ஒதுங்கிக் கொள்ளவில்லை. அரண்மனை

ஆயிரத்தெட்டுக் கேடுகள் நடமாடும் இடம் என்று மிரண்டு ஓடிவிடவில்லை. அம்மைக்கு அவ்விதமான மயக்கம் இருப்பதும் நல்லது தான், அதனை எப்படி, ஆதிக்கம் பெறப் பயன்படுத்திக் கொள்வது, என்று மட்டுமே எண்ணினன்.

"நான் இருக்கிறேன்! இதோ! உன் எதிரில்! எப்போதும்!" என்று தன்னைக் காட்டிக் கொள்வது மட்டும் போதும். இணங்கி விடுவது கூடாது. ஆவல் மட்டும் இருக்கட்டும், அது அணையா தீபமாக இருக்கட்டும், என்று எண்ணி ரிஷ்லு நடந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

ரிஷ்லுவின் போக்கைக் கவனிக்கும் போது, இது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்று தள்ளிவிடுவதற்கில்லை.

இப்படி ஒரு மயக்கம் இருந்தாலொழிய, மேரி அம்மை, நெருக்கடியான நேரத்தில் எல்லாம், ரிஷ்லுவின் பேச்சுக்கு ஏற்றபடி தன் திட்டத்தைத் திருத்திக் கொள்வதற்குக் காரணம் வேறும் காணக்கிடைக்கவில்லை.

எப்படியோ ஒன்று, சமரசம் ஏற்பட்டு விட்டது-தாயும் மகனும் அளவளாவினர்-நாடு ஓரளவு நிம்மதி கிடைத்தது என்று எண்ணி மகிழ்ந்தது.

ரிஷ்லுவுக்கு இதனுல் என்ன இலாபம்? இல்லாமற் போகுமா? கார்டினல் எனும், உயர்தர மத அதிபர் பதவியை ரிஷ்லுவுக்கு போப்பாண்டவர் அளித்தார். இந்தப் பதவியில் ரிஷ்லுவை அமர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் பட்டது!

கார்டினல் எனும் நிலைபெற, மார்க்கத் துறையிலேயே பன்னெடுங்காலம் ஈடுபட்டுக் காத்துக் கிடப்பர் பலர்; ஆனல் ரிஷ்லுவுக்கோ! ஒரு அரசியல் குழப்பம்-சமரச முயற்சி-கார்டினல் பதவி!

எபர்னுன் பிரபுவின் பேருதவியை நம்பித்தான் மேரி, மன்னனை எதிர்க்கத் துணிந்தது. ரிஷ்லு எப்படியோ அம்

மையின் மனதை மாற்றி, மன்னனிடம் சமரசமாகி விடும்படி செய்து விட்டான். இந்தச் சம்பவம், அரண்மனையில் ரிஷ்லு வின் செல்வாக்கை வளமாக்கி விட்டது. ஒரு நாள் எபர்னுன் பிரபு, மாளிகை மாடியிலிருந்து கீழே வந்து கொண்டிருக்கும் போது ரிஷ்லுவின் ஆதரவாளர் ஒருவர், படிக்கட்டில் அவரைக்கண்டு, "பிரபுவே! என்ன ஏதேனும் விசேஷம் உண்டா?" என்று கேட்க, எபர்னுன், "ஏன் இல்லை! நீங்கள் உயரப்போகிறீர்கள், நான் கீழே இறங்குகிறேன்!" என்று பதிலளித்தாராம்!! யூகம் நிரம்பியபதில். எபர்னுனுக்கு மேரி அரசி ஏதும் உதவி செய்யவில்லை; ரிஷ்லுவுக்கோ, அன்னையும் ஆதரவு தந்தார், அரியாசனத்திலிருந்த மகனும் தந்தான்!!

இது எனக்கு எம்மாத்திரம், என்றுதான் ரிஷ்லு எண்ணினார், ஆனால் பயனற்றது என்று கூறவில்லை. பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சமரசம் முறிந்ததும், மீண்டும் சமர் கிளம்பிற்று-மீண்டும் சமரசம்-இப்படி நிகழ்ச்சிகள் ஊஞ்சலாடின-இந்நிலையில் லைனிஸ் இறந்துபட்டான் - மன்னன், யாருடைய துணை கொண்டோ துரைத்தனம் நடத்திப் பார்த்துச் சலிப்புற்று, ரிஷ்லுவுக்கு அழைப்பு அனுப்பினுன், 1624-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள், ரிஷ்லு மீண்டும் ஆட்சிக் குழுவில் இடம் பெற்றுன்—நாலு திங்களில், உடனிருந்த அமைச்சர்களை மூலையில் அமரச்செய்து விட்டு, முதலமைச்சரானுன்-முடி தரித்தவன் லூயி-ஆட்சி கார்டினல் ரிஷ்லுவிடம்! நீண்டகாலத் திட்டம் பலித்துவிட்டது! பிரான்சு, ரிஷ்லு கரத்தில் சிக்கி விட்டது. லூகான் தேவாலயத்திலே பூஜாரி வேலையா பார்க்கச் சொன்னுர்கள், பிரான்சை ஆளும் பெரும் பதவிக்கு ஏற்ற என்னை! என்று எண்ணினுன். பெற்றதைப் பலப்படுத்தும் பெரும் பணியைத் துவக்கினுன். மன்னனை மெள்ள மெள்ள வசப்படுத்திக் கொண்ட, ரிஷ்லு, பிரபுக்களின் கொட்டத்தை அடக்குவது, ஹ்யூஜீநாட்ஸ் எனும் பெயர் படைத்த பிராடெஸ்ட் டென்ட் மக்களை ஒடுக்குவது, வெளி நாடுகளில் பிரான்சின் கீர்த்தியை நிலைநாட்டுவது எனும் மூன்று திட்டங்களை மேற்கொண்டு ஒவ்வொன்றிலும் வெற்றி கண்டான்.

இந்த வெற்றிகளை வரலாற்று ஆசிரியர்கள் பெரிதும் பாராட்டு கின்றனர். இந்த வெற்றிகளுக்கு ரிஷ்லு கையாண்ட முறை களோ, மிகக் கொடுமையானவை.

ரிஷ்லுவின் 'ஒற்றர்கள்' நாடெங்கும் பூனைபோலுலவி, 'சேதிகளை'க் கொண்டு வந்து தருவர், தனக்குப் பிடிக்காத வர்கள், ஆற்றலை வெளிப்படுத்துபவர், அரண்மனையில் புகும் உரிமை கொண்டவர்கள் ஆகியோரை, சதி வழக்குகளில் சிக்கவைக்க, இந்தச் சேதிகள் மெத்தப் பயன்பட்டன. மாளிகைகளிலே மருட்சி! ஒவ்வொரு பிரபுவும் தனக்கு எப்போது ஆபத்து வருமோ என்ற திகிலுடனேயே உலவிட நேரிட்டது. சதி வழக்குகள் தொடுத்தால், தக்க ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் கடும் தண்டனை தரப்படும். காரணம் கேட்டவருக்கு ரிஷ்லு சொன்னன் "சதி வழக்குகளுக்கு ஆதாரங்கள் அப் பழுக்கின்றி கிடைக்குமா! யூகித்தறிந்த விஷயமே போதும் தண்டனை தர" என்று. இப்படிப்பட்ட விபரீத நியாயம்—முறையாகி விட்டது.

மன்னனிடம், "என் கடன் தங்கள் ஆட்சியைப் பலப் படுத்துவதுதான், தங்களை எதிர்க்கத் துணிவு காட்டும் பிரபுக்களை அழித்து, அரச பலத்தை அதிகரிக்கச் செய்வதுதான்; தங்கள் ஆட்சியின்போது பிரான்சு நாடு பிற நாடுகளால் பெரிதும் மதிக்கப்பட்டது என்று நிலை இருக்க வேண்டும்; அதற்கான முறையிலே பணிபுரிகிறேன்" என்று சொல்லி, காட்டிய இடத்தில் கையொப்பமிடும் கருவியாக மன்னனை ஆக்கிக் கொண்டான்.

பல பிரபுக்கள், ரிஷ்லுவின் பகைக்கு ஆளாகி, ஈவு இரக்கமின்றி அழிக்கப்பட்டனர்—மக்களுக்குக் கேடு செய் தான் என்பதற்காக அல்ல, மன்னனுக்கு நிகராகத் தம்மை எண்ணிக் கொண்டனர் என்பதற்காகவே! பிரபுக்கள் அழிக் கப் பட்டனர்.

அரசனுக்காக! பிரான்சுக்காக! என்றுதான் ரிஷ்லு, தன் நடவடிக்கைகளுக்கெல்லாம், விளக்கம் தந்தானே தவிர,

மக்களுக்காக என்று ஒரு சிறு செயலேயும் மேற்கொள்ள வில்லை.

மக்கள், எப்போதும் போல ஏக்கமிகுந்து இருந்தனர்— பசி தீரவில்லை, வாழ்க்கை சிறக்கவில்லை—தொழில் வளம் பெருக வில்லை, உரிமைக் குரலுக்கு இடமே இல்லை. பிரபுக்கள் ஒரு புறத்தில் அவர்களைச் சுரண்டினர், மத அதிபர்கள் மற்றோர் புறம் அரித்தனர். இந்தக் கொடுமைகளைக் களைய ரிஷ்லுவின் ஆற்றல் பயன்படவில்லை — அடிப்படையில் வெடிப்புக் கிடந்தது, ரிஷ்லுவோ, கலசத்துக்குப் பொன் முலாம் பூசிக்கொண்டிருந்தான்.

ரிஷ்லுவை எதிர்த்து மன்னனுடைய தம்பி, காஸ்ட்டன் பன்முறை கிளம்பினான்—ஒவ்வோர் முறையும் பரிதாப கரமான தோல்வியே கண்டான்.

மன்னன் தம்பி என்பதால் அவன் தலை தப்பிற்று— உடன் இருந்தோரின் தலைகள் உருண்டன.

வேண்டுகோள், அழுகுரல், கருணைமனு, எதனையும் பொருட்படுத்துவதில்லை, பாதையிலே குறுக்கிட்டால் தீர்ந்தது, பயங்கர மரணம்தான் பரிசு!

தன்னைச் சுற்றிலும் வேவுபார்ப்போர், தகவல் திரட்டுவோர், ஆகியவர்களை அமர்த்திக் கொண்டு, ரிஷ்லு நடத்தி வந்த ஆட்சி முறையின் கடுமை கண்டு, பலரும் கலங்கினர்.

மன்னனின் தம்பி, காஸ்டன், காமக்களியாட்டத்திலே காலந்தள்ளி வந்த பதினெட்டாண்டு வாலிபன், அவனை ஆதரவாக நம்பி, இரு பிரபுக்கள் எதிர்ப்பு மூட்டினர். ரிஷ்லுவுக்கு, சதி, கருவிலிருக்கும்போதே தெரிந்து விட்டது—பிரபுக்களின் முயற்சி முறியடிக்கப்பட்டது—காஸ்டன், அண்ணனிடம் மன்றாடி உயிர் தப்பினான். ஒரு பிரபு சிறையில் தள்ளப்பட்டு மாண்டான்—காய்ச்சல் என்று கூறப்பட்டது. மற்றோர் பிரபுவுக்கு நேரிட்ட கதி, பிரான்சையே நடுங்க வைத்தது. காலே எனும் அந்தப் பிரபுவின் தலை சீவப்பட்டு, கோலில் செருகப்பட்டு, சதுக்கத்தில் காட்சியாக வைக்கப்பட்டது.

உடல் நாலு கூருக்கப்பட்டு, ஊரின் நான்கு நுழைவு வாயல் களிலும் தொங்க விடப்பட்டன!

தேவாலய அதிபராக வாழ்க்கையைத் துவக்கியவரின், கருணை நிரம்பிய உள்ளம் இது! இப்படியா, என்று கேட் டால், அரசுக்காக! பிரான்சுக்காக! என்ற ஒரே பதில்!

காலே என்பவனுடைய தலை சீவப்பட்டது என்ருல், எவ் வளவு காட்டுமிராண்டித் தனமான முறையில்—தலை வெட்டு வதற்கு தக்க ஆள் கிடைக்க வில்லையாம், எனவே இரு கைதி கள் இந்தக் காரியத்துக்கு அமர்த்தப்பட்டனர்—ஊதியம், விடுதலை! கோடரி கொண்டு இருபத்து ஒன்பது தடவை வெட் டிய பிறகே கழுத்துத் துண்டிக்கப்பட்டதாம். எல்லாம் அர சுக்காக! என்ருன் ரிஷ்லு, 'ஆமென்!' என்ருன் மன்னன்.

பயங்கரமும் கொடுமையும் நிரம்பிய முறையிலே நடை பெற்ற நடவடிக்கைகள் பலப்பல.

மக்களை வாட்டி வதைப்பவன், ஏழைகளை ஏய்த்தவன், சர்க்கார் பொருளைச் சூறையாடினவன், ஆலயச்சொத்தை அபகரித்தவன், போன்ற ஒரு 'குற்றவாளி' கூட ரிஷ்லுவின் கண்ணுக்குத் தெரியவில்லை! அப்படிப் பட்டவர்களை, குற்ற வாளிகள் என்று கருதினுல்தானே! ரிஷ்லுவின் கண்களுக்கு ஒரே ஒரு வகையான குற்றவாளி மட்டுமே தெரியும்—தன் ஆதிக்கத்துக்குக் குறுக்கே நிற்பவன்! அதுதான், பெருங் குற் றம்—மற்றவை, ரிஷ்லுவின் கவனத்துக்கு உரியன அல்ல!

லைனிஸ் இறந்துபட்ட பிறகு, மன்னன் பொழுது போக் குக்காகவேனும், தன் இல்லக்கிழத்தி ஆன் ராணியை நாடினுனு! இல்லை! தன்னைச் சுற்றிலும், அழகு மங்கையரை உலவச் செய்து, ஒருவிதமான திருப்தி பெறுவான். களியாட் டம் மன்னனுக்குப் பிடிக்காது. அணங்குகள் அங்கும் இங் கும், ஆடியும் அசைந்தும், சிரித்தும் உபசரித்துக் கொண்டும் இருப்பர், இடையே மன்னன் இருப்பான்.

மன்னனுடைய பிரத்யேகமான 'அன்பு' ஒரு அழகிக்குக் கிடைக்கும், பிறகு வேருேர் வனிதைக்கு மாறும், ஆனுல்

எந்த அணங்கையும், மன்னன் காமக் கருவியாக்கிக்கொள்வதில்லை, வெறும் பொழுது போக்கு!

கணவனிருந்தும் விதவையாக இருந்த ஆன், தன் அழகையும் இளமையையும் வெறுத்தபடி, ஒதுங்கியே வாழ்ந்து வந்தாள்.

சுழல் கண்ணழகியும், கீத மொழியினளும், மன்னனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருப்பதும், ஆன் அரசியை மன்னன் அனியாயமாக ஒதுக்கி வைத்திருப்பதும் ரிஷ்லுவுக்குத் தெரியும்; தெரிந்து? அந்த நிலை நல்லது தான் என்று எண்ணிக்கொண்டாள். ஆன் அரசியுடன் காதல் வாழ்க்கை நடத்த ஆரம்பித்தால்! மன்னன் அவள் வசமாகி விட்டால் தன் நிலைக்கு என்ன ஆபத்து நேரிடுமோ, யார் கண்டார்கள்! ஆன் அரசி, மேரி போலாகி விட்டால்? ஆன் அரசிக்கு வேண்டியவர்களுக்கு ஆட்சிப் பொறுப்புத் தரப்பட்டு விட்டால்? இப்படி எல்லாம் எண்ணிய ரிஷ்லு, மன்னனின் மண வாழ்க்கை மலருவது கூடாது என்று விரும்பினான்.

கணவன் மனைவிக்கு இடையே கலகமூட்டி, பிரித்து வைத்துப் பெருங்கேடு செய்கிறான் ஆதிக்க வெறியன் என்று சிலர் குற்றமே சாட்டினார்கள்.

அணங்குகளுடன் கொஞ்சிக் குலவட்டும், மனதுக்கு மகிழ்ச்சி தேடிக்கொள்ளட்டும், ஆனால் எந்த மைவிழியாளிடமும் மன்னன் மனதைப் பறிகொடுத்து விடக்கூடாது என்பது ரிஷ்லுவின் எண்ணம். மனதுக்கு மகிழ்ச்சியே கிடைக்காவிட்டால் மன்னன், காரணமற்ற கோபம், சலிப்பு, சோகம் ஆகியவைகளுக்கு ஆட்பட்டு விடுவான்—அதுவும் தொல்லையாகி விடும், ஒருவேளை, பொழுது போக்கே இல்லாத நிலையில் ஆட்சிக் காரியங்களையே கவனிக்கத் தொடங்கி விடக்கூடும்—அது தொல்லை மட்டுமல்ல, ஆபத்துங்கூட! எனவே மன்னன், ஆடிப்பாடி மகிழ வேண்டும், அதற்கு ஏற்ற அழகு மங்கையர் அவன் அருகில் இருக்க வேண்டும்—இந்த ஏற்பாடும் ரிஷ்லு கவனித்துக் கொள்ள வேண்டும், வேறு எவளாவது இந்தத் துறையில் ஈடுபட்டு, மன்னனின் தோழமையைப் பெற்று விடுவதும், பேராபத்தாகுமல்லவா!

ரிஷ்லு, மன்னனுக்கு இந்த ஏற்பாடு செய்துதரக் கூடியவன் என்ற எண்ணம் பலமாக ஊரில் பரவி இருந்ததால், கதைகள் பல, அவன் காலத்திலும், பிற்காலத்திலும் கட்டிவிடப்பட்டன. நடிகை ஒருவளைச் சீமாட்டி வேடமிட்டு மன்னனைச் சொக்கச் செய்யும் ஏற்பாடு செய்தான் ரிஷ்லு, என்ற கதை போல், பலப் பல. இதனினும் மோசமான கதைகள் கட்டி விடப்பட்டன—மக்கள் அவைகளை விரும்பிக் கேட்டனர், சந்தேகமின்றி ஏற்றுக்கொண்டனர். டூமாஸ், ஹ்யூகோ எனும் கதாசிரியர்கள், ரிஷ்லுவைக் குறித்தும் அவன் கால நிகழ்ச்சிகளைப் பின்னியும் வகை வகையான கதைகள் தீட்டினர், அவைகளை வரலாற்றுச் சம்பவங்களுக்கு ஒப்ப மதிப்பளித்து மக்கள் வரவேற்றனர். ரிஷ்லுமீது மக்களின் வெறுப்புணர்ச்சி ஏறியவண்ணம் இருந்தது.

மேரியை ரிஷ்லு அடியோடு மறந்தே விட்டான்—அலட்சியப்படுத்தினான். அவள் சகாப்தம் முடிந்து விட்டது என்று தீர்மானித்தான். மன்னன், தன் சொற்கேட்டு ஆடும்போது, மேரியின் ஆதரவு ஏன்! மேரியோ, மன்னனைப் போல, ஒதுங்கி இருப்பவளல்ல, அதிகாரத்தில் ஆவல் உள்ளவள், எனவே அவளை அருகே இருக்க விடலாகாது!

பிரபுக்கள் பீதிகொண்டு ஒதுங்கிக் கொண்டனர்; மேரி விரட்டப்பட்டு விட்டாள்; மன்னனின் இளவல் தலையில்தட்டி உட்கார வைக்கப்பட்டான்; ஆன் காதலறியாது கண்ணீர் பொழிந்தபடி கிடந்தாள்!

அரச குடும்பத்தை இந்த நிலையில் வைத்துவிட்டு, ரிஷ்லு, தன் ஆதிக்கத்தை உச்சநிலைக்குக் கொண்டு சேர்த்தான்.

கத்தோலிக்கர்கள், ரிஷ்லுவின் உயர்வு கேட்டு, மகிழ்ந்தனர். இனிப் பிரான்சில் ஐரோப்பா முழுவதும் கத்தோலிக்க மார்க்கம் நல்ல நிலைமை பெறும் என்று நம்பினர். பேரவையில் ரிஷ்லு இடம் பெற்றதே கத்தோலிக்கரின் ஆதரவினால் தான். எனவே, ரிஷ்லு தங்கள் மார்க்கத்துக்கு அரண் அமைப்பான் என்று எண்ணினர்.

மதத்துறை அலுவலர்களே இனி, ஆட்சியிலே தங்களுக்கு ஆதிக்கம் சிறக்கும், செல்வாக்கு வளரும் என்று நம்பினர். ரிஷ்லுவின் மார்க்க ஏடு அவர்களை மகிழ்வடையச் செய்தது, ஆட்சியிலே இடம் கிடைத்து விட்டதால் இனி, ரிஷ்லு அந்த வாய்ப்பைக் கொண்டு, மார்க்கத்தை மேம்பாடடையச் செய்யவும், மதத் துறையினருக்கு, செல்வாக்கு மிகுந்திடச் செய்யவும் பாடுபடுவார் என்று எண்ணினர்.

அவர்களின் எண்ணம் பலிக்க வில்லை. ரிஷ்லு, பொதுவாக மார்க்கத்தை, சிறப்பாக கத்தோலிக்க மார்க்கத்தை மேன்மை அடையச் செய்ய வேண்டும், என்பதை நோக்கமாகக் கொண்டில்லை. ஜோசப் பாதிரியாருக்கு, ரிஷ்லுவுக்குக் கிடைத்த வாய்ப்புத் தரப்பட்டிருந்தால், முடிகிறதோ இல்லையோ, அந்த நோக்குடன் பணியாற்றி இருப்பார். ரிஷ்லு அப்படிப்பட்ட எண்ணம் படைத்தவரல்ல.

மார்க்கத் துறையில் இடம் பெற்று, புகழ் பெற்று, அதன் மூலம் ஆட்சித் துறையிலே ஆதிக்கம் பெற வேண்டும் என்பதுதான் ரிஷ்லுவின் திட்டம். ஒழ்வொரு சம்பவமும், ஆதிக்கம் பெற வழி கோலவேண்டும் என்பது ரிஷ்லுவின் எண்ணம். கலம் ஏறிச் செல்வது கடற் காட்சி காணவா! வேறு பொருள் நாடியோ, வேறு இடம் தேடியோ தானே! அதே போலத் தான், ரிஷ்லுவுக்கு, மார்க்கம் ஒரு கலம்—கருவி!

முதல் பேரவைக் கூட்டத்திலே ரிஷ்லு, மதத்துறையினர் சார்பில் முழக்கமிட்டார். உண்மை! ஆட்சியாளர்கள், மதத் துறையினருக்குத் தக்க இடமளிக்க வேண்டும், அவர்தம் துணையை நாடிப்பெற்று, ஆட்சியைப் புனிதப் படுத்தவேண்டும், என்றெல்லாம் பேசினர். மார்க்கத் துறையினர் மகிழ்ந்தனர், நிமிர்ந்து நடந்தனர்! அப்போது ரிஷ்லு, லூகான் நகர தேவாலய அதிபர்! இப்போது? ஈடு எதிர்ப்பற்ற முதலமைச்சர்!! இந்த வித்தியாசத்தை மற்றவர்கள் உணரவில்லை! ரிஷ்லு இதனை மறக்கவில்லை. ஜெபமாலை தாங்கும் கரம் இப்போது பிரான்சை ஆட்டிப்படைக்கும் கரமாகி விட்டது! ரிஷ்லுவின் கோபம், எவரையும் பிணமாக்கும், நேசம், செல்

வத்தை, செல்வாக்கை பொழியச் செய்யும்! அன்று பேரவையிலே பண்டார ரிஷ்லு பேசியதை, இன்று பட்டத்தரசனைப் பதுமையாக்கி, அரசியல் ஆதிக்கம் நடாத்தும் முதலமைச்சர் ரிஷ்லுவுக்குக் கவனப்படுத்துவதா? என்ன மந்தமதி!! அவர்கள் கண்டார்களா, ரிஷ்லுவின் இத்தகைய மனப்போக்கை. அவர்கள் எண்ணிக் கொண்டது, ஒரு சிறந்த கொள்கைக்காக, உத்தம நோக்கத்துக்காக, ஏசுவுக்காக, அரசியல் ஆதிக்கத்தை ரிஷ்லு பயன் படுத்துவார் என்று!

ரிஷ்லு, கொள்கையை முன்னால் வைத்து, கோட்டையைப் பிடிக்க வில்லை. ஒரு முதலமைச்சரின் கொள்கை 'காவி கமண்டலங்களை'க் கொலு மண்டபத்துக்குக் கொண்டு வந்து, பாதபூஜை செய்வதாகவா இருக்க முடியும்! மற்ற அமைச்சர்கள், கைகட்டி வாய்பொத்தி நிற்க, அதிகாரிகள் குற்றேவல் புரிய, நீதிமன்றங்கள் குறிப்பறிந்து தீர்ப்பளிக்க, படை வீரர்கள் பகைவர் மீது பாய, ஆட்சிபுரிவது! ஏன் இந்தப் பூஜாரிகளுக்கு இது புரியவில்லை என்று எண்ணினன் ரிஷ்லு—அவர்களின் கோபத்தை ஒரு பொருட்டாகவும் மதிக்க வில்லை.

அவர்களின் கோபத்தை மட்டுமா அவர்களின் 'கண் கண்ட தெய்வம்' போப்பாண்டவரின் கோபத்தையே பொருட்படுத்த வில்லை.

வெளிநாட்டு நடவடிக்கை ஒன்றின்போது, போப் விரும்பாத காரியத்தை ரிஷ்லு துணிந்து செய்தார். அவருடைய செல்வாக்கு நிரம்பிய இடத்தைப் படை கொண்டு தாக்கி, அவர் வசமிருந்த இடத்தை விடுவித்தார்! அந்தப்படையும், பிரான்சு நாட்டுடையது அல்ல, பிராடெஸ்ட்டென்டுக்காரருடையது! அந்தப் படையை ஏவியதுடன், அதற்குப் பண உதவி செய்து, போர்மூட்டி வெற்றியும் கண்டார்—போப் வெகுண்டார், நமது ஆசியைக் கோரி நின்றவன் செயலா இது என்று பதைத்தார். கார்டினல் ரிஷ்லுவா இப்படிக் கத்தோலிக்க உலகத்தின் தலைவரைத் துச்சமாக எண்ணி எதிர்ப்பது என்று கேட்டார். ரிஷ்லு, கார்டினல் என்ற

முறையில் போப்பாண்டவருக்கு அடக்கம். ஆனால், முதலமைச்சர் என்ற நிலையில் போப்பாண்டவர் குறுக்கிட்டாலும், அரசுக்காக, பிரான்சுக்காக, கடமையைச் செய்தாக வேண்டும், என்று பதிலளித்தார் ரிஷ்லு.

கத்தோலிக்கர்களைக் கசப்படையச்செய்ததால், பிராடெஸ்டென்டுகளிடம் கண்ணியமாக நடந்து கொண்டார் போலும்என்றுஎண்ணிடத் தோன்றும். அப்படி ஒன்றுமில்லை. அவர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல.

ஹியூஜிநாட் என்றழைக்கப்படும், பிராடெஸ்டென்ட் மக்கள், பிரான்சில் ஒரு பகுதியில், மிக்க செல்வாக்குடன் வாழ்ந்து வந்தனர். அரசுக்குள் அரசுபோல், அவர்கள் தனிக் கோட்டைகள், தனிப் படைகள், தனி நகர ஆட்சிகள் அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். ஒப்புக்கு, பிரான்சு மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தனர்.

இந்த நிலைமையை ரிஷ்லு எதிர்த்தார், பிராடெஸ்டென்டுகளின் கோட்டை ஊரான லாரோகேல் என்னும் இடத்தை முற்றுகையிட்டுத் தாக்கி, சின்னபின்னமாக்கினார். அந்தப் போரின் போது கார்டினல் ரிஷ்லு இரத்த வெறி கொண்டலையும் ராணுவத் தலைவனாகக் காட்சி தந்தது கண்டு இவரா, அறநூற்களைப் படித்தவர், ஐயன் அடியாராக இருந்தவர், என்று எவரும் கேட்டிருப்பர்.

லாரோகேல் கோட்டை முற்றுகையின் போது, ஆங்கில அரசு பிராடெஸ்டென்டுகளுக்குத் துணை புரிவதாக வாக்களித்தது—ஓரளவு உதவிபுரிந்தது—உதவிக்கு வந்த கப்பற் படையை ரிஷ்லு முறியடித்து, லாரோகேல் கோட்டையை வளைத்துக் கொண்டான். சொல்லொணாக் கஷ்டப்பட்டனர் பிராடெஸ்டென்டுகள். பட்டினி ரிஷ்லுவின் படையைவிடக் கொடுமை விளைவித்தது. புல் பூண்டுகளும் கிடைக்கவில்லை, செருப்புத் தோலைக்கூட வேகவைத்துத்தின்றார்களாம்—அந்த வீரமக்கள் எலும்புந்தோலுமாயினர்—நோய் சூறையாடிற்று—முதியவர்கள் மாண்டனர், குழந்தைகள் இறந்தன, கொடுமையின் அளவு சொல்லுந்தரத்ததன்று. பணிவதன்றி வேறு

வழி இல்லை, பணிந்தனர்—ரிஷ்லு வெற்றிப்பவனி நடத்தி ஞன் வீழ்ந்து பட்ட மக்களின் கோட்டை ஊரில்! கோட்டை இடித்துத் தள்ளப்பட்டது, கொடி மரங்கள் வெட்டி வீழ்த்தப் பட்டன. உரிமை பறிக்கப்பட்டது—மார்க்கம் எப்படியோ இருக்கட்டும், தொழுகை உமது இஷ்டம்போல் செய்து கொள் ளுங்கள். ஆனால், படை, கொடி, கோட்டை என்று கனவி லும் எண்ணுதீர் என்று உத்தரவிட்டான் ரிஷ்லு. லாரோகேல் கோட்டையைப் பிடிக்க நடத்தப்பட்ட போரின் போது, ரிஷ்லுவின் இதயம், எவ்வளவு கொடுமைகளையும் துணிவுடன் கக்கக் கூடியது என்பது வெளிப்பட்டது.

கத்தோலிக்கரைக் கைகழுவிவிட்ட போதும் சரி, பிரா டெஸ்ட்டென்டுகளைப் பதறப்பதற அடித்தழித்தபோதும் சரி, ரிஷ்லுவின் எண்ணம், மார்க்கக்கொள்கையின்பாற்பட்ட தல்ல, ஆதிக்கம் ஒன்றுதான் குறிக்கோள். ரிஷ்லுவின் மொழியில் கூறுவதானால், எல்லா நடவடிக்கையும் அரசுக் காக! பிரான்சுக்காக!!

பொன் வேலைப்பாடுள்ள மங்கல நிற உடை, மார்பிலே நீல நிறக் கவசம், தலையிலே தொப்பி, தொப்பியில் பறவை இறகு, அலங்காரத்துக்கு; இடையே உடைவாள், கையிலே பிரம்பு—இது ரிஷ்லு, லாரோகேல் கோட்டைப் போரின் போது. கார்டினல் உடை, களத்துக்கு ஆகாது என்று கலைத்துவிட்டு, போர் வீரர்கள் மத்தியில், போர் வீரன் போலவே உலவினான். கார்டினல், கர்த்தரிடம் ஜெபம் செய்து அருள் பெற்று வெற்றியை நாடவில்லை—அது நட வாது என்பது ரிஷ்லுவுக்குத் தெரியும். களம் சென்று, இப் படித் தாக்குக, இப்புறம் பாய்க! என்று ராணுவ முறை கூறி வந்தான். வாலிபவயதில் ராணுவக் கல்லூரியில் கற்ற பாடங்களைப் பயன்படுத்த ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

லாரோகேல் போரிலே பெருமிதமான வெற்றி கிடைத்த தற்குக் காரணம், ரிஷ்லுவின் திட்டம் மட்டுமல்ல, பிரான்சுப் படையினர் காட்டிய வீரமும் ஒரு முக்கிய காரணம்; அந்த வீராவேசத்துக் காரணம், மன்னன் ஊட்டிய உற்சாகம். மன்னனுக்கு இந்தப் போரிலே உற்சாகம் அதிகமாக இருந்த

தற்குக் காரணம், லாரோகேல் கோட்டையினருக்குத் துணை புரிய வந்த ஆங்கிலக் கப்பற்படைக்குத் தலைமை தாங்கி, பக்கிங்காம் பிரபு வந்தது! அதற்குக் காரணம், ஒரு அரண்மனைச் சம்பவம்!

ஒயில்மிக்கவன், பக்கிங்காம் பிரபு! ஆங்கிலநாட்டுச் சீமான், அரசனுடைய ஆதரவு நிரம்பப் பெற்றவன். அழகு கண்டால், ரசிகனாகிவிடுவான்—ரசிகனானதும், ரசாபாசம் நேரிடும்! களியாட்டத்தில் விருப்பமுடையவன். கண்டதும் காதல் கொள்பவன் மட்டுமல்ல, எந்தக் கட்டழகியும், தன் கண் தொட்டால் பணிந்துவிடுவாள் என்பதிலே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன். அலங்காரமான உடை, ஆளை மயக்கும் பேச்சு, அளவற்ற துணிச்சல்.

லூயி மன்னனுடைய உடன் பிறந்தாள், ஹெனிரிட்டா, இங்கிலாந்து மன்னன் சார்லசுக்கு மனைவியானாள்.

ஹெனிரிட்டாவை, இங்கிலாந்து அழைத்துச் செல்லும் உயர்தனிக் கௌரவம், பக்கிங்காம் பிரபுவுக்குத் தரப்பட்டிருந்தது. பாரிஸ் வந்தான், அரண்மனையில் தங்கினான், மாடப்புறுவைக் கண்டான், மையல் கொண்டான். நிராகரிக்கப்பட்ட அழகி, நிம்மதியற்ற நங்கை, ஆன், அவன் கண்ணில் தட்டுப்பட்டுவிட்டாள்! போதாதா!! மன்னனோ அவளிடம் முகங்கொடுத்துப் பேசுவதில்லை, மங்கையோ வாடா மல்லிகை என மணம் வீச இருக்கிறாள். ஆரத்தழுவும் உரிமை கொண்டோன் அலட்சியப் படுத்திவிட்டான், ஆரணங்கு படரும் கொழுகொம்பற்ற கொடியெனத் துவள்கிறாள். கண்களிலே ஏக்கம் இருப்பதும், கவர்ச்சியை அதிகப்படுத்துவதாகவே இருக்கிறது. பக்கிங்காம், தீர்மானித்து விட்டான், ஆன் அரசியை இன்பபுரி அழைத்துச் செல்வது என்று.

பச்சை மயில் பாங்குடன் உலவுகிறது—பார்த்து ரசிக்கும், நிலையிலும் மன்னன் இல்லை! வலைவீசத்துணிந்து விட்டான், பக்கிங்காம்.

தனியே ஒரு நாள், ஆன், அரண்மனைத் தோட்டத்திலே உலவிக்கொண்டிருந்தாள்—உல்லாச புருஷன் அங்கு சென்

ருன்—காதலைப் பொழிந்தான் பார்வையால், திடுக்கிட்ட மங்கையை நெருங்கினான், கரம்பற்றினான், இன்ப அணைப்பு; அவளுக்கு இதயத் துடிப்பு, எதிர்பாராச் சம்பவம், எனவே இளமங்கை, அலறிவிட்டாள்—தன்னை விடுவித்துக் கொண்டபடி. ஆன் அலறிய குரல் கேட்டு அணங்குகள் ஓடிவந்தனர்.

"அரசியாரே! அலறினீர்களா"

"யார்? நானா! அலறினேனா!"

"குரல் கேட்டதே!"

"ஆமாம்—செல்வோம்"

எப்படிச் சொல்வாள் நடந்ததை—சாகசக் கள்ளன் சமயம் சரியில்லை, பழம் நழுவிவிட்டது, என்று எண்ணிச் சென்றான்.

நாட்டுக்கு அரசி! நாயகன் இளைஞன்! அரண்மனைத் தோட்டம்! அயல்நாட்டான்!—என்ன அக்ரமம்—இவ்வளவு துணிவு! என்கதி இதுதானா!—என்று ஆன் எண்ணாமலிருக்க முடியுமா. தனி அறைக்குள். மன அதிர்ச்சி குறையுமா! பயம்—பயத்தின் ஊடே கோபம்—இந்த இரு உணர்ச்சிகள் மட்டுந்தானா, இவைகளை விரட்டிய வண்ணம், ஆவல்!

எவ்வளவு துணிவு! என்ன அக்ரமம்......என்று குமுறிய நெஞ்சம், மெள்ள மெள்ள, எவ்வளவு ஆவல்! என்னகாதல்!! என்று எண்ணலாயிற்று.

தலைபோகும் காரியமாயிற்றே, என்பது தெரியாதா—தகாத காரியம் என்பதும் தெரியாதா—தெரிந்தும், ஏன் அவன் என்னைக் கரம்பிடித்திழுத்தான்! அவ்வளவு காதல்!! துணிந்து செய்தான்! அணைத்துக் கொண்டானே, என்னை - நான் விடுவித்துக்கொள்ளாதிருந்தால்?......செச்சே! கெட்டவன், போக்கிரி, எதுவும் செய்வான்அவன். ஆமாம்! காதலால் தாக்கப்பட்டவர்களுக்குத் தான் கண் தெரியாதாமே!...அவன் அணைத்துக் கொண்டபோது என் உள்ளம் எவ்வளவு பதறிற்று—உடல் மட்டும் ஏனோ பதறவில்லை—

ஏனேவா?—அவன்தான் ஆரத் தழுவிக்கொண்டானே! ஆன் அரசியின் உள்ளம் எதைத்தான் தள்ளும். கண்ணைத் திறந்த படி இருந்தாலும் மூடினாலும், தனி அறையில் இருந்தாலும் சேடியருடன் இருந்தாலும், இசை கேட்டுப் பொழுது போக்கினாலும், வானத்தைக் கண்டு மகிழ முயற்சித்தாலும், அவனல்லவா வந்துவிடுகிறன்! ஆரத் தழுவுகிறன்!! ஆருயிரே! என்கிறன். இதுநாள் வரை கேட்டறியாத கீதம், உணர்ந்தறியாத இன்பம்! பொல்லாதவன், நல்ல உள்ளத்தைக் கெடுத்தேவிடுவான் போலிருக்கிறதே—எங்கே அவன் இப்போது—என்ன செய்கிறன் — மறுத்தேன் என்பதால் மருண்டோடி விட்டானு — அதே மலர்த்தோட்டத்திலே உலாவுகிறனு — நான் வருவேன் என்று—பேதை உள்ளம் என்னவெல்லாமோ எண்ணிற்று. அவன் வென்று விட்டான்—அவள் பணிந்து விட்டாள். உள்ளம் பணிந்து விட்டது. உடனிருந்த தோழி அவள் உள்ளமறிந்து, பக்குவமாகப் பாகுமொழி பேசினுள். பிரபு அழைக்கப்பட்டான்—மஞ்சத்துக்கு! கொஞ்சு மொழி பேசினுன்! அவள் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருக்கிறள்—அவன் கீழே முழங்காற்படியிட்டபடி, மயக்கமொழி பேசுகிறன்! அவன் இருக்கும் இடத்தில், நிலையில் மன்னன் மட்டும் இருந்தால்! மன்னனு! அவனு என் மணுளன்? ரிஷ்லுவின் அடிமைக்கு ஒரு மங்கையின் உள்ளத்துக்கு இன்ப மூட்டும் பண்புமா இருக்கும். என்னைப் பட்டினி போட அல்லவா இந்த அரண்மனையில் சிறைவைத்தான்—இதோ வந்திருக்கிறன் வீரன், விடுதலை கிடைக்கும், விருந்து கிடைக்கும். ஆன் எண்ணுத எண்ணமில்லை.

விருந்து கிடைத்தது பிரபுவுக்கு! என்கிறர்கள்—இல்லை என்றும் கூறுகிறர்கள். பக்கிங்காம்-ஆன் காதலாட்டம் பற்றிய பேச்சு, அரண்மனையில் மட்டுமல்ல கடைவீதிகளிலே, பிரான்சிலேமட்டுமல்ல, உல்லாச உலகெங்கும் கிளம்பிற்று.

அந்தப் பக்கிங்காம், நூறு கப்பல்களுக்குத் தலைவனுக வருகிறன். லாரோகேல் கோட்டையினருக்குத் துணைபுரிய! பிரன்ச்சு மன்னன், அவனுடைய முயற்சியை முறியடிக்க

வேண்டுமென்பதிலே அளவற்ற ஆர்வம் கொண்டதிலே ஆச்சரியம் என்ன!

பக்கிங்காம், காதலில் பெற்றிருந்த திறமையின் அளவுக்குப் போரிலே பெற்றிருந்து, லாரோகேல் கோட்டைப்போரில் பிரான்ச்சு மன்னனை முறியடித்திருந்தால்? ஏதேதோ நடைபெற்றிருக்கும். அலங்காரக் கப்பலொன்றிலே, அணங்குகள் ஆடிப் பாட, மகிழ்வோடு அவர் நடுவே ஆன் வீற்றிருக்க, பக்கிங்காம் காதல் பொழியும் கண்களுடன் அவளைக் கண்ட வண்ணம், இங்கிலாந்துக்குப் பயணமே செய்திருக்கக்கூடும். அந்நாள், அரச குடும்பங்களிலும், பிரபு குடும்பங்களிலும், இத்தகைய சுவைக்கு, அளவும், வகையுமா இருந்தது! கணக்கில்லை!!

பிராடஸ்டென்டுகளை எதிர்த்து நடத்தப்படும் போர் இது; புனிதப்போர்!—என்று பேசி, கத்தோலிக்கர் மனதில் கனலை மூட்டிவிட முடிந்தது ரிஷ்லுவால்! கத்தோலிக்கருக்கு நீ செய்த நன்மை என்ன? காட்டிய சலுகை யாது? என்று யாரும் கேட்கவில்லை. அவர்கள் பிராடஸ்டெண்டுகளை அழித்திடப் போரிடுவது ஐயன் அருளுக்குப் பாத்திரமாகும் வழி என்று கருதினர்; சீறிட்டுப் போரிடக்கிளம்பினர்; மடாலயங்கள் போர்ச் செலவுக்குப் பொருளை அள்ளிக் கொடுத்தன; இந்தப் புனிதப் போரிலே ஈடுபடுவோரின் பாவங்கள் துடைக்கப்பட்டுவிடும் என்று போப்பாண்டவரின் ஸ்ரீமுகம் பிறந்தது; ரிஷ்லு, களிப்புடன் களம் புகுந்து காரியத்தைக் கவனிக்கலானார், போர்வீரன் உடையில்!

கத்தோலிக்க மார்க்கப் போதகர், பிராடெஸ்டெண்டு தத்துவத்தைக் கண்டதுண்டமாக்கியவர், ரிஷ்லு, இவர் தொடுக்கும் இந்தப் புனிதப்போர், முதல் கட்டம். இதிலே கிடைக்கும் வெற்றி, வேறு பல வெற்றிகளுக்கு வழி செய்யும், ஐரோப்பாவில், பிராடெஸ்டெண்டு பூண்டே இல்லாது ஒழித்துக் கட்டப் போகிறார் என்று கத்தோலிக்கர் எண்ணிக் கொண்டனர்; ரிஷ்லு இதைக்கண்டு மகிழ்ச்சிகொண்டார்; மந்தமதியினர் அவருடைய உண்மையான நோக்கத்தைக்

கண்டுகொள்ளவில்லை; கத்தோலிக்க மார்க்கரட்சகர், என்று அவர்கள் ரிஷ்லுவைக் கொண்டாடினர்; அவருடைய நோக்கம், கத்தோலிக்கரின் செல்வாக்கை வள த்திட பிராடெஸ்டென்டுகளை ஒழித்திட வேண்டும் என்பதல்ல, ஆட்சியைத் தான் முன்னின்று நடத்திச் செல்லும்போது, பிரான்சிலே ஒரு பகுதியினர், அடங்க மறுப்பதா! என்ன துணிவு! இவர்களை ஒழித்துக்கட்டா விட்டால், நம் மதிப்பு என்ன ஆவது! இது ரிஷ்லுவின் எண்ணம்.

பதினைந்து திங்கள் முற்றுகை! உள்ளே ஒரு பொருளும் போகமுடியாது! பட்டினி போட்டுச் சாகடிக்கும் முறையிலே போர் இருந்தது! சித்திரவதைக்கு ஆளாக்கப் பட்டனர்! தன் மானம், நிமிர்ந்து நிற்கச் சொல்லுகிறது. பசியோ, பணிந்து விடு! என்று தூண்டுகிறது! உள்ளே இப்படி அடைபட்டுச் சாவதைவிட. போரிலே, தாக்கி, தாக்குண்டு இறந்துபடுவது எவ்வளவோ மேலாக இருக்குமே என்று எண்ணினர் அந்த மக்கள். பழைய செருப்புத் தோலைக்கூட வேகவைத்துத் தின்றனராம், எலும்புந் தோலுமாகிப்போன நிலையில்! இந்த அவதி பற்றி, லூகான் ஆலய அதிகாரியாக இருந்த ரிஷ்லுவுக்குத் துளியேனும் இரக்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை! உள்ளே அல்லல் அதிகமாகி விட்டது, அவதிப்படுகிறார்கள் என்று ‘சேதி’ கிடைத்ததும், அவருடைய உள்ளம், சரி! பயல்கள் இன்னும் சில நாட்களில் பணிந்து விடுவார்கள்! நாம் மேலும் ஓர் வெற்றி பெறுவோம், நமது புகழொளி பரவும் என்று எண்ணி மகிழ்ந்தது.

ஆஸ்திரிய அரச குடும்பத்தின் செல்வாக்கைக் குலைக்கும் திட்டம் ரிஷ்லுவுக்கு உண்டு. இதற்காகச் சமர் நடத்தினான், வெற்றி கிடைத்தது. சவாய் பரம்பரைக்கும், ரிஷ்லுவின் போக்கினால் கஷ்டம், நஷ்டம். இவைகளின் பயனாக பிரன்ச்சு மக்களுக்கு ஏதேனும் நலன் கிடைத்ததா என்றால், இல்லை; ரிஷ்லுவின் கண்களுக்கு மக்கள் தெரியவுமில்லை.

ரிஷ்லுவின் நிலை உயர உயர, பகையும் வளரத்தான் செய்தது—ஒவ்வொரு பகையையும் பயங்கரமான முறையிலே முறியடித்துவந்தான். ஒற்றர்கள் அவனுக்குக் கண்கள்,

காதுகள்! எந்த நேரத்திலும் ஆபத்து நேரிடலாம் என்ற அச்சம்; எனவே ரிஷ்லு, ஆயுதம் தரித்த காவலாட்களின்றி வெளியே செல்வதில்லை. எந்த மாளிகையிலே பேசப்படும் விஷயமும், ரிஷ்லுவுக்கு எட்டிவிடும். எனவே, முன்னேற்பாடுகள் செய்வது எளிதாகவும் வெற்றிகரமாகவும் முடிந்தது. இவைகளுக்காகப் பெரும் செலவு—அரசாங்கப் பணத்திலிருந்து. அரசுக்காக! பிரான்சுக்காக! என்ற மந்திரச் சொல்லைக் கூறியபடி, மட்டற்ற கொடுமைகளைச் செய்துவந்த ரிஷ்லு, அரசனையும் மிஞ்சக்கூடிய செல்வம் சேகரித்துக் கொண்டான். ஏழை கோயிலுக்குப் பூஜாரியாக இருந்து வந்த ரிஷ்லுவிடம் ஏராளமான செல்வம், இணையற்ற மாளிகை, ஆடம்பரமான வண்டி வாகனங்கள், காலாட்படை குதிரைப்படை! பாடகர்கள்! பணியாட்கள்! உறவினர்களுக்கு உயர் பதவி தரக் கூசவில்லை. ஊரார் பார்த்து, இவ்வளவு செல்வம் எப்படிக் கிடைத்தது என்று கேட்பார்களே என்று எண்ணவுமில்லை. பொன் அவன் காலடியிலே வந்து வீழ்ந்தது! நாடோ, ஏழ்மைப் படுகுழியிலேயே இருந்தது.

பாரிஸ் நகரிலேயே நிகரற்ற அழகி என்று புகழப்பட்ட ஹாடிபோர்ட் என்பாளிடமானாலும், அவளிடம் மனத்தாங்கல் கொண்டபோது கிடைத்த பாயேடி என்பவளானாலும், எந்த மங்கையிடமும், மன்னன் பழகியது இந்த முறையிலேதான். ரிஷ்லுவுக்கு இதிலே மிகுந்த திருப்தி. கெண்டை விழி மாதரிடம் மன்னன் மற்றவர்கள் போலப் பழகிவிட்டால், ஆபத்தல்லவா!

மன்னன் சிரித்தால்; உடன் சிரிக்கவேண்டும், சோகமாக இருந்தால் சோகமடையவேண்டும், பேசுவதைக் கேட்டுக்கொள்ளவேண்டும், ஆர்வம் அதிகமாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும்—இவ்வளவுதான் மன்னன் தன்னுடன் பழகிய பாவையரிடம் விரும்பியது.

இந்த ஹாடிபோர்ட், பாயேடி, எனும் இருவருமே, ரிஷ்லுவின் போக்கை உணர்ந்தனர்—வெறுத்தனர். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே, ரிஷ்லுதான் வெறுப்பை மூட்டி

விட்டான் என்று கண்டித்தனர். தங்களிடம் பழகுவதால், தாங்களே மன்னனிடம் மெள்ள மெள்ள உண்மையைச் சொல்லலாம், ஆன் நல்ல நிலைமைக்கு வரஉதவிபுரியலாம் என்று முயன்றனர், முடியவில்லை.

ஹாடிபோர்ட், ஆன் சார்பாக மன்னனிடம் பேசத் தொடங்கியதும், மன்னன் கோபங்கொண்டு, அவளை விட்டு விலகினன். பிறகு, ஜோசப் பாதிரியின் உறவினளான, அந்த மங்கை, ரிஷ்லுவுக்கு விரோதமாக மன்னனைத் திருப்ப முயற்சித்தாள். பலிக்கவில்லை. அந்த மங்கையைக்கொண்டு மன்னனைத் தங்கள் வலைக்குள் போடலாம் என்று சிலர் முயன்றபோது, அவள் அதற்கும் இடம் தராமல், கன்னி மாடம் சேர்ந்துவிட்டாள். அவள் கன்னி மாடம் சேர்ந்த பிறகு கூட, மன்னன் அங்கு சென்று, மணிக்கணக்காக அவளிடம் பேசிக்கொண்டிருப்பானும். அப்போதும் அந்தப் பாவை, ரிஷ்லுவின் பிடியிலிருந்து மன்னன் விடுபடவேண்டும் என்பதையே வலியுறுத்தி வந்தாளாம்—இதனுல் வெறுப் படைந்த மன்னன், கன்னிமாடம் செல்வதையே நிறுத்திக் கொண்டானும். ரிஷ்லுவுக்கு எதிராக எவரேனும் ஏதேனும் சொன்னுலும், கேட்பதற்கு மன்னன் விரும்புவதில்லை. அவ்வளவு பற்று ஏற்பட்டுவிட்டது. ரிஷ்லுவுக்கு இந்தத் துணை இருக்குமட்டும் மற்றவர்களைப் பற்றிக் கவலை என்ன! மேரி அம்மையை அறவே புறக்கணித்தான்—அம்மையின் மனதிலேயோ, பகை முழுவடிவெடுத்தது. சமயம் வரவில்லை.

மன்னன், ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டான்—ஆபத்தான நிலைமை—மருத்துவர்களே, கடினம் என்று கூறிவிட்டனர். மகன் மரணப் படுக்கையில், அன்னைக்கு அகமகிழ்ச்சி! மகனிடம் கொண்ட வெறுப்பாலா? அது காரணமல்ல. எவ்வளவு வெறுப்பு இருப்பினும், பாசம் விடுமா, மகனை இழக்கத் தாய் விரும்புவாளா? காரணம், வேறு. மன்னன் இறந்துவிட்டால், ரிஷ்லுவைத் தொலைத்துவிடலாம் என்ற எண்ணம், அகமகிழ்ச்சியைத் தந்தது. ரிஷ்லுவின் கொடுங்கோன்மைக்கு ஆளாகி அவதிப்பட்டவர்கள் அனை

வருமே, இந்த நிலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.

மன்னன் இறந்ததும், ரிஷ்லுவை வெட்டிப் போடுவதா, நாட்டைவிட்டு விரட்டுவதா?

ரிஷ்லு தொலைந்ததும், யாரார் எந்தெந்தப் பதவி வகிப்பது?

இவைகளெல்லாம் கூடப் பேசப்பட்டனவாம்.

ரிஷ்லுவுக்கும் உள்ளூரப் பயம்தான்.

மன்னனே அனைவரையும் ஏமாற்றிவிட்டான்—பிழைத்துக்கொண்டான். ரிஷ்லு, மகிழ்ந்தான்—சதிபேசியவர்கள் மீது பாய்ந்தான்.

மற்றோர் சமயத்தில், மன்னனுக்கும் மேரிக்கும் மிகுந்த நேசம் இருந்தது — மன்னனுக்குச் சரியான தூபமிட்டு ரிஷ்லுவை விரட்டிவிடும்படி ஏவினார்கள் தாயார். தாயும் மகனும் பேசிக்கொண்டிருந்த தனி அறைக்குச் செல்லவும் ரிஷ்லுவுக்கு அனுமதி கிடையாது. ரிஷ்லுவுக்கு அச்சமாகி விட்டது. எனினும், கடைசி நேரத்தில் மன்னன் ரிஷ்லுவைக் கைவிட மறுத்துவிட்டான். மேரி மனமுடைந்து, இனி நமது திட்டம் பலிக்காது என்று தெரிந்துகொண்டு ஓய்ந்தே போனாள்.

அவ்விதமான 'பிடி' இருந்தது ரிஷ்லுவுக்கு, மன்னனிடம்.

எந்த மங்கையின் விழியும் மொழியும் மன்னனுக்கு மது ஆகிவிடுவதில்லை, என்பது ரிஷ்லுக்கு தெரிந்திருந்தபோதிலும் இலேசாக அச்சம் தட்டியபடி இருந்தது.

முன்னம் இரு மங்கையர் மன்னன் மனதைக் கெடுக்க முயன்ற சம்பவம், இந்த அச்சத்தை வளர்த்தது. எனவே, மன்னனைப் பெண்களுடன் பழகவிடுவது, எப்போதாவது ஆபத்தாக முடிந்துவிடக்கூடும் என்று எண்ணினான் ரிஷ்லு, ஆனால் மன்னன், தனியனாக எப்படி இருப்பான்; சோர்வு

தட்டுமே! பொழுது போக்க வேண்டுமே! அதற்கென்ன செய்வது!

பதினெட்டு வயது நிரம்பிய, பார்க்க இலட்சணமாக இருந்த பகட்டு வாலிபன் ஒருவன் கிடைத்தான் ரிஷ்லுவுக்கு. பெயர், சின்க் மார்ஸ். இந்த இளைஞனை அரண்மனை உடை அதிகாரியாக ரிஷ்லு நியமித்தான். மன்னனுடன் பழக சின்க்மார்ஸ், அமர்த்தப்பட்டான்.

தன்னைவிட வயதில் இளைஞன், சின்க்-மார்ஸ், எனவே அவனிடம் தாராளமாகப் பேசவும், தன் எண்ணங்களைத் தைரியமாக எடுத்துச் சொல்லவும் மன்னனுக்கு முடிந்தது—அதிலே ஒரு இன்பம் கண்டான். பெண்களுடன் பழகுவது கூடக் கூச்சமாக இருக்கிறது, இவனுடன் பேசுவதும் பழகுவதும் மகிழ்ச்சி தருகிறது என்று நினைத்தான் மன்னன்.

சின்க்-மார்ஸ், ஒரு அசடன். ரிஷ்லுவிடமிருந்து மன்னனைப் பிரித்துவிட முடியும், மன்னனைத் தன் விருப்பப்படி ஆட்டிவைக்க முடியும் என்று எண்ணினான். சதிபுரிவோர், அவனைப் பயன்படுத்திக் கொண்டனர். மன்னனின் தம்பி, காஸ்டனும் உடந்தை.

அதுபோது, ரிஷ்லு, ஸ்பெயின் மீது போர் தொடுத்திருந்தான்.

உடலிலேயோ புண் - சீழ் வடிந்து கொண்டிருந்தது—காய்ச்சல் குறையவில்லை—மருத்துவர் உடலிலிருந்து அடிக்கடி இரத்தத்தை வெளியிலே எடுத்த வண்ணம் இருந்தனர், நோயை குறைக்க. மரணப்பாதையிலே சென்றுகொண்டிருக்கும் நேரம். அந்த நேரத்திலும், தன் ஆதிக்கத்தைக் குலைக்க ஒரு சதி நடக்கிறது என்று தெரிந்ததும், ரிஷ்லு சீறும் புலியானான். சதியிலே சேர்ந்தவர்களெல்லாம் சாய்ந்திருக்கும்போது, அலங்காரப் பொம்மை போன்ற சின்க்-மார்ஸ் எம்மாத்திரம். அவன் தன் திட்டம் வெற்றியாகப் போகிறது என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான், ரிஷ்லுவோ அவனைச் சிக்கவைக்கும் ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தான்.

சின்க்-மார்ஸ், மன்னனுடன் உல்லாசமாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறன். ரிஷ்லுவின் ஆள். மன்னனைத் தனியே கண்டு, ரிஷ்லுதந்த கடிதத்தைக் கொடுத்தான்—மறு கணம், சின்க்-மார்ஸ் அவன் 'சகாக்களுடன்' கைது செய்யப்படுவதற்கு, மன்னன் உத்தரவு பிறப்பித்தான்.

ஸ்பெயின் நாட்டுடன் கூடிக்கொண்டு பிரான்சுக்குத் துரோகம் செய்ய, சின்க்-மார்சும் அவன் துணைவர்களும் திட்டமிட்டனர் என்பதை விளக்கும், கடிதம் ரிஷ்லுவால் மன்னனுக்கு அனுப்பப்பட்டது. சின்க்-மார்ஸ் கட்டிய மனக் கோட்டை தூள்தூளாயிற்று.

சின்க்-மார்சும் அவன் துணைவர்களும் தூக்கிலிடப் பட்டனர்.

ரிஷ்லுவுக்கு இதற்குமேல் ஆதிக்கம் செலுத்த உடல் இடம் தரவில்லை. எப்போதும் உடலைத் துளைத்துக்கொண்டிருந்த நோய், இப்போது உடலை அழுகவே செய்துவிட்டது. பிழைப்பது முடியாத காரியம் என்பது விளங்கிவிட்டது. நார்போன் எனும் நகர் சென்று, ரிஷ்லு, 'உயில்' எழுதி வைத்துவிட்டான். மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏறக்குறைய எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது என்ற திருப்தி இருந்தது ரிஷ்லுவுக்கு.

நெடுநாட்களாக ரிஷ்லுவுக்கு இருந்து வந்த பயம், லூயி மன்னனுக்கு குழந்தையே பிறக்காததால், மன்னனுக்குப் பிறகு, காஸ்டன் என்னும் இளவல் மன்னனுவானே, என்பது. இந்தப் பயம், ஒழிந்துவிட்டது. நீண்ட காலமாக ஒதுக்கி வைத்திருந்த ஆன் அரசியிடம், மன்னன் எப்படியோ சமாதானமானுன். 1638-ல், ஒரு ஆண்மகவு பிறந்தது. அந்தச் 'சேதி'யை முதலில் வந்து சொன்னவருக்கு, ரிஷ்லு வைரத்தால் செய்யப்பட்ட ரோஜாமலர் ஒன்று பரிசு தந்தானும்.

மரணப் படுக்கையிலே ரிஷ்லு—மனக்கண்முன் என்ன தெரிகிறது!

ஈடு எதிர்ப்பற்ற ஆதிக்கம் செலுத்திய காட்சிகள்.

எவர் பேச்சுக்கும் இணங்காமல், தன்னிடம் கட்டுப் பட்டுள்ள மன்னன்.

மேரி-முயன்று பார்த்துத் தோற்று, மனம் உடைந்து, அங்கும் இங்கும் அலைந்து மாண்டேபோனுள்.

காஸ்டன்-மன்னன் தம்பி, இனித் தனக்கும் அரச பதவிக் கும் சம்பந்தம் இல்லை என்பது புரிந்துவிட்டதால், பெட்டியி லிட்ட பாம்புபோலாகிவிட்டான்.

எதிர்த்தவர்கள்? கல்லறையில்! ஜோசப் பாதிரியார்? நல்ல உழைப்பாளி. அவரும் மறைந்துவிட்டார்.

லூகான் நகர பழங் கட்டிடம், அதிலிருந்து புறப்பட்ட பயணம், பாரிஸ் போற்றும் மாளிகையிலே வந்து முடிந்தது.

ரிஷ்லுவின் வாழ்க்கையைப் பொறுத்தமட்டிலே. மகத் தான வெற்றி என்றுதான் கணக்கிடவேண்டும்.

போட்ட திட்டப்படி காரியம் நடந்தேறியது — ஒரு அரசை, தன் கரத்திலே வைத்து விருப்பப்படி விளையாட முடிந்தது.

பிரபுக்கள் கொட்டமடங்கிவிட்டது. வெளிநாடுகளிலே யும் புகழ் பேசப்படுகிறது. இவைகள் போதுமான சாதனை கள்தான் என்ற மனத்திருப்தி நிச்சயமாக ரிஷ்லுவுக்கு ஏற் பட்டிருக்கும்.

1642-ம் ஆண்டு, டிசம்பர் நாலாம் நாள்' ரிஷ்லு இறந் தான். அன்று மக்கள் மகிழ்ந்து பல்வேறு இடங்களில் 'சொக்கப்பானை' கொளுத்தினராம்!

போப்பாண்டவர் இதைக் கேள்விப்பட்டதும், "ஆண்ட வன் ஒருவர் இருந்தால், கார்டினல் ரிஷ்லு அவரிடம் பதில் சொல்லித் தீரவேண்டும். ஆண்டவன் இல்லை என்றுல், அவன் கீர்த்தியுடன் வாழ்ந்தான் என்றுதான் பொருள்படும்" என்று கூறினுராம்.

எதையும் திட்டப்படி செய்யும் பழக்கமுள்ள ரிஷ்லு, தனக்குப் பிறகு, தன் 'செல்வத்தை' யாரார் எப்படி எப்படிப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பதையும், திட்டமாக எழுதி வைத்துவிட்டுத்தான் மரணத்தை நோக்கிப் பயணமானான்.

எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்பது, ரிஷ்லுவுக்கு இருந்துவந்த ஆவேசம்—அந்த ஆவேசத்தின் முன்பு எந்தப் பண்பும் தலைகாட்டவில்லை.

தன்னைச் சுற்றிலும் பகைவர்கள் இருக்கிறார்கள் எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடும் என்று எண்ணிக் கொண்டதால், யார் எதிர்ப்புக் குரல் கிளப்பினாலும், உடனே அவர்கள் மீது முழுப் பலத்துடன் பாய்ந்து தாக்கி அழுத்திவிடுவதில், காட்டு மிருகத்தின் குணத்தையும் திறத்தையும் ரிஷ்லு பெற்றிருந்தான்.

எத்தகைய சந்தர்ப்பத்தையும் நிகழ்ச்சியையும், தன் ஆதிக்க நோக்கத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதிலே ரிஷ்லு காட்டிய ஆற்றல், வெகு சிலரிடமே காணமுடியும்.

ஆதிக்கம் தேடும்போது, ரிஷ்லு, இரை தேடும் புலி மோப்பம் பிடித்தும், இரை தொலைவில் தெரிந்ததும், பாய்ந்து தாக்கியும், இரத்தத்தைக் குடிக்கும் புலிபோல், ஆதிக்கம் பெற வழி காண்பதிலும், கண்ட வழியில் பாய்ந்து செல்வதிலும், புலிபோன்றிருந்தான் ரிஷ்லு.

இரை தேடி அலையும்போது, காட்டு மிருகம், வேறு எதனையும் பொருட்படுத்தாதல்லவா—அதேகுணம் ரிஷ்லுவுக்கு இருந்தது.

ரிஷ்லு, சிறுவனாக இருந்தபோது, களைத்தும் இளைத்தும், இருமியும் நடுங்கிக்கொண்டும் இருந்தபோது, அன்புடன், அவனை வளர்த்த அருமைத் தாயார், பிணமாகி இருபத்தொரு நாட்களான பிறகே, ரிஷ்லு சவ அடக்கச் சடங்குக்குச் சென்றான். தாயார் இறந்துவிட்டார்கள், உடனே வருக!—சேதி கிடைக்கிறது—பதறவில்லை, பதைக்கவில்லை, பெற்ற தாயைக் காண ஓடவில்லை. சவ அடக்கம் செய்யவேண்டும்,

உடன் வருக! என்று கடிதம் வருகிறது. செல்லவில்லை!! நாலு நாட்களாகக் காத்துக் கிடக்கிறோம், தாங்கள் வந்து தான் சவ அடக்கம் நடைபெற வேண்டும். இதற்கும் செல்லவில்லை. அவசரமான அலுவல்-இப்படி அப்படி அசைய முடியாது—தாய் இறந்தார்களா, தாங்கொணுத் துக்கம்தான், ஆனுல் என் செய்வது, காரியம் இருக்கிறதே, முடிந்ததும் கடுகிச் செல்லலாம்—என்றுதான் எண்ணினுன் ரிஷ்லு.

எப்படி மனம் இடங்கொடுத்தது என்றுதான் எவரும் கேட்பர். ரிஷ்லுவின் மனம் அப்படிப்பட்டது.

ஆட்சிக் குழுவிலே ரிஷ்லுவுக்குச் செயலாளர் பதவி தரப்பட்டது. அப்போதுதான் தாயார் இறந்த செய்திவந்தது. இருபத்தோரு நாள் கழித்தே ஊர் சென்று, சவ அடக்கம் செய்தான் ரிஷ்லு.

ஊர் என்ன எண்ணும், என்ன சொல்லும் என்பது பற்றிப் பயப்படுவதில்லை.

ஊருக்கு, தன்னைப்பற்றித் தெரிவித்துக்கொள்ளும் விளம்பரப் பிரசாரத்தையும் திறம்பட நடத்திவந்தான்.

பேரவைக் கூட்டத்திலே முதன்முதல் பேசியதும், பலரும் பாராட்டினர்—ரிஷ்லு அவ்வளவுடன் திருப்தி அடையவில்லை, அந்தச் சொற்பொழிவை அச்சிட்டு, ஏராளமாக வழங்கிட ஏற்பாடு செய்தான். எதையும் அரைகுறையாக விட்டுவைப்பது, ரிஷ்லுவின் முறையல்ல. பிரன்ச்கெஜட் எனும் பிரசார இதழைத் துவக்கி, திறமையான ஆசிரியர் மூலம் நடத்தச் செய்து, அதன்மூலம், ரிஷ்லு, தன்னைப் பற்றியும் தன் ஆட்சி முறையைப்பற்றியும் பிரசாரம் செய்துவந்தான்.

காற்று இல்லை, வெளிச்சம் இல்லை, மலர் இல்லை, மகிழ்ச்சி இல்லை, வெள்ளிச் சாமான் இல்லை, பட்டு விரிப்பு இல்லை என்று ஆயாசப்படும்நிலையில், லூகான் நகர தேவாலய அதிபராக இருந்துவந்த ரிஷ்லு "அரசுக்காக! பிரான்சுக்காக" பணியாற்றிப் பெற்ற நிலை எப்படி இருந்தது! மன்னனுக்கு, தன் உயிலின்படி 1,50,000 பவுன் வைத்திருந்தான்! இதை,

மன்னர், பண நெருக்கடியின்போது உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்ற குறிப்புடன். மன்னனுக்குப் பணம் தந்துவிட்டுச் சாகும்நிலை இருந்தது ரிஷ்லுவுக்கு.

கார்டினல் அரண்மனை எனும் உயர்தர மாளிகை;வைரக்கற்கள் பதித்த தங்க ஆபரணம், வெள்ளிப் பேழைகள் ஆகியவைகளை மன்னனுக்குத் 'தானம்' தர முடிந்தது ரிஷ்லுவால்.

நெருங்கிய உறவினர்களுக்கு ஏராளமான நிலபுலமும், தோட்டமும் மாளிகையும்.

ஜெமீன்களும் இனம்களும், பகிர்ந்தளித்தான்.

இலட்சக்கணக்கிலேபணம்குவிந்திருந்தது-அவைகளைத் தன் நெருங்கிய உறவினர்களுக்குப் பகிர்ந்தளித்தான்.

ரிஷ்லுவின் உயிலிலே குறிப்பிட்டிருக்கும் புள்ளி விவரத்தைக் கவனிக்கும்போது, பிரான்சிலே இருந்து வந்த எந்தப் பரம்பரைச் சீமானுக்கும் இல்லாத அளவு சொத்து சேர்ந்தது என்பது விளக்கமாகிறது.

மன்னன், ரிஷ்லுவுக்கு, கொழுத்த வருமானமுள்ள தேவாலயங்களையும் ஜெமீன்களையும் வழங்கி இருந்தான்.

கார்டினல் பதவி மூலம் கிடைத்த வருமானம் சாமான்யமானதல்ல.

நார்மண்டி பகுதியிலே ரிஷ்லுவுக்கு இருந்த பண்ணை மட்டும் ஆண்டுக்கு அரை இலட்சம் பவுன் வருமானம் அளித்தது. இதுபோல் வளமான பண்ணைகள், பிரான்சிலே பல்வேறு இடங்களில் ஐந்து இருந்தன.

மேலும், அன்றைய ஆட்சி முறையின்படி, அரசாங்கக் காரியத்துக்காக வசூலிக்கப்படும் எல்லா தொகையிலும், ரிஷ்லு, ஒரு பகுதி சொந்தமாக்கிக் கொள்ளும் உரிமை இருந்தது. நமக்கு வேண்டாம் இது, என்று ரிஷ்லு கண்ணியம் பேசவில்லை!

புகழ் எப்படிக் குவிந்ததோ, அதைவிட வேகமாகச் செல்வம் ரிஷ்லுவிடம் குவிந்தது.

வீடு வாசல் தோட்டம் துரவு என்னும் அசையாப் பொருள்களை நீக்கி, பணமாக மட்டும், உயிலின்படி, உறவினர்களுக்கும் ஊழியர்களுக்குமாக ரிஷ்லு தந்த தொகை ஏறக்குறைய முப்பது இலட்சம் பிரன்ச்சு பவுன் என்றால் ரிஷ்லுவிடம் குவிந்திருந்த செல்வத்தின் அளவு எவ்வளவு என்பது ஒருவாறு விளங்கும்.

ஒவ்வொரு அரசியல் குழப்பமும் இலாபகரமான பதவியைத் தந்த வண்ணமிருந்தது, ரிஷ்லுவுக்கு.

மன்னனுக்கு மகிழ்ச்சி ஏற்படும்போதெல்லாம், ரிஷ்லுவுக்கு புதுப் பண்ணைகள் கிடைக்கும்.

பல பதவிகள் ஒரே காலத்தில்—ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனி வருமானம்! செல்வம் குன்றெனக் குவியத் தானே செய்யும்.

இவ்வளவு பெரும் பொருளைச் சேகரித்த ரிஷ்லு, வாழ்க்கையிலே ஆடம்பரமற்று, செலவின்றி இருந்தானோ எனில், அதுவுமில்லை; மாளிகைகள் பொருமைப்படும் செலவு.

பாதுகாப்புக்காக மட்டும் ஆயுதம் தாங்கிய காவலர்கள் நூறு பேருக்குமேல்—சம்பளத்துடன்.

பல்லக்கிலே சவாரி, பரிவாரம் சூழ!

மாளிகையிலே உயர்தரமான அலங்காரப் பொருள்கள்.

குதிரைக் கொட்டில்கள் இரண்டு, அவைகளில் உயர்தரமான குதிரைகள்.

மருத்துவர்கள், உடலை அவ்வப்போது கவனிக்க வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

நாட்டின் பிரபுக்களில் ரிஷ்லுவுக்கு வேண்டியவர்களுக்கு அடிக்கடி விருந்து வைபவம் நடத்திவைக்கப்படும்—செலவு தாராளமாக.

ரிஷ்லுவுக்கு ஆடை அணிவிக்க மட்டும் ஐந்து ஆட்கள்.

குறிப்புத் தயாரிப்போர், கடிதம் எழுதித் தருவோர், ஆகியவர்கள் மூவர்—நல்ல சம்பளம்.

ஆண்டொன்றுக்கு ரிஷ்லுவின் வீட்டுச்செலவு மட்டும், இன்றைய பிரன்ச்சு நாணய முறைப்படி 36,96,000 பிராங்குகள், என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ரிஷ்லுவைப் பேட்டி காண்பது மன்னனைக் காண்பதை விடக் கடினம் என்று கூறத் தக்க விதமான, ஆடம்பரம் இருந்து வந்தது.

காவலர்கள் ரிஷ்லுவைக் கண்ணிமைபோல் காத்து வந்தனர். பகலில் ரிஷ்லு, இருக்கும் அறையிலேயே ஆயுதம் தாங்கிய படை வீரர் காவலுக்கு இருப்பர். இரவில், பக்கத் தறையில் இருப்பர். துளி சத்தம் கேட்டாலும் எழுந்தோடி வரவேண்டும் என்று உத்தரவு. யாராவது ரிஷ்லுவைக் காணச் சென்றால், ஐந்து இடங்களில் படைவீரர்கள், வருபவர்களைச் சோதனையிட்ட பிறகே, ரிஷ்லு உள்ள அறைக்கு அழைத்துச் செல்வர், அங்கு, படைவீரர் காவலிருப்பர்.

கோலாகலமான வாழ்க்கைதான்—ஏராளமான செலவு—ஆடம்பரம்—எல்லாம், அரசுக்காக! பிரான்சுக்காக!

கார்டினல் ரிஷ்லு, குன்றெனக் குவிந்திருந்த செல்வத்தில் மன்னனுக்கும், உறவினருக்கும், அவனிடம் கைகட்டிக் காத்துக் கிடந்த ஊழியர்களுக்கும் தந்திருக்கிறானே தவிர, ஏதேனும் பொதுநலத் துறைக்கு, மக்கள் நலனுக்கு ஒதுக்கினானா என்றால், இல்லை! மக்களுக்காகவா, ரிஷ்லு வாழ்ந்தான்! அரசுக்காக! பிரான்சுக்காக!!

உயிலிலே, ஒரு புள்ளி விவரம் அவனுடைய உள்ளக் கிடக்கையை எடுத்துக் காட்டுகிறது. 30.000 ஒரு சீமானுக்குத் தரும்படி, குறிப்பு இருக்கிறது—" அவருக்குப் பணமுடை என்பது எனக்குத் தெரியும், ஆகவே அவருக்கு இந்த உதவித் தொகையைத் தருக," என்று கூறப்பட்டிருக்கிறது. கனிவு, எந்தத் திக்குக்கு என்பது விளங்குகிறது.

அரசுக்காக! பிரான்சுக்காக! என்ற சொற்களைத் திறம் படப் பயன்படுத்தி, கொடுமைகளைக் கூசாமல் செய்து, ஆதிக்க வெறியனாய் வாழ்ந்து, பெரும் செல்வத்தைச் சேகரித்துக்கொண்ட ரிஷ்லுவின், வாழ்க்கை முறையை, ஆதிக்கத்தைத் தேடி அலைபவர்கள். திருவாசகமென்று இன்றும் எண்ணுகின்றனர்.

ஓயாத உழைப்பு, கூர்மையான புத்தி, அளவற்ற ஆற்றல் எந்தத் துறையிலும் இணையற்ற சமர்த்து என்று பாராட்டுகின்றனர்.

உலகம், போட்டிப் பந்தய மேடை அல்ல—கூட்டுறவுச் சாலை, என்ற புனிதக் கோட்பாட்டை மதியாதார், இரும்புக் கரத்தினரை, ஈவு இரக்கமற்ற நெஞ்சினரை, அவர்களின் வெற்றிகண்டு, பாராட்டுவது, வாடிக்கையாகிவிட்டது.

மனிதனைச் சிங்கம் பிய்த்து எறிந்ததை, திராட்சைக் கொத்தைத் தின்றபடி இரசித்திடவில்லையா, ரோம் நாட்டு மமதையாளர்கள். பொது நோக்கு, பொது நலம், மக்கள் முன்னேற்றம் எனும் எதற்கும் பற்றுக் கொள்ளாது, சிறக்க வாழ வேண்டும், ஈடு எதிர்ப்பின்றி ஆட்சி செலுத்த வேண்டும், என்று முயன்று வெற்றிபெறுபவர்களைப் பாராட்டுவது, அது போன்றதேயாகும். மதத்துறைத் தலைவர்கள் உண்டு, அரசியல் துறைத் தலைவர்கள் இருக்கிறார்கள்—கார்டினல் ரிஷ்லு, மதத் துறையில் தலைமை பெறப் பணியாற்றியபடி இருந்து கொண்டே, அரசியல் துறையில் ஆதிக்கம் பெற்ற, ஒரு அபூர்வமான சர்வாதிகாரி.

பார்லிமெண்டுகளைப் பஜனை மடங்களாக்குவோர் உண்டு, பஜனை மடங்களில் பார்லிமெண்டு நடத்துவோர் உண்டு, இந்த ரிஷ்லு, பஜனை மடத்திலிருந்தபடியே பார்லிமெண்டுக்குத் தன்னைத் தயாரித்துக்கொண்டிருக்கும் தனி வழி கண்டறிந்து பயன் கண்டவன்.

மதத் துறையில் ஈடுபட்டு அதிலே மாசுகளைக் களைந்தெறிந்து, மாண்புகளைப் பெருகச்செய்து, அத்தகைய மார்க்கத்தின் மூலம் மக்கட் சமுதாயத்துக்கு உயர்வும் உய்யும் வழி

யும் கிடைத்திடச் செய்வதற்காகப் பணியாற்றிடும் பெரு நோக்குடையார் பலர் உண்டு—பலர் பணியாற்றிப் பலன் காணுது பதறினர்.

சிலர், மதத்துறையிலே பெருமளவுக்குச் செல்வாக்குத் தேடிக் கொண்டு, அந்தச் செல்வாக்கைக் காட்டி அரசுகளைப் பணிய வைக்கவும், ஆட்டிப் படைக்கவும், முயன்றனர்—வெற்றியும் கண்டனர்.

சில அரசியல் தலைவர்கள், அந்தத் துறையிலே தமக்குக் கிடைத்த செல்வாக்கைக் கொண்டு மதத்துறையிலேயும் தமது ஆதிக்கம் நுழையும்படி செய்து வெற்றி பெற்றனர்.

கார்டினல் ரிஷ்லு, இதுபோன்ற வகையினரில் ஒருவராக வில்லை—அவன் கண்ட வழியே தனி !!

ஆதிக்கம் பெறுவதற்கு, மதத்துறையைச் சிலர்போல் ஏணியாக்கிக் கொள்ளவில்லை—அரசியல் ஆதிக்கம் பெறு முன், மதத்துறையைச் சிறிது காலம் தங்குமிடமாகக் கொண் டான். மதத்துறையில் மிகுந்த செல்வாக்குப் பெற்றதால் அரசியல் துறையில் ஆதிக்கம் பெறலாம் என்பது பொதுவிதி யாளுல், போப்பாண்டவரல்லவா பிரான்சு நாட்டை ஆட்டிப் படைத்திருக்க வேண்டும். கார்டினல் ரிஷ்லுவின் கைப்பிடி யிலல்லவா, பிரான்சு சிக்கிற்று ! போப்பிடமல்லவே !!

அம்மட்டோ ! அந்தப் போப்பாண்டவரைக் கூட, ஒரு சம்பவத்தின்போது, இந்த ரிஷ்லு, 'உமது வேலையைப் பாரும் ! என் துறையிலே தலையிட வேண்டாம்' என்று கூறிட முடிந்தது !!

அரசுக்காக ! பிரான்சுக்காக ! என்ற சொற்றொடர்—ரிஷ்லு காலத்தில். இன்று ரிஷ்லுக்களாகலாமா என்று மனப் பால் குடிக்கும் சிலரும் அடிக்கடி அரசுக்காக ! நாட்டுக்காக ! என்று பேசி, மக்களை மயக்கவும், உலகை ஏய்க்கவும், எதிர்ப்பை ஒடுக்கவும் முடியும் என்று நம்புகிருர்கள்.

நாட்டுக்காக என்று கூறிக்கொண்டே, எந்த அக்ரமம் செய்தாலும் மக்கள் சகித்துக் கொள்வார்கள், என்று எண்ணு

வது ஏமாளித்தனம். ரிஷ்லுவால் முடிந்ததே! என்று கூற லாம்—மக்கள் பழிதீர்த்துக்கொண்டனர், காலம் பிடித்தது அதற்கு, எனினும் பழிதீர்த்துக் கொண்டனர்—ரிஷ்லுமீதல்ல, அவன் போற்றிவந்த அரசின் மீது!!

அரசு பலமடைய வேண்டும் என்று பேசப்படும்போது ஆமாம் என்று பதில் எளிதாகக் கிடைத்துவிடும்...ஆனால், எப்படி பலமடைவது என்ற கேள்வியும், எதற்காகப் பல மடைய வேண்டும் என்ற கேள்வியும், மக்கள் கேட்க ஆரம் பித்தால், ஆதிக்கவாதிகள் பதில் இறுக்க இயலாது.

அரசு, மக்களுக்கு நலம்தர ஒரு ஏற்பாடு என்ற இலட் சியத்தை மறந்து, நாட்டு மக்களின் உடைமை என்ற உண் மையை ஏற்காது, நாடு என்றால், அதிலே காணப்படும் விரல் விட்டு எண்ணத்தக்க பட்டுடை அணிந்த வீணர்கள் மட்டுமே என்று கருதி, அரசு என்றால், அவர்களின் வசதி கெடாதபடி மற்றவர்களைக் கண்காணித்து வருவதுதான் என்று தீர்மானித்து, ஆதிக்கம் புரிந்தவர்களால், அரசும் மேன்மையுறாது, நாடும் வளம் பெறாது.

ரிஷ்லுவுக்குத் தெரிந்த பிரான்சு, அங்கே செக்குமாடென உழைத்துக்கிடந்த பெரும்பான்மை மக்களல்ல.

மமதையால் மன்னனை எதிர்க்கக் கிளம்பும் சில பிரபுக் களும், வேற்று மார்க்கத்தவர் என்பதால் பிணங்கிக் கிடந்த சில பலரும், கீர்த்தி எனும் வெற்றுரைக்காக போர் மூட்டி விடும் வெறியர் சிலரும்தான், ரிஷ்லுவுக்குத் தெரிந்தனர்.

அரண்மனை, மாளிகை, ஆலயம், இவற்றோடு நாடு முடிந்துவிடவில்லை, வயல் இருக்கிறது, வாய்க்கால் இருக் கிறது, பாதை இருக்கிறது, பள்ளம் இருக்கிறது, தொழில் இருக்கிறது, துயரம் இருக்கிறது, இங்கு, இலட்ச இலட்சமாக ஏழைகள் உள்ளனர், உழைத்த வண்ணம். உழைக்கிறார்கள் வாழ முடியவில்லை, சாவை வரவேற்கிறார்கள், நிம்மதி பெற, அதனினும் சிறந்த மார்க்கம் வேறு இல்லாததால்! இந்தப் பிரான்சுக்கு அல்ல, ரிஷ்லு, முதலமைச்சரானது! அவனு

டைய பிரான்சு, மன்னன், அவனைச் சுற்றி வட்டமிடும் வல்லூறுகள், அவனுக்கு விளையாட்டுக்காகப் பறந்திடும் பொன்வண்டுகள், இவைகள் உள்ள, அரண்மனை, மாளிகை, பூம்பொழில், இந்த ஏற்பாட்டைப் பாதுகாக்க அமைந்துள்ள பாசறை, நீதிமன்றம், சிறைக்கூடம் இவை!

பிரான்சு, பெருமூச்சுவிட்டது, ரிஷ்லுவின் செவியிலே விழவில்லை—கேட்க மறுத்துவிட்டான்.

பிரான்சிலே, ஐந்தில் ஒரு பகுதி நிலம்—வயல்—மன்னனுக்குச் சொந்த உடைமை.

மற்றோர் பங்கு மத அலுவலருக்கு, பிறிதோர் பங்கு பிரபுக்களுக்கு, மிச்சம் இருந்ததை பொது மக்களுக்கு என்று விட்டு வைத்தனர். பொதுவளம், பொதுநலம், பொது அறம், எதுதான் தழைக்க முடியும்!

இந்த ஏற்பாடு சரியா, தவறு என்று ஆராய்வது கூடத் தேவையில்லை, என்று இருந்துகொண்டுதான் ரிஷ்லு, அரசுக்காக! நாட்டுக்காக! என்று பல்லவி பாடி ஆதிக்கம் செலுத்தினான்.

பிரபுக்களின் கொட்டத்தை அடக்கும்போதுகூட, அவர்கள், மக்களை மாடுகளாக்கி, வாழ்கிறார்கள் என்பதற்காக அல்ல! ரிஷ்லுவே பெரிய பெரிய பண்ணைகளுக்கு உரிமையாளராகிவிட்டானே! ஏழை உழவனின் வியர்வையும் கண்ணீரும் கலப்பது பற்றிக் கவலை ஏன் பிறக்கும்!

உழவன், பிரபுவிடம் அடிமைப்பட்டுக் கிடந்தான். கூப்பிட்டபோது ஓடி வேலை செய்யவேண்டும். கேட்ட வரியைத் தந்தாக வேண்டும். வரி, மட்டுமா? எதையும்!

பிரபுவின் இயந்திரத்தில்தான் அவன் மாவு அரைத்துக் கொள்ளவேண்டும்.

அவருடைய பறவைகள் உழவன் வயலிலே புகுந்து கதிர்களைக் கொத்தும், அவன் அவைகளை விரட்டக் கூடாது.

அவர்கள் அமைத்த நீதி மன்றத்தில் உழவன், கைகட்டி நிற்க வேண்டும், அவர் சொல்வதுதான் சட்டம்!

உழவன், விளைந்ததை விற்றுத் தேவையானதைப் பெற்று வரலாம் என்று கிராமத்தை விட்டுக் கிளம்பி சந்தை கூடும் இடம் போவான், வழியிலே, சீமான்களின், சுங்கச் சாவடி இருக்கும், வரிகட்டினால்தான், போக அனுமதி.

இவ்வளவும் இவைகளின் விளைவாகவும் கொடுமைகள் மலிந்துகிடந்தன. அறிவாற்றல் படைத்த, எடுத்த செயலை முடித்தே தீருவதிலே வல்லமை பெற்ற ரிஷ்லு, என்ன செய்தான்? சிறு விரலையும் அசைக்க வில்லை.

மத அலுவலர்களின் போக்கோ—பிரபுக்கள் பயிற்சி பெறவேண்டிய கல்லூரியாக இருந்தது.

பட்டிக்காட்டு உழவன் விளைவதில் பத்திலோர் பாகத்தை 'காணிக்கை'யாகத் தந்துவிடவேண்டும்-இந்தக் காணிக்கை பல கிராமங்களிலே சேகரம் செய்யப்பட்டு, ஒரு தேவாலய அதிபருக்கு போய்ச் சேரும். மதச்சடங்குகளின் போதெல்லாம், 'வரி' கட்டவேண்டும். முணுமுணுக்கக் கூடாது, கணக்குப் பார்த்தலாகாது, புண்யம் கிட்டாது. தேவாலயம் அருளாலயம், என்பன போன்ற திருப் பெயர்களைத் தாங்கிக் கொண்டிருந்த மத அமைப்புக்கு, தானமாகக் கிடைத்த நிலங்களிலிருந்து மட்டும் 100,000,000 பிரன்ச்சு பவுன் வருமானம் கிடைத்து வந்தது.

இந்தப் பெருந்தொகை, அஞ்ஞானத்தை விரட்ட, சன்மார்க்கத்தை நிலைநாட்ட, பயன்பட்டதா? கேட்பதே, பாபம்.

சீமான்களுக்கு, ஜெமீன்கள் பண்ணைகள் இருப்பது போல, இந்த அருளாலயங்களுக்கும் உண்டு. வருமானத்தை அவர்கள் களியாட்டத்திலே செலவிடுவர், அவர்களிடம் சிறு தொகை ஊதியம் பெற்றுக்கொண்டு, பூஜாரி, கர்த்தரின் பெருமையைக் கழனி ஆண்டிக்கு எடுத்துக் கூறி வருவான்.

புரட்சியின் போது தொகுக்கப்பட்ட புள்ளிவிவரத்தின் படி, மத அமைப்புகளின் மொத்த ஆண்டு வருமானம் 170,000,000 என்று கணக்கிட்டனர்!

வரி தரமாட்டார்கள் மத அலுவலர்கள்! "எமது வாயைத் திறப்போமே தவிர கையைத் திறக்க மாட்டோம்" என்று ஒரு மத அலுவலர் கூறினார், ஒரு சமயத்தில். இன்னொருவர், "மக்கள் பொருள் தருகிறார்கள், பிரபுக்கள் வீரத்தைத் தருவர், நாங்கள் ஜெபம் தருகிறோம்" என்று கூறினாராம்.

பண நெருக்கடியின் போது ஒரு முறை, ரிஷ்லு முயன்று பார்த்தார், மதஅலுவலர்களிடமிருந்து வரிவசூலிக்க. பிடிவாதமாக மறுத்துவிட்டனர் எதிர்ப்பு வலுத்தது. இந்த ஆபத்தான வேலை வேண்டாமென்றோ, இனம் இனத்தைக் காக்கும் போக்கிலேயோ ரிஷ்லு, மேலால் வலியுறுத்த வில்லை. அவர்களாகத் தந்த 'தொகை'யை நன்றிகூறிப் பெற்றுக் கொள்வதுடன், அந்த அத்யாயத்தை முடித்துக் கொண்டான்.

ஐந்தாண்டுக்கு ஒரு முறை மத அலுவலர்கள், தாமாக, மனமுவந்து ஏதேனும் 'தொகை' தருவர், அரசர் அந்தத் தேவப் பிரசாதத்தை மதிப்புடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பிரபுக்களுக்குத் தனித்தனி தர்பார் இருந்தது—எனவே அவர்களும் அரசுக்கு வரி செலுத்த மாட்டார்கள்.

ஆக, அரசுக்கு வரி செலுத்தும் பெரும்பாரம், ஏழையின் முதுகிலே விழுந்தது.

அரசுக்காக! நாட்டுக்காக! என்று பாடிய ரிஷ்லுவுக்கு இந்த நிலைமைகளைத் திருத்த வேண்டும் என்றும் தோன்ற வில்லை. அறிவும் ஆற்றலும், அரசனுக்குப் பொழுதுபோக்குத் தேடித்தர உதவிற்று, ஏழை அழுத கண்ணீரைத் துடைக்க அல்ல.

நீதிமன்றங்கள், பிரான்சில் பலரகம்!

அரச நீதி மன்றங்கள், பிரபுக்களின் நீதி மன்றங்கள், மத நீதி மன்றங்கள் என மூன்று வகை—இதற்குள் உட்பிரிவு

வகைகள் ஏராளம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொருவிதச் சட்டம்—எப்போது எந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்பது ஏழைக்கு விளங்கவே முடியாத புதிராக இருந்தது. இந்தப் புதிர், எண்ணற்ற வழக்கறிஞர்களுக்குக் கொழுத்த வேட்டை தந்து வந்தது. 360 வகையான சட்ட முறைகள் இருந்ததாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவைகளில் எதனையும் மாற்ற, திருத்த, மக்களுக்கு உகந்ததாக்க ரிஷ்லு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

அரசர், வரிவசூலிக்க பிரான்சு முழுவதுக்கும் மொத்தமாக அறுபது பேரை நியமிப்பார். அவர்கள் ஆறு ஆண்டுகள் அதிகாரம் புரிவர். மன்னனுக்கு முன்னதாகக் குறிப்பிட்ட தொகையைக் கட்டிவிடுவர். இப்படி வரிவசூலிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டது; அகப்பட்ட வரையில் இலாபம் என்று அவர்கள் ஏழைகளைக் கசக்கி பிழிந்தனர். ரிஷ்லுவின் ஒளிவிடும் கண்களில் இந்த அக்ரமம் படவில்லை!

விருந்தொன்றின்போது, ஒவ்வொருவரும் பொழுது போக்குக்காக, கொள்ளை அடிப்பவர்களைப் பற்றி விதவிதமான கதைகள் கூறினர்களாம். அந்த விருந்திலே வால்டேர் இருந்தாராம். அவரையும் ஒரு கொள்ளைக்காரன் கதை கூறச் சொல்லி வற்புறுத்தினர்களாம், அவர், 'ஒரே ஒரு காலத்தில் வரி ஏல அதிகாரி ஒருவன், இருந்தான். அவ்வளவு தான்!'' என்று கதையை முடித்துவிட்டாராம். கொள்ளை அடிப்பவர்கள் எல்லாரையும் மிஞ்சக்கூடிய கொள்ளைக்காரன் இந்த வரி ஏல அதிகாரி என்பதைச் சுவைபட வால்டேர் சொன்னர். ரிஷ்லு இது அக்ரமமுறை என்று உணரவில்லை.

எந்தத் துறையைக் கவனித்தாலும், அநீதி தாண்டவமாடிற்று, அக்ரமம் தலைவிரித்தாடிற்று, எதையும் திருத்த ரிஷ்லு முயலவில்லை. அரசுக்காக! பிரான்சுக்காக! என்று மட்டும் பேசினன். இவ்விதமான அநீதிகளை வைத்துக் கொண்டு, எந்த அரசுதான் நிலைக்க முடியும், எந்த நாடு பிழைக்க இயலும்!

எனவேதான், புரட்சி கிளம்பிற்று—பிரான்சு, புடம் போட்ட தங்கமாவதற்கு! மக்களுக்காக அரசு! மக்களுக்காக பிரான்சு! என்ற முழக்கமிட்டானர், புரட்சிவீரர்கள்.

அறியாமல் செய்த ஒரு நன்மை உண்டு, ரிஷ்லுவால்!

கோட்டை கொத்தளங்களை அமைத்துக்கொண்டு, கொடிகட்டி ஆண்ட பிரபுக்களின் கொட்டத்தை அடக்கி அவர்களுடைய இராணுவ பலத்தை ஒடுக்கி விட்டான் ரிஷ்லு. மக்கள் பிரான்சிலே மாபெரும் புரட்சி செய்த போது, அவர்களை எதிர்க்கும் சக்தியை, பிரபுக்கள் பெற முடியாதபடி இது, செய்தது.

எல்லா அதிகாரங்களையும் அரசனிடம் குவித்து வைத்ததும், புரட்சிக்கு மறைமுகமாக உதவி செய்தது.

மன்னனுடைய மணிமுடி ஒளிவிட வேண்டுமென்று, ஏழையின் இரத்தத்தை அபிஷேகம் செய்வித்து அரசாட்சி புரிந்தான் ரிஷ்லு, மக்கள்பதிலளிக்க நெடுங்காலம் பிடித்தது. அவர்கள் தந்த பதிலோ, பயங்கரமானது, மன்னனின் தலையை வெட்டிக்காட்டி, முழக்கமிட்டனர். மக்களுக்காக பிரான்சுக்காக!! என்று.